உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
பக்கங்கள் - 28
விலை - 30 ரூபா
சுடர் 34 கதிர் 335 ஐப்பசி 13 ஆம் நாள் புதன்கிழமை 30 ஒக்ரோபர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050



## வவுனியா வருகிறார் சஜித்

வவுனியா, ஒக்.30
புதிய ஜனநாயக முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச இன்று வவுனியா வரவுள்ளார்.
வவுனியா, வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் 25

## தடை உத்தரவு நீடிப்பு

கொழும்பு, ஒக். 30
சாவுத் தண்டனையை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக பிறப்பிக்கப்பட்டிருந்த இடைக்கால தடையுத்தரவு, நீடிக்கப்பட்டுள்ளது.
டிசெம்பர் 10 ஆம் திகதி வரை குறித்த இடைக்கால தடையுத்தரவை நீடிப்பதாக உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. (ஒ.5)

## நம்பி வாக்கிடுங்கள் என கோத்தா வேண்டுகோள்

கொழும்பு, ஒக்.30
அரச தலைவர் தேர்தல் பரப்புரைக் கூட்ட மேடைகளில் என்னால் வழங்கப்படும் வாக்குறுதிகள் அனைத்தையும் ஆட்சிக்கு வந்தவுடன் நிறைவேற்றுவேன். இது உறுதி. என்னை நம்பி அனைத்து மக்களும் எனக்கு வாக்களிக்க வேண்டும்.
இவ்வாறு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.
பிபிலை நகரில் நேற்று நடைபெற்ற சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தேர்தல் பரப்புரைக் கூட் 25

# அக, புறச் சூழல்களை ஆராய்ந்து தமிழ் மக்கள் வாக்கிட வேண்டும்

### த.ம.கூட்டணியின் பொதுச் செயலர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.30
அரச தலைவர் தேர்தலில் எந்த ஒரு சிங்கள வேட்பாளருக்கும் வாக்களிக்கும்படி எமது விரலால் சுட்டிக்காட்ட முடியாது. கடந்த கால வரலாற்றையும், தற்போதைய அக, புறச் சூழ்நிலைகளையும் கருத்தில் எடுத்து மக்கள் தமது ஜனநாயக உரித்தைப் பயன்படுத்த வேண்டும். 25

## தாயின் விபரீத முடிவால் இரு குழந்தைகள் சாவு

### தாய் மருத்துவமனையில் வவுனியாவில் சோகம்

வவுனியா, ஒக்.30
வவுனியா, நெடுங்கேணி பட்டிக் குடியிருப்பில் இரு சிறார்கள் கிணற்றில் வீசப்பட்டு உயிரிழந்துள்ளனர். சிறார்களின் தாய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
தமிழகத்தில் ஆழ்துளைக் கிணற்றில் விழுந்து இரு வயதுச் சிறுவன் உயிரிழந்த அதிர்வலைகள் அடங்க முன்னர் வவுனியாவில் இந்தச் சோகச் சம்பவம் நடந்துள்ளது.
சிறார்களின் தாயே 25

## கட்டுப்பணத்தை கையளிக்க கோரியவர்களுக்கு ஏமாற்றம்

யாழ்ப்பாணம், ஒக்.30
அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்காகக் கட்டுப்பணம் செலுத்தியபின்னர் வேட்பு மனுத் தாக்கல் செய்யாத கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் பணத்தை மீளளிப்பதில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.
அடுத்தமாதம் நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்காக 41 பேர் கட்டுப்பணம் செலுத்தியிருந்தனர். அவர்களில் 35 பேர் மட்டுமே வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்தனர். வேட்பு மனுத் 25

## பௌத்த மதத்துக்கு ஆபத்து என உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல்

கொழும்பு, ஒக்.30
தமிழ் அரசியல் கட்சிகள் முன்வைத்துள்ள 13 அம்சக் கோரிக்கைகளில் பௌத்த சின்னங்களை அகற்றுவது தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் வடக்கு, கிழக்கில் உள்ள விகாரைகள் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. பௌத்த விகாரைகள், தொல்பொருள் அடையாளமிடப்பட்ட இடங்களைப் பாதுகாப்பதற்கு அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று தெரிவித்து உயர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
தொல்பொருள் மண்ட 25

## மன். மடுத் தேவாலயப் பகுதி புனித பிரதேசமாக அறிவிப்பு

### உறுதிப் பத்திரத்தை ஆயரிடம் கையளித்தார் மைத்திரிபால

யாழ்ப்பாணம், ஒக்.30
மன்னார் மடுத் தேவாலயப் பகுதி புனிதப் பிரதேசமாக அறிவித்து வெளியிட்ட அறிவித்தல் நேற்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் மன்னார் ஆயர் இம்மானுவேல் பெனாண்டோவிடம் ஒப்படைக்கப்பட்டது.
மடுத் தேவாலயப் பகுதியைப் புனித பிரதேசமாகப் பிரகடனம் செய்ய எடுக்கப்பட்ட முயற்சியை அடுத்துத் தொல்லியல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் புனித பிரகடனமாக பிரகடனப்படுத்தும் ஆவணம் நேற்று வெளியிடப்பட்டது.
அந்த ஆவணத்தில் 5 ஆயிரம் ஏக்கர் உள்ளடக்கப்பட்டுள்ள போதும், 300 ஏக்கர் நிலம் அபிவிருத்திப் பணி என்றும், எஞ்சியவை திருவிழாக் காலத்துக்கான புனித பிரதேசமாகவும் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.
இந்த ஆவணம் கையளிக்கும் நிகழ்வில் மன்னார் மாவட்டச் 25



## எம தர்மராஜா ஆட்சியின் எம தூதுவர் கோத்தாவே!

### பொன்சேகா கடும் தாக்குதல்

கொழும்பு, ஒக்.30
2015ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கை நரகமாகவே காணப்பட்டதே அன்றி நாடாக இருக்கவில்லை. அந்த நரகத்தில் காணப்பட்ட எம தர்மராஜா ஆட்சியின் எமதூதுவராகவே கோத்தபாய ராஜபக்ச காணப்பட்டார். அந்த நரகம் மீண்டும் உருவாகிவிட இடமளித் 04

## காலாவதியான பொருள்கள் எரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு

### பண்ணைப் பகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.30
யாழ்ப்பாணம், பண்ணைப் பகுதியில் குடிமனைகளுக்கு அருகில் உள்ள வடக்கு மாகாண சுகாதார அமைச்சு அலுவலக வளாகத்தில் காலாவதியான மருந்துப் பொருள்கள் தீயிட்டு எரிக்கப்பட்டமையைக் கண்டித்து நேற்று அந்தப் பகுதி மக்கள் போராட்டம் நடத்தினர்.
நேற்றுமுன்தினம் இரவு அந்த வளாகத்தில் உள்ள குழியில் இட்டு காலாவதியான மருந்துப் பொருள்கள் எரிக்கப் 25



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள்!

## 2019 — 2020

குரு பகவான் ஒரு ராசியில் இருந்து அடுத்த ராசிக்கு செல்வதற்கு 13 மாதங்கள் அல்லது ஒரு வருடம் ஆகும். இப்படி ஒரு ஆண்டுக்கு ஒருமுறை நிகழக்கூடிய குரு பெயர்ச்சி இந்த வருடம் 29.10.2019 அன்று நிகழ்கிறது. விகாரி வருடம் ஐப்பசி மாதம் 12ஆம் நாள் செவ்வாய்க்கிழமை, வாக்கிய பஞ்சாங்கப்படி, விருச்சிகம் ராசியில் இருந்து தனுசு ராசிக்கு மாறுதலாகிச் செல்கிறார். குரு பகவான் தனுசு ராசியில் 14.11.2020 வரை சஞ்சாரம் செல்கிறார். குரு பார்க்க கோடி நன்மை என்றும், கோடி தோஷம் விலகும் என்றும் நம்பப்படுகிறது. குரு பெயர்ச்சியினால் நன்மைகள் நடக்கும் என்று பொதுவாக நம்பலாம்,



## தனுசு



**ஆரோக்கிய குறைவையும் வேலைச்சுமையையும் தந்தாலும் அனுபவ அறிவையும், தன்னை தானே உணரும் சக்தியையும் தரும்.**

எல்லோரும் பயந்து பின்வாங்கும் செயல்களைத் தானாக முன்வந்து தைரியமாகச் செய்யும் ஆற்றலுடைய நீங்கள், தன்னை நாடி வருபவர்களுக்கு மறுக்காமல் உதவுபவர். எப்போதும் நியாயத்துக்காகப் போராடும் நீங்கள், மனசாட்சியை முக்கிய சாட்சியாக நினைப்பீர்கள்.

உங்களின் ராசிக்கு 12ஆம் வீட்டில் அமர்ந்து உங்களுக்கு வீண் அலைச்சல், விரயச் செலவுகளைத் தந்துகொண்டிருந்த குரு பகவான் 29.10.2019 முதல் 13.11.2020 வரை உங்கள் ராசிக்குள் நுழைந்து ஜன்ம குருவாக ஆட்சி பெற்று அமர்வதால் பொறுப்புகளும், வேலைச்சுமையும் அதிகரிக்கும். அதிகாரமுள்ள பதவியில் இருப்பவர்கள் ஆதரிப்பார்கள்.

ஜன்ம குருவாக இருப்பதால் அவ்வப்போது முன்கோபம் வரும். குருதி அழுத்தம் அதிகமாக வாய்ப்பிருப்பதால், உணவில் உப்பைக் குறையுங்கள். வெளி உணவுகளைத் தவிர்ப்பது நல்லது.

உங்களின் குடும்ப விடயத்தில் மற்றவர்கள் தலையிட அனுமதிக்காதீர்கள். கணவன், மனைவிக்குள் வீண் வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகளின் எதிர்பார்ப்புகள் அதிகமாகிக் கொண்டே போகும்.

யாருக்கும் பணம், நகை வாங்கித் தருவதில் முன்னால் நிற்க வேண்டாம். உங்கள் இயல்புக்கு மாறான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம். திடீரென்று அறிமுகமாகுபவரை நம்பி முடிவுகள் எடுக்க வேண்டாம்.

குருபகவானின் பார்வைப் பலன்கள்:
குரு உங்கள் ராசிக்கு 5ஆம் வீட்டைப் பார்ப்பதால் குழந்தை பாக்கியம் சிலருக்குக் கிடைக்கும். பூர்வீக சொத்துப் பிரச்சினைகள் கொஞ்சம் கொஞ்சமாகத் தீரும்.

தியானம், பொதுச்சேவையில் மனம் ஈடுபாடு கொள்ளும். மகளுக்கு நல்ல வரன் அமையும்.

குரு 7ஆம் வீட்டைப் பார்ப்பதால் தள்ளிப்போன திருமணம் கை கூடி வரும். போட்டிகளில் வெற்றிபெறுவீர்கள். கணவன், மனைவிக்குள் சச்சரவு இருந்தாலும் பாசம் குறையாது.

குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:
29.10.2019 முதல் 31.12.2019 வரை குரு பகவான் கேதுவின் நட்சத்திரமான மூலம் நட்சத்திரத்தில் செல்வதால், வேலைச்சுமை அதிகரிக்கும். உங்களின் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். எதிர்பார்த்தவை தாமதமானாலும், எதிர்பாராத சில வேலைகள் விரைந்து முடியும்.

சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை உணர்வீர்கள். சிலர் சொந்தமாகத் தொழில் தொடங்குவீர்கள். யோகா, தியானத்தில் மனம் லயிக்கும்.

1.1.2020 முதல் 5.3.2020 வரை மற்றும் 31.7.2020 முதல் 18.10.2020 வரை உங்களின் சஷ்டமாதிபதியும் லாபாதிபதியுமான சுக்கிரனின் பூராடம் நட்சத்திரத்தில் குரு பகவான் செல்வதால் உங்களின் செயலில் வேகம் கூடும். எதிரிகளை வீழ்த்துவீர்கள். பழைய கடன் பிரச்சினை கட்டுக்குள் வரும். வீடு, வாகன வசதி பெருகும். பணப்புழக்கம் அதிமாகும்.

6.3.2020 முதல் 27.3.2020 வரை மற்றும் 19.10.2020 முதல் 13.11.2020 வரை குரு பகவான் உங்களின் பாக்கியாதிபதியான சூரியனின் நட்சத்திரமான உத்திராடம் 1 ம் பாதத்தில் செல்வதால் உங்களுடைய நிர்வாகத் திறன், ஆளுமைத் திறன் அதிகரிக்கும். அரசால் அனுகூலம் உண்டு. தந்தையின் ஆரோக்கியம் சீராகும்.

**மகரத்தில் குரு பகவான்:**
28.3.2020 முதல் 6.7.2020 வரை குரு பகவான் உங்கள் ராசிக்கு 2 ம் வீடான மகர ராசியில் அதிசாரமாகியும், வக்கிரமாகியும் அமர்வதால் திடீர் யோகம், பணவரவு, மகிழ்ச்சியெல்லாம் உண்டாகும். குடும்பத்தில் நிலவி வந்த கூச்சல், குழப்பங்கள் விலகும். கட்டட வேலைகளைத் தொடங்குவீர்கள். வங்கிக் கடனுதவியும் கிட்டும்.

**குருபகவானின் வக்ர சஞ்சாரம்:**
7.07.2020 முதல் 30.7.2020 வரை உள்ள கால கட்டத்தில் உத்திராடம் 1ஆம் பாதம் தனுசு ராசியில் குரு வக்கிரமடைவதால் எதிர்பார்ப்புகள் தடையின்றி நிறைவேறும். வழக்கில் வெற்றிபெறுவீர்கள். ஊர் பொது காரியங்களை முன்னின்று நடத்துவீர்கள்.
31.7.2020 முதல் 10.09.2020 வரை பூராடம் நட்சத்திரத்தில் குரு வக்கிர கதியில் செல்வதால் கணவன், மனைவிக்குள் வீண் வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நல்லது. வெளிவட்டாரத்தில் மறைமுக எதிர்ப்புகள் அதிகமாகும். புது பதவிகளை யோசித்து ஏற்பது நல்லது.

**வியாபாரிகளுக்கு:**
வியாபாரத்தில் ஆழம் தெரியாமல் காலை விடாதீர்கள். புதிதாக வரும் போட்டியாளர்களுக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறுவீர்கள். புதிய முடிவுகளோ, முதலீடுகளோ வேண்டாம். தெரியாத தொழிலிலும் இறங்க வேண்டாம். கூட்டுத்தொழில் வேண்டாம்.

**அலுவலர்களுக்கு:**
நாளுக்கு நாள் வேலைச்சுமை கூடிக்கொண்டே போகும். அலுவலக ரகசியங்களை வெளியே சொல்லவேண்டாம். உங்களின் திறமையை பயன்படுத்தி வேறு சிலர் முன்னேறுவார்கள். குறைகளை நேரடி அதிகாரி சுட்டிக் காட்டினால் திருத்திக்கொள்ளுங்கள். பதவி உயர்வு, சலுகைகள், சம்பள உயர்வைப் பெற போராட வேண்டி இருக்கும்.

**மாணவர்களுக்கு:**
மாணவ, மாணவிகள் டி.வி., சினிமாவையெல்லாம் விட்டுவிட்டுப் படிப்பில் முழுகவனம் செலுத்துங்கள். மறதியால் மதிப்பெண் குறையும் வாய்ப்புள்ளதால் ஒருமுறைக்கு இருமுறை எழுதிப் பழகுங்கள். அறிவியல், கணித சூத்திரங்களையெல்லாம் எழுதிப் பார்ப்பது நல்லது.

**பெண்களுக்கு:**
பெண்கள் யதார்த்தமாகவும், விளையாட்டாகவும் எதையோ சொல்லப் போய் அதைச் சிலர் பெரிதாக்கிக் கொள்ள வாய்ப்பிருக்கிறது.

**கலைத்துறையினருக்கு:**
கலைத்துறையினர் விமர்சனங்களை ஏற்று திருத்திக்கொள்ளுங்கள். உங்களின் படைப்புகளைப் போராடி வெளியிட வேண்டி வரும். இந்த குரு மாற்றம் ஆரோக்கிய குறைவையும் வேலைச்சுமையையும் தந்தாலும் அனுபவ அறிவையும், தன்னை தானே உணரும் சக்தியையும் தரும்.

இந்தக் காலத்தில் குரு பகவானின் சஞ்சாரம் மத்திம அளவில் பலன்களை தரும் விதத்தில் உள்ளபடியால் வியாழக்கிழமைகளில் மஞ்சள் நிறம் கொண்ட பூக்களை கொண்டு இறை வழிபாட்டை செய்து வாருங்கள். அதே போல, வாய்ப்பு கிடைத்தால் சதுர்த்தி தினங்களில் விநாயகருக்கு விரதம் இருக்கலாம். ராகு காலத்தில் துர்க்கையை அரளி சாற்றி வழிபட்டு வருவதும் நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்பு இன்று

யாழ்ப்பாணம், ஒக். 30
அச்செழு சைவப்பிரகாச வித்தியால யத்தின் பரிசளிப்பு இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் சு.மோகனராஜன் தலைமையில் இடம்பெறும். முதன்மை விருந்தினராக ஏவி ஆர் அறக்கட்டளை தலைவர் பொ.சிவகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.(ஓ,5)

# செய்யும் செயலில் அவதானம் வேண்டும்



ஓர் ஊரில் ஒரு இளம் பெண் பால் விற்று சீவியம் செய்து வந்தாள். அவள் தினமும் தன்னிடம் இருந்த ஒரு பசு மாட்டிலிருந்து பாலைக் கறந்து அதை ஒரு குடத்திலிட்டு தன் தலையில் வைத்து எடுத்துச் சென்று வியாபாரம் செய்து வந்தாள்.
தான் ஏழையாக இருப்பதனாலே இப்படி தினமும் பால் விற்று வாழ வேண்டி உள்ளது. என் போன்ற மற்றப் பெண்களெல்லாம் விதம் விதமாக ஆடை அணிந்து எடுப்பாகச் செல்கிறார்களே என தன்னுள் கவலையுடன் இருந்தாள்.
ஒருநாள் அவள் வழமைபோல் பாலைக் கறந்தெடுத்து குடத்தினுள் விட்டு அதனை விற்பதற்காகத் தெரு வீதி வழியே சென்று கொண்டிருந்தபோது தன் வாழ்க்கைத் தரத்தை எப்படி முன்னேற்றலாம் எனக் கற்பனை செய்தாள்.
இன்று பாலை விற்று வரும் பணத்தில். சில கோழிக் குஞ்சுகள் வாங்குவேன். அவை வளர்ந்து பெரிதானதும்..அவைகளை விற்று வரும் பணத்தில் இரண்டு ஆட்டுக் குட்டிகள் வாங்குவேன். அவை வளர்ந்ததும் அவற்றை விற்று இன்னொரு பசு மாடு வாங்குவேன். அவற்றைக் கொண்டு ஒரு பெரிய மாட்டுப் பண்ணை வைப்பேன். அதில் வேலை செய்ய பல பெண்களை வேலைக்கு அமர்த்துவேன்.
வருமானம் பெருகவே பலவிதமான ஆடை அணிகளையும் நகைகளையும் வாங்கி அவற்றை அணிந்து கொண்டு மற்றப் பெண்கள் எல்லாம் என்னைப் பார்த்து அதிசயிக்கக் கூடியதாக உல்லாசமாக இப்படி நடப்பேன் எனத் தலையில் பால் குடம் இருந்ததை மறந்து அதைப் பிடித்திருந்த கையை எடுத்து விசுக்கி நடக்க ஆரம்பித்தாள்.
என்ன பரிதாபம்! அவள் நடந்த நடையில் தலையில் இருந்த அனைத்து பாலும் கீழே கொட்டியது. குடமும் உடைந்தது அவளுக்கு அன்றைய பால் வியாபாரம் நட்டமடைந்ததுடன் பால் குடமும் வேறு வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.
அப்போதுதான் அவள், எந்த ஒரு காரியமும் நடந்து முடிக்கும் முன், அதை எண்ணி திட்டங்கள் போடக் கூடாது என்பதை உணர்ந்தாள்.
எந்த ஒரு செயலில் ஈடுபட்டாலும்.. அதை முதலில் கவனமாக முடிக்க வேண்டும். இடையில் வேறு நினைவுகள் வந்தால் நட்டமே.

# செம்புள்ளியும், கரும்புள்ளியும்!

சூரியனில் அடிப்படையாகவே பல கரும்புள்ளிகள் உள்ளன. இதைப் பார்த்தவர் எவரேனும் உண்டா? சாதாரணமாக, சூரியனைக் கண்களால் நேரடியாகப் பார்க்க இயலுவதில்லை. இந்த நிலையில் கரும்புள்ளிகள் எங்கே காண்பது, எப்படித்தான் எண்ணுவது என்கிறீர்கள் அல்லவா? நல்ல கெட்டியான ஒரு அட்டையில் மிகச் சிறிய துளை ஒன்றினைச் செய்து அதன் மூலம் சூரியனைக் கவனித்தால் இச்சிறு புள்ளிகளில் புலப்படும். நிழல் போலக் கறுப்பாகத் தெரியும் இப்புள்ளிகள் சூரியனின் குளிர்ச்சி மிகுந்த பகுதிகளைக் குறிப்படுபவை ஆகும்.
இயல்பான சூரியனின் வெப்பம் 4600டு அளவுகள் எனக் குறிப் பிடப்படுகின்றன. அவ்வாறென்றால் இந்தப் புள்ளிப் பகுதிகள் 3700டு அல்லது அதற்கு கீழாக இருப்பதுண்டு என்கின்றனர். இந்தச்சூரியப் புள்ளிகளை ஆயிரத்து 611ஆம் ஆண்டு இத்தாலிய நாட்டு விஞ்ஞானி கலிலியோ கண்டறிந்தார். சூரியனைப்போல சந்திரனிலும் குளிர்ந்த மலைப் பகுதிகள்தான் ஒரு நிழல் போலத் தெரிகின்றன என்கின்றனர். இதனையே அழகிய முழுமதியில் களங்கம் என்கின்றனர் நம் புலவர்கள். சந்திரனை ராகு விழுங்கியதன் அடையாளம் என்கின்றனர் ஜோதிட நூலார். நிலாவில் குடியிருக்கும் கூனிக்கிழவி எனக் குறிப்பட்டு தன் கைக்குழந்தைக்கு உணவூட்டுகிறாள் அன்னை.




ஜனாதிபதித் தேர்தல் 2019

தபால் மூல வாக்காளர்களுக்குப் பணிவான வேண்டுகோள்

**அன்பான சகோதர சகோதரிகளே வணக்கம்!**

ஒரு தமிழர் இலங்கையின் ஜனாதிபதியாக வருவதைக் கனவிலும் காணமுடியாது. நீங்கள் கேட்கலாம் - அவ்வாறாயின் நீர், ஏன் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றீர்? எனக் கேட்கலாம்.

தமிழர் தாயகத்தைச் சேர்ந்த வணக்கத்திற்குரிய மதத் தலைவர்கள், புத்திஜீவிகள், சிவில் சமூகப் பிரமுகர்கள் எனப் பலரும் ஒன்றிணைந்து ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். எனினும் அந்த முயற்சி இறுதி நேரத்தில் தோல்வியடையும் நிலைமை ஏற்பட்டது. இவ்வாறானதொரு சூழலில் அந்த முயற்சி தோல்வியடைந்து விடக்கூடாது, அவர்களின் உழைப்பு வீணாகிவிடக் கூடாது என்பதற்காக நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்.

பிரதான சிங்கள வேட்பாளர்கள் எவருமே தமிழ் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகள் எதனையுமே ஏற்றுக்கொள்ளாத நிலையில், தமிழ் மக்களாகிய நீங்கள் தென்னிலங்கைக்கும், சர்வதேசத்திற்கும் ஒரு தெளிவான செய்தியைச் சொல்ல வேண்டியிருக்கின்றது. அதற்கான ஒரு வரலாற்று வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்திருக்கின்றது. இதனை நீங்கள் தவறவிடமாட்டீர்கள் என்பதை நான் உறுதியாக நம்புகின்றேன். என்னை மறந்துவிடுங்கள். நான் உங்கள் முன்னால் ஒரு வெறும் குறியீடு மட்டுமே. தமிழ்த் தேசியத்தை மட்டும் மனதில் நிறுத்தி வாக்களியுங்கள். **மீன் சின்னத்திற்கு** நீங்கள் போடும் ஒவ்வொரு புள்ளடியும் தமிழ்த் தேசியத்தை காப்பாற்றுவதற்கான உங்கள் திடசித்தமாகும். நாம் எமது வாக்குகளால் சிங்கள தேசத்திற்கும், சர்வதேசத்திற்கும் எமது நிலைப்பாட்டைச் சொல்லுவோம். எங்களுடைய உரிமைகளை ஏற்றுக்கொள்ளாத உங்களுக்கு எங்களுடைய வாக்குகளைத் தரமாட்டோம் என்பதை உரத்துச் சொல்வோம். சிங்கள தேசத்தின் தேர்தலை தமிழர் தேசத்திற்கான தேர்தலாக மாற்றுவோம்.

எம்.கே. சிவாஜிலிங்கம்

தமிழ்ப் பொது வேட்பாளர்

விளம்பர அனுசரணை : புலம்பெயர் வாழ் ஈழத் தமிழர்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிறந்தநாள் நினைவலைகள்

மலர்வு 30 . 10 . 1985



உதிர்வு 18 . 05 . 2018

## அமரர் கோபாலபிள்ளை குகன்
(முகாமைத்துவ உதவியாளர் சேவை - அதிசிறப்பு தரம்)

புன்னகை மலரே எங்கு சென்றாயோ! - நீ
பூத்துக்குலுங்கிய நந்தவனம் பாலைவனமாச்சுதடா
மாதங்கள் பதினேழு கடந்தது
உந்தன் பூமுகம் எமைப்பிரிந்து
தினமும் தினக் கலண்டர் கிழித்து
புதிய நாளை வரவேற்பவனே!
எம்மனை மகிழ - நீ
புன்னகைத்த பொன் நாள் இன்றல்லவா!
தினமும் தீயில் வேகுதடா உனைச்சுமந்த கருவறை
நித்தமும் பெற்றவர்கள் கலங்கித்துடிக்கின்றார்கள்
பிந்தி வந்த உடன் பிறப்பே
முந்திக்கொண்டு போனதெங்கே?
மீண்டு வந்து இம் மண்ணில் மலர்வாயா! குகனே!

என்றும் உன் நினைவில் வாடும்

கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
[வேலணை மேற்கு -8]

# மரண அறிவித்தல்



## அரியரத்தினம் இரத்தினமோகன் (பபா)

மானிப்பாய் மேற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அரியரத்தினம் இரத்தினமோகன் (பபா) நேற்று **(29.10.2019)** செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியரத்தினம் இராஜலக்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் ராஜேஸ்வரி (ராஜி) இன் பாசமிக்க கணவரும் அற்புதராணி காலஞ்சென்றவர்களான யோகரத்தினம், ஜெயமோகன் மற்றும் இரத்தினராணி, சந்திரமோகன், விமலராணி, தவமோகன், அரசமோகன், ஜெகன்மோகன், அதிசயமோகன், றூபராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்லப்பா, கருணாவதி, தர்மரத்தினம், கலாதேவி, தேவதாஸ், ராஜி, மஞ்சுளா, தர்சி, றூபகி, சுரேஸ் ஆகியோரின் மைத்துனரும் சர்மிலா, சுதர்சன், சுபேசன், ரேணுகா, டினேஸ், சேறா, சுசானா, நிவேதன், தர்சி ஆகியோரின் மாமனாரும் சிவகரன், சிவாஞ்சலி, சிவாஜினி ஆகியோரின் சித்தப்பாவும் லதிகா, சோபிதா, சுகன், அஸ்வின், அரவின், அஸ்ரா, பிரியங்கா, பிரீத்தா, பிரவீன், சில்வியா, விதுசன், துசாரா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(30.10.2019)** புதன்கிழமை பி.ப **1.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கேலன்காம குள வீதி,**
**மானிப்பாய் மேற்கு, மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொ.பே.இல: 077 621 3333, 077 788 5378**

## எமதர்மராஜா...

துவிடக் கூடாது.

இவ்வாறு ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார். புதிய ஜனநாயக முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து கம்பகா மாவட்டத்தின் திவுலபிட்டிய நகரில் நேற்று நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

அந்த எம தர்மராஜா ஆட்சிக் காலத்தில் மனிதர்களைக் கடத்திச் சென்று செய்யாத அட்டூழியங்கள் இல்லை. அவ்வாறானதொரு அச்சுறுத்தலான சூழலிலேயே நாம் வாழ்ந்தோம். ஏகாதிபத்திய குடும்ப ஆட்சியின் எமக்கு சுதந்திரம் இருக்கவில்லை. விரும்பியவாறு அரசியலில் ஈடுபடுவதற்கு சுதந்திரம் இருக்கவில்லை.

ஜனநாயகமும் இருக்கவில்லை. அமைச்சர்கள் பெயரளவில் மாத்திரமே இருந்தார்கள். ஏகாதிபதி சொல்வதை மாத்திரமே அமைச்சர்களும் செய்தார்கள். விரும்பிய எதையுமே செய்ய முடியாமல் மக்களுக்கு அடிமை போல் வாழ வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இது போன்ற ஆட்சி தொடராமல் இருக்க வேண்டும் என்பதற்காக 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி ஜனநாயகத்தைத் தோற்று வித்தோம்.

அரசியல்வாதிகளுக்கு மாத்திரமின்றி யாருக்கும் தலை குனிய வேண்டிய நிலைமையை இல்லாமலாக்கி சுதந்திரத்தை வழங்கினோம். கடந்த அரசதலைவர் தேர்தலின் பின்னர் எம்மால் ஏற்படுத்தப்பட்ட இவை அனைத்தையும் மீண்டும் இல்லாமல் செய்ய இடமளிக்க முடியாது- என்றார். (எ-22)

# மரண அறிவித்தல்



## திருமதி வசந்தாதேவி சற்குணம்

நாவற்குழி கிழக்கு, தச்சன்தோப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தாதேவி சற்குணம் **28.10.2019** திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகையா மற்றும் அழகம்மா தம்பதியினரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான சின்னவன்-சீதேவி தம்பதியினரின் பாசமிகு மருமகளும் சற்குணத்தின் அன்பு மனைவியும் மயூரா, தீபா, யிதாஸ் ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று **(30.10.2019)** புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் **11.00** மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக புணமுருங்கை இந்து யானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**நாவற்குழி கிழக்கு,**
**தச்சன்தோப்பு, கைதடி.**

**தகவல்:கணவன்**
**(சி. சற்குணம்)**
**பிள்ளைகள்**

**077 275 3075**

# மரண அறிவித்தல்

## திருமதி புஸ்பராணி நல்லையா



பிறப்பு 11.10.1941
இறப்பு 29.10.2019

நவாலியைப் பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி நல்லையா நேற்று (29.10.2019) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நல்லையாவின் அன்பு மனைவியும் நகுலேஸ்வரி, அகிலேஸ்வரி, பாலேந்திரன், சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும் பரம்சோதி, காலஞ்சென்ற சிதம்பரநாதன் மற்றும் இமாவதி, ஸ்ரீபாஸ்கரன் ஆகியோரின் அன்பு மாமியும் நிஷாந்தன், துவாரகன்-கார்த்திகா, றுக்சன், தர்சிகா-சங்கர், லம்போதரன், கஜலக்சன், மதுமிதா, நிஷானி, சகானி, கணதீபா, துஜீவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அபிஷேக்கின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2019) புதன்கிழமை ந.ப 12.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்களுக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**[illegible] லேன்,**
**[illegible] கிழக்கு, மானிப்பாய்.**

**தகவல்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 72ஆவது அகவை நாளில் இதயத்தால் இறைஞ்சுகின்றோம்



அமரர் திருமதி
சரோஜா
ஈஸ்வரதாசன்

அன்னை மடியில்
30.10.1947

ஆண்டவன் அடியில்
11.02.2018

எழுகதிராய் எமக்கெல்லாம் ஏற்றம் தந்த அன்னையை
எழுபத்தீராண்டு அகவைதனில் இதயத்தால்
இறைஞ்சுகின்றோம்.

180/2, சேர் பொன். இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம். (CS/28963)(11,17)

கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
### FACULTY OF MEDICINE
### Inauguration of Academic Programme

The Academic Programme for the New Batch (2018 A/L) of Medical Students will commence on Monday, 4th November 2019. An Inauguration Programme will be held on 4th November 2019 at 8.30 am in the Hoover Auditorium, Faculty of Medicine.

It is appreciated that the Parents of each student attend this Inauguration Programme.

**Registrar**
**University of Jaffna** (IN 11466)(14,17)




சிட்டுக் குருவி கிட்டவா
எட்டி ஓடிப் போகாதே

கட்டிப் போட்டு வைக்கமாட்டேன்
கவலைப் பட்டு ஓடவேண்டாம்
பட்டம் போல வானைநோக்கிப்
பறந்து ஓடி அலைய வேண்டாம்

சிட்டுக் குருவி கிட்டவா
எட்டி ஓடிப் போகாதே

வட்ட மிட்டுத் திரியவேண்டாம்
மழையில் எல்லாம் நனையவேண்டாம்
வெட்ட வெளியில் சுற்றவேண்டாம்
வெயில் தாக்க அலையவேண்டாம்

சிட்டுக் குருவி கிட்டவா
எட்டி ஓடிப் போகாதே

பட்டு உடலைத் தொட்டிடுவேன்
பையப் பைய நெருங்கிடுவாய்
தட்டு நிறைய நெல்தருவேன்
தயவு செய்து வந்திடுவாய்

சிட்டுக் குருவி கிட்டவா
எட்டி ஓடிப் போகாதே

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
17 - 05 - 1993

மறைவு
10 - 11 - 2018

### அமரர் கோபாலகிருஷ்ணன் சாரங்கன்

(சப்ரகமுவ பல்கலைக்கழக 3ஆம் வருட மாணவன்,
யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவன்)

காற்றின் விசையன்ன ஆற்றலின் வீச்சே!
மாற்றுக் குறையாத மாணிக்க இரத்தினமே!
கீற்றென ஒளிதந்த நாயக நாற்றே!
ஏற்றும் புகழால் இன்பம் தந்த வேந்தே!
பால் வதனச் சுந்தரனே வான்சுடராய் ஒளி தந்தாய்
பல்கலையில் முதல்வனாய் பார்போற்ற நீ மிளிர்ந்தாய்...
கலங்கரை விளக்கென்றிருக்க கலங்கவிட்டு ஏன் சென்றாய்...
அலங்காரக் கந்தனடியில் அமைதியாய் நீ உறங்காய்...

(CS 28977)
என்றும் உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## கண்ணீருடன்....

கடந்த 20-10-2019 இல் பிரான்ஸ் திருமறைக் கலாமன்றம் நடத்திய 'கலை வண்ணம்-2019' நிகழ்வில் தானே எழுதி, நெறியாள்கை செய்த 'தங்கத் தமிழ் வேந்தன்' கூத்தில் நடித்துக்கொண்டிருக்கும்போது அரங்கிலேயே உயிர்நீத்த திருமறைக் கலாமன்றத்தின் மூத்த அங்கத்தவரும், செயலவையின் முன்னாள் உறுப்பினரும், பிரான்ஸ் திருமறைக் கலாமன்றத்தின் இணைப்பாளருமான



### கலைஞர் டேமியன் சூரி

அவர்களின் மறைவால் ஆழ்ந்த துயரடைந்துள்ளோம். அவரது நல்லடக்க நிகழ்வு நடைபெறும் இன்றைய நாளில் நெஞ்சம் கனக்கும் கண்ணீர்த்துளிகளைக் காணிக்கையாக்கி இறுதி விடை பகர்வதுடன் அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆன்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

**238, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**இயக்குநர், அங்கத்தவர்கள்**
**திருமறைக் கலாமன்றம்.**

குறிப்பு :-
அமரத்துவம் அடைந்த கலைஞர் டேமியன் சூரி அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று மாலை 05.00 மணிக்கு இல.17 மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைஞான சுரபி தியான இல்லத்தில் பிரார்த்தனை நிகழ்வும், நாளை 31-10-2019 வியாழக்கிழமை 05.00 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது மணிமண்டபத்தில் அஞ்சலி நிகழ்வும் இடம்பெறும். இந்நிகழ்வுகளில் திருமறைக் கலாமன்றத்தின் அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். (c.11553) (13.17)

## காணி விற்பனைக்கு உண்டு

திருநெல்வேலி சம்பத் வங்கிக்கு அருகாமையில் **3பரப்பு** காணி பிரித்தும் கொடுக்கப்படும்.
**தொடர்பு:- 077 3611 282**

## விற்பனைக்கு

பிறவுண் றோட் கல்வாரி சேர்ச் அருகில் உள்ள லேனில் 5பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு:- 076 702 3565**

## மணமகள் தேவை (D)

1992.02.05, பின் இரவு 2.30 மணி
(27 வயது) அவிட்டம் கிரகபாவம்
27½ 2இல் செவ்வாய் உடைய
மணமகனுக்கு அழகிய மணப்பெண்
தேவை.
சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.

**077 659 0606**

## பணியாள்கள் தேவை (Vacancy)

01. தொழில்நுட்ப உதவியாளர் - T A
02. தொழில்நுட்ப அலுவலர் - T O

(Minimum one year experience)
(CS 28982)(14,17)

**Contact No : 075 918 3941**
(திங்கள் - வெள்ளி வரை 8.30 am மணி தொடக்கம் 5.00 pm மணி வரை மட்டும் தொடர்பு கொள்ளவும்.)
Email : qualitybuilders19@gmail.com

## மருந்தக உதவியாளர் தேவை

யாழ்நகரத்தில் இயங்கிவரும் மருந்தகத்திற்கு அனுபவம் வாய்ந்த பெண் மருந்தக உதவியாளர் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். (CS 28986)

**0772447715**

## வேலையாள்கள் தேவை

சாவகச்சேரி வீதி, மந்திகையில் இயங்கும்
ஸ்ரீதேவி சைவ உணவகத்துக்கு
- சமையல் வேலை
- றொட்டி வேலை தெரிந்தவர்கள் தேவை.

சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
தங்கி நின்று வேலைசெய்பவர்கள் விரும்பத்தக்கது. (CS/10774)(11,17)

**077 848 8619, 077 299 3683**

## பணியாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் கையடக்க தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை

*விற்பனையாளர் *கணக்காளர்
* உதவியாளர்

அனுபவம் உள்ளவர்களுக்கு சம்பளம் 20000/-
பழக விரும்புவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 500/-

நேரில் :- யாழ் போன் செல்
நவீன் சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
**077 3611 282**

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்



### தம்பிஐயா பாலகிருஷ்ணன்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் நெதர்லாந்தை (ஹொலண்ட்) வசிப் பிடமாகவும் கொண்ட தம்பிஐயா பாலகிருஷ்ணன் நேற்று (29.10.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயா மற்றும் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்தையா மற்றும் அன்னலட்சுமி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் நாகலட்சுமியின் (தேவி) அன்புக்கணவரும் குகதாசன், யோகேஸ்வரி, அன்னலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் றம்மியா, பாலகுமார் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஹேவர்தனின் அன்பு மாமனாரும் கார்த்திகனின் அன்பு பேரனும் சந்திரதேவா, மோகனதாஸ், விஜயலட்சுமி, கிருபாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோவிலடி,
உடுவில், சுன்னாகம்

தகவல்: த.குகதாசன் (சகோதரன்)
077 654 4558, 021 224 1071

## மரண அறிவித்தல்

### சீனித்தம்பி தம்பித்துரை



மலர்வு 12.07.1930
உதிர்வு 28.10.2019

யாழ்ப்பாணம் குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் மாதிரிக் கிராமம் பல்லவராஜன்கட்டை நிரந்தர வதிவிடமாகவும் நெளுக்குளம், வவுனியாவை தற்காலிக வசிப் பிடமாகவும் கொண்ட சீனித் தம்பி தம்பித்துரை கடந்த (28.10.2019) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சீனித் தம்பி கற்பகம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு தில்லைநாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் அமிர்தலிங்கம் (தவம் - சுவிஸ்), புஸ்பராணி (ரதா-சுவிஸ்), புஸ்பநாதன் (ரவி-சுவிஸ்), காலஞ்சென்ற யோகராணி (யோகா), மற்றும் ஜெயராணி (தயா-சுவிஸ்), விஜயராணி (நித்தியா-லண்டன்), குகநாதன் (ரகு - அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத்தந்தையும் நிறஞ்சலா, தனேந்திரராசா, ராசரதி, சுதாகரன், அனோஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் கம்சனா, கீர்த்திகன், ரசிக்கா, வைஷகா, வைநதி, வாமனன், அக்விஸ், அஸ்வின், நர்மதா, திவிந்தன், கிருஸ்திகா, சியானா, ஷெரினா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சின்னத்தம்பி, நல்லையா ஆகியோரின் அன்புச்சகோதரனும் பூமாதேவி, காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் பரமசிவமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி (லண்டன்), மார்க்கண்டு, பத்மசோதி, புஸ்பமலர் (ஜேர்மனி), குமுதமலர் ஆகி யோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.10.2019) வியாழக் கிழமை காலை 9.00 மணியளவில் வவுனியா நெளுக்குளம் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நெளுக்குளம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

நெளுக்குளம், வவுனியா.

தகவல்: குடும்பத்தினர்
077 387 7084, 077 972 1215

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DMI COMPUTER EDUCATION
TVEC Reg.No.:P25/0056

நவம்பர் மாதத்திற்கான
புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு 1: 2/11/2019(Sat) 9 am & 3 pm
பிரிவு 2: 4/11/2019(Mon) 9 am & 3 pm



Dip.in Information Teachnology
Dip.in Office Automation
Dip.in PC Application
Dip.in Microsoft Office
Dip.in Web Designing
Hardware,Mulitmedia,
Auto CAD,Java,C++,PHP
NVQ COURSES( ICT-Full Time,CAA Full/Part Time)

IT & ENGLISH
DUAL DIPLOMA

- Microsoft online பரீட்சைகளூடாக Microsoft தலைமை அலுவலகத்திலிருந்து தலைமை செயலதிகாரியின் கையொப்பத்துடனான Microsoft specialist சான்றிதழ்கள்.
- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட NVQ சான்றிதழ்களை வழங்கிவரும் ஒரேஒரு தனியார் கணினி நிறுவனம்


ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க
யாழில் பெருமளவு
மாணவர்கள் தெரிவு செய்யும்
Diploma in English
Spoken English

DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி (சயன்ஸ்ஹோல் அருகாமை) 021 222 4403

| M.M.V. வீதி, (மத்திய மகா வித்தியாலயம் அருகாமை காளி கோவில் முன்பாக) | கண்டி வீதி, (HNB வங்கி அருகாமை) | No.130, கே.கே.எஸ் வீதி, (NSB வங்கி அருகாமை) | | A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக) |
|---|---|---|---|---|
| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சீரணிச்சந்தி சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |

## பன்னிரண்டாம் ஆண்டு நினைவுமலர்

அன்னை மடியில்
20 . 07 . 1982



ஆண்டவன் அடியில்
11 . 11 . 2007

### அமரர் பரமநாதன் ஜெயக்குமார் (ஜெயா)

திதி : துதியை 30.10.2019

எங்கள் அன்பின் ஜெயாவே
எங்கள் வீட்டின் ஒளிவிளக்கே
பன்னிரண்டாண்டுகள் ஓடிவிட்டதையா
பன்னிரண்டாண்டுகள் என்ன
பன்னிரண்டாயிரம் ஆண்டுகள் போனாலும்
ஆறாதையா உங்கள் நினைவுகள் எம்மை விட்டு
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.
077 572 0486 (அத்தான் சிவா)

தாவளை,
இயற்றாலை, கொடிகாமம்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 02.10.2019 புதன்கிழமை
சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

### அமரர் குணரத்தினம் ரகு



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (30.10.2019) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 01.11.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும்
ஏற்றுக் கொள்ளவும்.


இல. 77, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2436

குடும்பத்தினர்.

(CS 28978)(14,17)

## மரண அறிவித்தல்கள்

பிறப்பு
21 . 02 . 1942



இறப்பு
28 . 10 . 2019

### செல்லத்துரை சரவணபவன்

ஜீ.பீ.எஸ். வீதி, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை சரவணபவன் 28.10.2019 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை திரவியம் தம்பதியரின் அன்புப் புதல்வரும் நாகபூஷணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற யோகரட்ணம் மற்றும் குபேந்திரராசா (நுணாவில்), மீனாம்பிகை (கனடா), ஈஸ்வரசோதி (கோண்டாவில்), புவனாம்பிகை (லண்டன்), விஜயாம்பிகை (ஜேர்மனி), கிருபானந்தசோதி (ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சுமித்திரா (நோர்வே), சரத்திலகன் (ஆசிரியர், யா/வேலணை மத்திய கல்லூரி), காஜத்திரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செந்தில்குமரன் (நோர்வே), ஜொய்ஸ்சி (ஆசிரியை , சென்ஜோன்ஸ் கல்லூரி), சுபாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் துலக்சன், துளசியா, துசியா, செரோன், செர்வின், அக்ஷயா, அன்சிகா, தருணிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.10.2019) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு முன்பாக) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்தஅறிவித்தலைஉற்றார்,உறவினர்,நண்பர்கள்அனைவரும்ஏற்றுக்கொள்ளவும்.

இல.85, கோப்பாய் மத்தி,
கோப்பாய்,
0776567693

தகவல்: மகன்
ச.சரத்திலகன் (ஆசிரியர்)

தோற்றம்
25 . 07 . 1959



மறைவு
29 . 10 . 2019

### நாகேந்திரம் கணேசன்

கொல்லங்கலட்டி மடத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகேந்திரம் கணேசன் நேற்று (29.10.2019) செவ்வாய்க்கிழமை காலை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேந்திரம் மற்றும் சீதாலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசதுரை - பரிமளலட்சுமி தம்பதிகளின் மருமகனும், கலாவின் அன்புக் கணவரும், செந்தூரன், சிந்துஜா, தீபிகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற போஜன் மற்றும் தினகரன், ஜெயந்தி, தயாளன் ஆகியோரின் சகோதரரும், ஸ்ரீநகுலேஸ்வரன், ஸ்ரீதரன் ஆகியோரின் மைத்துனரும், கிரிசாந்தினியின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2019) புதன்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண்வாய்க்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மடத்தடி,
கொல்லங்கலட்டி.

(CS/28980)(11,17)

தகவல்:
குடும்பத்தினர்.
071 228 6104, 077 979 1699, 077 067 6708

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேசசபையில் ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி ஜீவலதா சுகுமாரன்** அவர்களின் அன்புத்தாயார்



### நாகராஜா கமலலட்சுமி

அவர்கள் கடந்த 17.10.2019 ஆம் திகதி இறைபத மடைந்ததையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது சபையின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச்சங்கம்**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

(CS 28985)(14.17)

## வேலையாள்கள் தேவை

01. மேசன் - ரூபா 1500.00 - 1600.00
02. லேபர் - ரூபா 1200.00
03. அலுமினிய பிற்றிங் அனுபவமுள்ளவர்கள் - (ரூபா 1200.00 - 1500.00)
04. சப்கொன்றாக்ரேஸ் (Sub Contractors) உம் தொடர்பு கொள்ளலாம். (CS 28981)(14.17)

தொடர்புகளுக்கு :
**075 918 0060**
(திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை மட்டும் தொடர்பு கொள்ளவும்.)

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேசசபையில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் **திருமதி சுரேகா உல்லாசனன்** அவர்களின் அன்புத் தந்தை



### பொன்னையா சிதம்பரநாதன் (ஈசன்)

அவர்கள் கடந்த 18.10.2019 அன்று இறைபத மடைந்ததையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது சபையின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரி வித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச்சங்கம்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

(CS/28984)(11.17)

# உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

## கிளி/ கிளிநொச்சி மகாவித்தியாலயம்

### க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் 9A பெற்று சித்தியடைந்தோர் -2018


மதுசனா பிலிப் அமலராசா


நிதுசிகா சிறிகாந்தா


விதாரசி தேவராசா


சந்திரசேகரம் சாரங்கன்


புகழினி மோகனராஜ்


நேருஜா பாலச்சந்திரன்


அமல்ராஜ் பவித்திரன்


சிறிவக்சனா முருகவேல்


டிந்துசா சண்முகராசா


தேவராசா சபில்சன்


குமுதினி செல்வநாதன்


திஷாயினி குணசிங்கம்


ஜோயல் பியசீலன் பிரவிந்தன்


மாதங்கி மதீஸ்வரன்


துலக்சிகா நந்தகுமார்

**2018 ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றி 9A சித்தி பெற்ற 15 மாணவர்களையும், சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுச் சித்தியடைந்த 117 மாணவர்களையும் வாழ்த்துவதோடு அவர்களுக்கு வழிகாட்டிய அதிபர், பிரதி, உதவி அதிபர்களையும், கற்பித்த ஆசிரியர்களையும் வாழ்த்தி நிற்கின்றோம்.**

Congratulations

**பாடசாலைச்சமூகம்**
**கிளி/ கிளிநொச்சி மகாவித்தியாலயம், கிளிநொச்சி.**

(IN 11466)(14.17)

# 8 ஆம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் சரோஜினிதேவி சிவஸ்கந்தா

(ஓய்வுபெற்ற தொலைபேசி இயக்குநர்- இலங்கை தொடர்பு திணைக்களம்)

யாழ். காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும், அராலி வடக்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சரோஜினிதேவி சிவஸ்கந்தா அவர்களின்
**8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

எட்டியே எம்மை கடக்கவிட்டு எட்டாமலே நீர் சென்று
எட்டாண்டுமாகிப் போச்சு
ஏட்டிலே எழுதவைத்து அழகு பார்த்த அம்மாவை
பாட்டிலே எழுதவைத்து பரலோகம் சென்று விட்டீர்
தட்டிலே சோறுபோட்டு ஊட்டிவிட்ட அம்மாவைப்
பெட்டியிலே போட்டு மூட்டிவிட்டோம் தீயை
கெட்டு நாம் போகாமல் தட்டி வளர்த்த அம்மா!
விட்டு நீர் பட்டெனவே மறைந்து விட்டீர்
கட்டிவளர்த்த சொந்தம் கட்டறுந்து போகாமல்
நட்டு நடுமரமாய் நின்ற அம்மா!
நட்டாற்றில் எம்மை விட்டு நாதனடி சேர்ந்துவிட்டீர்
கூட்டிலே நாமெல்லாம் கூடி வாழ்ந்து வந்தோம்
வேட்டுவன் வடிவில் வந்து யமனும் கூட்டியே சென்றுவிட்டான்
காட்டி கொடுத்து எம்மை கயவர்கள் பிடித்தபோதும்
மாட்டி நாம் நிற்காமல் மீட்ட எங்கள் அம்மா!
சொட்டும் குறையாமல் நீர் சொரிந்துவிட்ட அன்பினை
கொட்டிக் கொடுத்தாலும் இவ்வுலகில் பெற்றிட முடியுமா?
ஏட்டிக்கு போட்டியாய் படித்த பேர்த்தியும் மருத்துவ
பட்டப்படிப்பு செல்ல தகுதியும் பெற்றுவிட்டாள்
மட்டில்லா மகிழ்ச்சி காண மாதவே நீரும் இங்கில்லை
பாட்டியே என்று சொல்ல பூட்டியும் வந்துவிட்டாள்
கேட்டியே கதையென்று நீர் இருந்தால் சொல்லி இருப்பாள்
சுட்டி ரீவி பார்த்த பிள்ளை குட்டி கவிதை சொல்லி
கெட்டிக்காரியாகி விட்டாள்
வெட்டிப்பேச்சு பேசா மட்டில்லா மாணிக்கத்தை
தொட்டுப்பார்க்க முடியலே தொலைந்து போயிருச்சு
ஒட்டி இல்லா படகுபோல தத்தளிக்கின்றோம்
வாட்டிய துயர் நீங்க பூட்டிய கதவு திறந்து
மீட்டிட ஓடி வாரும்....



**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 14.09.1941 | 28.10.2011 |

**திதி: 30.10.2019**

(cs 24115) (13.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'கைதி' படத்தின் 2ஆம் பாகம் உருவாகும்

## இயக்குநர் லோகேஷ் கனகராஜ்

'மாநகரம்' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் தற்போது வெளியாகி இருக்கும் படம் 'கைதி'.
இதில் கார்த்தி, நரேன், ஹரிஷ் உத்தமன், அர்ஜுன் தாஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளார்கள். இந்தப் படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்புப் பெற்று வருகிறது.
இந்த நிலையில், இந்தப் படத்தின் இரண்டாம் பாகம் உருவாகும் என்று இயக்குநர் லோகேஷ் கனகராஜ் கூறியிருக்கிறார்.
'கைதி' உருவாகக் காரணமாக இருந்த தயாரிப்பாளர் எஸ்.ஆர். பிரபு மற்றும் கார்த்திக்கு நன்றி தெரிவித்த லோகேஷ், என்னிடம் பலரும் கேட்கும் கேள்விக்குப் பதில் 'டில்லி மீண்டும் வருவான்' என்று கூறியிருக்கிறார்.
'கைதி' படத்தில் கார்த்தியின் கதாபாத்திரம் டில்லி. இந்தப் படத்தின் இறுதிப் பாகம் உருவாகும் என இயக்குநர் லோகேஷ் உறுதி செய்திருக்கிறார்.







மிகச் சிறிய சவப் பெட்டிகள்தான்
மிக அதிக கனமானவை.
யாரோ

ஏய் வானம் பார்க்கும் தொழில்நுட்பமே,
சற்றுக் குனிந்து பாதாளம் பார்:

**வைரமுத்து**

சவப்பெட்டிக்குள் அடைத்து அவசரமாய்
புதைக்கப்பட்டது, தோல்வியின்
விஞ்ஞானப் பொய்கள்...!


மூச்சுத் திணறி...!
பசியினில் கதறி...!
பயத்தில் உறைந்து...!
சாவை அணு அணுவாய்
நெருங்கினாயே...!
கைகளை(நம்பிக்கை) நீட்டியே
இருந்தாயே...!
மீட்டு விடுவோம் என்று...!
மன்னித்து விடு சுர்ஜித்...!!

எங்களிடம் உன்னை மீட்க எதுவுமே
இல்லை கயிறை தவிர ..
யாரையும் குறை சொல்லவில்லை..!
அனைவரின் எண்ணமும் உன்னை
மீட்டு விட வேண்டும் என்று
இருந்ததே...
உன்னை உடலாகப் பார்க்க கூட மனம்
கூசுகிறது

4 நாளாக நீ கண் முன்னால் கொஞ்சம்
கொஞ்சமா செத்துக் கொண்டிருப்பதை
பார்த்ததைத் தவிர ஒன்றும் செய்ய
முடியாத பாவிகளாகத் தான் இருக்க
முடிந்தது...!!!

வெட்கமா இருக்கு....!!!
ஆழ்ந்த வருத்தங்கள்...!!!
ஆன்மா சாந்தியடைய
வேண்டுதல்கள்..!!!

#RIP
SUJITH






# டிஜிற்றல் இந்தியா


இந்தியா ஒரு வல்லரசா? என்று கடந்து சில நாள்களுக்குள் உலகத்துக்கு நிரூபித்து விட்டது.
தொழில்நுட்பத்தின் வளர்ச்சியை மிஞ்சிய மழலை சுர்ஜித்தின் விதி இறைவனின் நாட்டம் என்று மனதை ஆழ்த்திக் கொண்டாலும் ஒரு நாட்டின் வளர்ச்சியும் பரிணாமமும் இயற்கையை விஞ்சும் அளவுக்கு இன்னும் உருவெடுக்க வில்லை என்பதற்கு நிரந்தரமாகத் துயிலச்சென்ற சுர்ஜித்தின் இறுதி வினாடிகள் எமக்குச் சான்று பகிர்ந்துள்ளது.
பாரத நாட்டின் கம்பீரத்தையும் தன்னம்பிக்கையையும் சில நாள்களில் தகர்த்தெறிந்த சுர்ஜித்தின் இறுதி வினாடிகள் உலகத்தில் வாழும் ஒட்டு மொத்த மனித குலத்துக்குப் பெரும் சோகத்தை மட்டுமல்ல அதற்கு அப்பாலான ஒரு பாடத்தையும் கற்பித்துவிட்டது.
எம்மை ஆள்வதற்கு வளரும் தொழில்நுட்பத்தையும் எம்மை ஆள வரும் அரசியல்வாதிகளையும் நம்பி எமது எதிர்காலத்தை அடகு வைப்பதை விட்டு விட்டு எமது தன்னம்பிக்கையையும் மன உறுதியையும் மூலதனமாக வைத்து தான் வாழும் சூழலையும் பூமியையும் கட்டியெழுப்புவதற்கு முயற்சி செய்தால் மாத்திரமே எதிர்காலத்தைப் பற்றிய ஒரு நம்பிக்கை எமக்குள் உருவாகும்.

## தொழில்நுட்பமா குற்றம்?

அதை மூடி வைக்காதவன் குற்றமா?
அவனை செல்ல அனுமதித்தவன் குற்றமா?
விழுந்த அவன் குற்றமா?
நேரம் தாழ்த்தியவர்கள் குற்றமா?
காக்க முடியாத அதிகாரிகள் குற்றமா?


தொழில்நுட்பத்தை குறை சொல்லாமல்
மூடி வையுங்கள் ஆழ்துளைகளை!

பட்டால்தான் தெரிகிறது மனிதனுக்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ பழனித்துரை தர்மகுமாரன்



# வாசிப்பை என்றென்றும் சுவாசிப்போம்

"விலங்கொடு மக்களனையார் இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர்" என்னும் வாக்குக்கு இணங்க கல்வி அறிவு கொண்டவரே மனிதர் என்றும் கல்வியறிவு அற்ற ஏனையவர் விலங்குகள் என்றும் விளம்புகின்றது வள்ளுவம். மனிதன் மனிதனாக மதிக்கப்பட வேண்டுமாயின் அவன் கல்வி அறிவைத் தேடிக் கொள்ளுதல் வேண்டும்.

கல்வி அறிவைப் பெற்றுக் கொள்வதற்குப் பல வழிகள் உண்டெனினும் மிகச் சிறந்த நூல்களை வாசிப்பதென்பது இருக்கும் எல்லா வழிகளிலும் சிறந்தது. ஒரு நாட்டில் உள்ள நூலகங்களின் எண்ணிக்கைப் பொறுத்துத்தான் அந்த நாட்டில் உள்ளவர்களின் அறிவாட்சித் திறன், ஆற்றல், பண்புகள் என்பன அளவிடப்படுகின்றன. நூலகங்கள் புத்தகங்களின் உறைவிடம் மட்டுமல்ல அறிஞர்களின் அனுபவத்தை எழுத்துருவில் தாங்கி நிற்கும் சரித்திரச் சான்றுகளும் கூட.


"என்னை என்றும் எச்சந்தர்ப்பத்திலும் கைவிடாத நண்பர்கள் புத்தகங்களே" இதனாலேயே நல்ல நூல்களை நண்பர்கள் ஆக்கிக் கொள்ளுங்கள் என்று அறிஞர்கள் வலியுறுத்துகின்றார்கள். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது முதுமொழி. அதேபோல் நூலகம் இல்லாத ஊர் நுழைவாயில் இல்லாத வீட்டுக்கு ஒப்பானது. வாசிப்புப் பழக்கமில்லாத மனிதர்கள் வறண்ட நிலத்துக்கு ஒப்பானவர்கள். ஏனெனில் வறண்ட நிலத்தால் எந்த பிரயோசனமுமில்லை.

எனவே ஊருக்கொரு நூலகத்தை உருவாக்குவோம். அந்த நூலகத்தில் தமிழர் வரலாற்று நூல்களையும் உள்ளடக்குவோம். இளம் சந்ததியினர் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்போம். அதாவது "உடலுக்கு உடற்பயிற்சி போன்றதே உள்ளத்திற்கு வாசிப்பு"

இளமைப் பருவம் இனியது. இப்பருவத்திலேயே நூல்களை வாசிக்கும் பழக்கத்தை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்விதம் ஏற்படுத்திக் கொண்டால் எமது மொழியாற்றல் விருத்தியுறும் பாடங்களில் சிறப்படைய முடியும். பொது அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம். வாழ்க்கை பூராகவும் எழுச்சிமிக்கதும் மகிழ்ச்சியானதுமான வழியை கண்டுகொள்ளலாம். இதற்கு பாடசாலைகளின் நேர அட்டவணையில் நூலக பாடத்தை கிழமைக்கு இரண்டு பாடவேளையாவது வழங்கி மாணவர்களை நூல்களை வாசிப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்குதல் வேண்டும். நாம் நூல்களைத் துணை கொண்டால் வேறு துணை எமக்குத் தேவைப்படாது.

புத்தகங்களைப் படிக்கும் பழக்கம் உள்ளவர்கள் ஒரு போதும் தனிமை உணர்வைப் பெறுவதில்லை.

ஓய்வு கிடைக்கும் போதெல் லாம் அவர்கள் புத்த கங்களை நாடிச் சென்று விடுவதே இதற்குக் காரணமாகும். இதனால் உள அமைதி, உயர்ந்த உணர்ச்சிமிக்க சிந்தனை, வன் முறைக்குள் வீழ்ந்து விடாமை, தேவையற்ற சமூகப் பிறழ்வான பழக்கவழக்கம், வீதிகளில் குழுவாக நிற்றல் போன்ற செயற்பாடுகளை சரியான முறையில் கட்டுப்படுத்தவும் முடியும். நல்ல முறையில் கடைப்பிடிக்கவும் முடியும்.



**"என்னை என்றும் எச்சந்தர்ப்பத்திலும் கைவிடாத நண்பர்கள் புத்தகங்களே" இதனாலேயே நல்ல நூல்களை நண்பர்கள் ஆக்கிக் கொள்ளுங்கள் என்று அறிஞர்கள் வலியுறுத்துகின்றார்கள். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது முதுமொழி. அதேபோல் நூலகம் இல்லாத ஊர் நுழைவாயில் இல்லாத வீட்டுக்கு ஒப்பானது.**

**நூல்கள் எமக்கு அறிவு தரும் அரிய செல்வங்கள்**

பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கடந்த வரலாறுகளையும் நூல்களின் மூலம் வாசித்து அறியக் கூடியதாக உள்ளது. "செல்வங்களை கள்வர்களால் களவாடிச் செல்ல முடியும்" ஆனால் புத்தகங்கள் தரும் அறிவை எம்மிடம் இருந்து எவராலும் களவாடிவிட முடியாது. இதனால்தான் "புத்தகங்களைப் போன்ற சிறந்த கருவூலம் எதுவும் மனிதனுக்கு இருக்க முடியாது" என்றார் ஆங்கில அறிஞர் ரஸ்கின். புத்தகங்களை வாசித்துப் பெறும் அறிவை, இன்பத்தை ஒருவனிடமிருந்து எவராலும் தட்டிப் பறித்துவிட முடியாது. வாழ்நாள் முழுவதும் அவனது வாழ்க்கைப் பயணத்தை நேர்த்தியாகக் கொண்டு செல்லும். நூல்கள் படிக்கின்ற பழக்கம் இல்லாதவனின் வாழ்க்கை சூனியமானதாகவும் விரக்தியுற்றதாகவும் துன்பத்தில் இருந்து மீள முடியாததாகவும் காணப் படும். கிணற்றுத் தவளை போல அவன் கருதப்படுவான். வீடு இல்லாமல் எமது குடும்பம் சுகமாகவும் மகிழ்வுடனும் வாழ முடியாது. ஆலயம் இல்லாமல் ஆன்மிகத்தை வளர்த்து விட முடியாது. பாடசாலைகள் இல்லாமல் கல்விமான்களை உருவாக்கிவிட முடியாது. அதேபோல நூலகங்களின் நூல்கள் மூலமே அறிவுசார் சமூகம் உருவாக்கப்படுகின்றது. உண்மையிலே வாசித்தலானது வெறும் பயிற்சி மட்டுமல்ல. அதனால் வரும் அளப்பரிய அறிவு ரீதியான நன்மைகளுடன் நாம்பெறும் உள மகிழ்ச்சியும் ஆத்மதிருப்தியும் ஆனந்தமே. கற்கும் நூல்கள் ஆழமான இன்பத்தைத் தரவல்லன. அவை மாந்தர்க்கு தொட்டனைத்தூறும் மணற்கேணி போன்றன.

**எம்மை நாம் அறிந்துகொள்ள**

நல்ல நூல்களை நாம் கற்பதால் அறிவால் மட்டுமன்றி உணர்வால், உள்ளத்தால் உயர்வடைய முடியும். உலக மக்களோடு உறவு கொள்ள முடியும். எமது பண்டைய முறைகளை பாரம்பரியங்களை, கலைகளை, கலாசாரங்களை, பண்பாட்டு விழுமியங்களை நன்குணர்ந்து அதற்கு அமைய எம் வாழ்வையும் மற்றவருடைய வாழ்க்கையையும் அமைத்திட முடியும். எமக்கு அறிவு புகட்டும் ஆசானாக நூல்கள் அருகில் இருக்கும்போது அவற்றை நாம் வாசிக்கத் தவறக்கூடாது. நல்ல நூல்களே எமது நல்ல உறவுகள் என உணர்ந்து நூல்களை வாசிக்கும் பழக்கத்தை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இது வளரும் மாணவ சமுதாயத்தின் தலையாய கடமையாகும்.





''இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'' என்னும் முதுமொழிக்கு ஏற்ப இளமையிலேயே நாம் கற்க வேண்டியவற்றைக் கற்றுத் தேற வேண்டும். அதற்கு நல்ல நல்ல நூல்களைத் தெரிவு செய்து வாசித்து அதன் பயனை செயல்வடிவம் ஆக்க துணிதல் வேண்டும். அறிவைப் பெற்றுக் கொள்ளவும் வரலாற்றை அறிந்து கொள்ளவும் வாழ்க்கையை வழிநடத்திச் செல்லவும் ஆன்மிகக் கதைகளை மீட்டுக் கொள்ளவும் பொழுதைப் போக்குவதற்கும் புதிய விடயங்களைக் கண்டுபிடிப்பதற்கும் உளத் திருப்தியைப் பெறுக் கொள்ளவும் இலக்கிய மீளாய்வுகளுக்கும் என நூல்களின் தேவையை அடுக்கிக் கொண்டே செல்லலாம். பயன்படுத்துவோம், பயன்பெறுவோம்.

கட்டுரையாளர்:
ஆசிரியர்,
உடுவில் மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# வழியற்றுத் தவிக்கும் தமிழ்த் தலைமைகள்

அரச தலைவர் தேர்தலையொட்டி 5 தமிழ்க் கட்சிகள் கூடிப்பேசி இணக்கம்கண்ட கூட்டுசொற்ப ஆயுளுடன் முடிவுக்கு வந்திருப்பதாகத் தோன்றுகின்றது.

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின்ஏற்பாட்டில்நடந்தகூட்டங்கள்முயற்சிகளுக்குப்பின்னர் 13 கோரிக்கைகளை முன்வைக்கும் ஆவணம் ஒன்றில் இந்த 5 தமிழ்க் கட்சிகளும் கையெழுத்திட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தற்பொழுது அங்கத்துவம் வகிக்கும் தமிழ் அரசுக் கட்சி, ரெலோ, புளொட் மற்றும் கூட்டமைப்பில் இருந்து வெளியேறிய ஈ.பி.ஆர்.எல்.எவ் என்பவற்றுடன் கூட்டமைப்பின் தெரிவாக வடக்கு மாகாண முதலமைச்சர் பதவியைப் பெற்றுப் பின்னர் தனிக் கட்சி தொடங்கிய சி.வி.விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய கட்சிகளே அந்த ஆவணத்தில் ஒப்பமிட்டன.

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் முக்கிய மூன்று கட்சிகளான ஜனநாயக தேசிய முன்னணி, பொது மக்கள் முன்னணி (பெரமுன), ஜே.வி.பி. ஆகியவற்றின் வேட்பாளர்களுடன் இந்தக் கோரிக்கைகளை முன்வைத்துப் பேச்சு நடத்துவது என்றும் அதை ஏற்றுக்கொள்பவர்களுக்கே தமிழ் மக்களின் வாக்குகளைப்பெற்றுக்கொடுப்பதுஎன்றும்தீர்மானிக்கப்பட்டிருந்தது.

துரதிர்ஷ்டவசமாக இந்த வேட்பாளர்களில் எவரும் தமிழ்க் கட்சிகளின் ஆவணம் குறித்துப் பேச்சு நடத்துவதற்குதயாராக இருக்கவில்லை. கோத்தபாய அதனை அடியோடு நிராகரித்து விட்டார். சஜித் பிரேமதாச நழுவல் போக்கோடு சென்றுவிட்டார். அனுரகுமாரதிஸநாயக்க அது குறித்துப் பேசலாம் என்று தெரிவித்தபோதும் அக்கறையேதும் காட்டவில்லை.

இப்படி வேட்பாளர்களில் எவருமே ஏறெடுத்தும் பார்க்காத நிலையில், அடுத்த கட்டம் என்ன என்று ஆராய நேற்றுமுன்தினம் கூடிய இந்தக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு இடையில் ஒருமனதான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. இன்று மீண்டும்ஒருதடவைசந்தித்துப்பேசத்தீர்மானிக்கப்பட்டிருந்தது.

திங்கட்கிழமை சந்திப்பிலேயே 5 கட்சிகளுக்கும் இடையில் அடுத்த கட்ட நகர்வு குறித்துக் கருத்தொற்றுமை இருக்கவில்லை. கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் மூன்றும் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க வேண்டும் என்கிற முடிவிலும் மற்றைய இரு தரப்பும் யாரையும் ஆதரிக்கும்படி சொல்ல முடியாது என்கிற நிலைப்பாட்டிலும் இருந்தனர்.

இந்தநிலையில் இது தொடர்பில் அறிக்கை வெளியிட்ட தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரான சி.வி.விக்னேஸ்வரன், எந்தவொரு தலைவருக்கும் வாக்களிக்கும்படி கேட்க முடியாத நிலையில் இருப்பதால் மக்களே சிந்தித்து தெளிவான முடிவை எடுத்து வாக்களிக்க வேண்டும் தமிழ் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

எந்தவொரு வேட்பாளரும் தமிழ்க் கட்சிகளின் 13 அம்சக் கோரிக்கையைப் பரிசீலிப்பதற்குத் தயாராக இல்லாத நிலையில், அவர்களுக்கு வாக்களிக்கும்படி கோர முடியாத அதேசமயம் மக்களின் ஜனநாயக உரிமையான வாக்களிப்பைப் புறக்கணிக்கும்படி கோரவும் முடியாது என்பதால், கடந்த காலங்களை எண்ணிப் பார்த்து மக்கள் தாமே முடிவு செய்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

ஆக மொத்தத்தில் இன்றைய கூட்டத்திற்குத் தேவையே இல்லாத வகையில் தனது கருத்தைத் தெரிவித்துவிட்டார். ஈபிஆர் எல்எவ் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரனும் கிட்டத்தட்ட இதுபோன்றதொரு முடிவை எட்டுவதற்கே சாத்தியங்கள் அதிகம் உள்ளன.


எனவே இன்றைய கூட்டத்தில் எந்தவித உருப்படியான முடிவுகளும் எட்டப்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை. இரு தரப்பாக இந்தக் கூட்டுப் பிரிந்து நிற்பதைத் தவிர வேற எந்த முன்னேற்றகரமான நகர்வும் இன்றைய தினம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை.

எனவே கூட்டமைப்பு ஒரு பகுதியிலும் கூட்டணி ஒரு பகுதியிலுமாக மல்லுக்கட்டக்கூடும்.

மக்களை எப்படி வழிநடத்துவது என்று தெரியாமல் தமிழ்த் தலைமைகள்சிக்கித்தவித்துவருகின்றனஎன்பதன்மற்றொரு உதாரணமே இது.

முடிவுகளை மக்களே எடுத்துக் கொள்ளட்டும் என்று சொல்வதுதலைமைகள்வழியற்றுநிற்கின்றனஎன்பதன்பொருளே. இன்றைய அரசியலின் உண்மையான நிலையும் அதுவே.

# எப்போது சாத்தியமாகும் தமிழர்களின் ஒற்றுமை?



சேரலாதன்

பல்கலைக் கழக மாணவர்களின் ஏற்பாட்டில் ஒன்றுகூடிய ஐந்து தமிழ்க் கட்சிகள் தொடர்ந்தும் ஒற்றுமையாகச் செயற்படுவதற்கான சாத்தியம் மிகக் குறைவானதாகவே காணப்படுகின்றது. அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் அரச தலைவர் தேர்தலில் தமிழர்கள் எந்த வேட்பாளருக்கு ஆதரவை வழங்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் பொருட்டு ஆறு தமிழ்க் கட்சிகளையும் பல்கலைக் கழக மாணவர்கள் ஒரே மேடையில் அமரச் செய்தனர். அங்கு கடுமையான விவாதங்கள் இடம்பெற்றன. கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இடைநடுவில் முறித்துக் கொண்டு வெளியேறியது. தற்போது ஐந்து கட்சிகள் எஞ்சியுள்ளன.

இந்த நிலையில் மூன்று கட்சிகளைக் கொண்ட தமிழ்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கொழும்பில் கூடி அரச தலைவர் தேர்தல் தொடர்பாக ஆராய்ந்துள்ளது. கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் கோத்தபாயவுக்கு எதிரான கருத்துக்களை அங்கு வைத்து வெளியிட்டதாகத் தெரிய வருகின்றது. சில மணிநேர விவாதத்தின் பின்னர் முடிவு எதையும் எட்டாத நிலையில் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் கலைந்ததாகத் தெரிகின்றது.

### ஒற்றுமை நீடிக்குமா?

கூட்டமைப்பு அரச தலைவர் தேர்தலில் சுயாதீனமாகச் செயற்படுமென்பதை இந்த நிகழ்வு எடுத்துக் காட்டுகின்றது. இதேவேளை விக்னேஸ்வரன் தலைமையிலான கட்சியின் முக்கியஸ்தர்களின் ஒருவரெனக் கருதப்படும் அருந்தவபாலன் வேறொருகருத்தை வெளியிட்டிருக்கிறார். தமிழர்கள் வாக்களிக்காமல் ஒதுங்கியிருக்க வேண்டும் அல்லது வாக்குச் சீட்டுக்களை நிராகரிக்க வேண்டும் என்பதே அவரது கருத்தாகும். இதனால் மகிந்த தரப்பினருக்கே அதிக நன்மை கிடைக்கு மென்பதைக் கூறத் தேவையில்லை.

கோத்தபாய அரச தலைவராகுவதையே விக்னேஸ்வரன் விரும்புவதாக நிலவிய கருத்தை மெய்ப்பிப்பது போன்று உள்ளது அருந்தவபாலனின் கருத்து. எது எப்படியிருப்பினும் கூட்டமைப்பில் உள்ள மூன்று கட்சிகளும், விக்னேஸ்வரனின் கட்சியும் ஐந்து கட்சிகளின் கூட்டை மதிக்காமல் தமது விருப்பம் போன்று செயற்பட்டமை தெளிவாகவே தெரிகின்றது. தற்போது சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ் மட்டுமே தனித்து விடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் மாகாணசபை ஆகியவற்றுக்கான தேர்தல்கள் அடுத்த ஆண்டு இடம் பெறவுள்ளன. வடக்கைப் பொறுத்தவரையில் கட்சிகளுக்கிடையே கடுமையான போட்டி நிலவுமென்ற எதிர்பார்ப்புக் காணப்படுகின்றது. கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டமைப்புச் சிறிது சறுக்கலை எதிர்கொண்டது. அநேகமான சபைகளில் கூட்டமைப்பினால் தனித்து ஆட்சியை அமைக்க முடியவில்லை. இந்தத் தேர்தல் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் ஒரு பின்னடைவு என்றுதான் கூற வேண்டும். அதேவேளை கஜேந்திரகுமாரின் கட்சி கணிசமான வாக்குகளைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. ஆனால் அந்தக் கட்சியால் எந்தவொரு சபையிலும் ஆட்சியை அமைக்க முடியவில்லை இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி ஈ.பி.டி.பி ஆகிய கட்சிகளுக்கும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க வகையில் வாக்குகள் கிடைத்தன. விக்னேஸ்வரனின் இரகசிய ஆதரவு கஜேந்திரகுமாருக்குக் கிடைத்ததையும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால் எழுக தமிழ் பேரணியின் போது விக்னேஸ்வரனுக்கும் கஜேந்திர குமாருக்குமிடையே விரிசல் காணப்பட்டது.

### பிரிவு நிரந்தரமா?


தமிழ் மக்கள் பேரவை வேறு விக்னேஸ்வரன் வேறு எனப் பிரித்துப் பார்க்க முடியாது. பேரவையை வழிநடத்திச் செல்பவர் விக்னேஸ்வரன் என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். பேரவையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட எழுக தமிழ் பேரணிக்கு எதிர்பார்த்த வரவேற்புக் கிடைக்கவில்லை. பேரணியில் தோல்வி விக்னேஸ்வரனைப் பெரிதும் பாதித்துவிட்டது. அவருடன் ஒட்டி உறவாட நினைத்தவர்கள் தூரவிலகிச் செல்லவேண்டிய நிலையும் உருவாகி விட்டது. இனிமேல் அவரது கட்சியுடன் இணைந்து செயற்படுவதற்குப் பல தடவைகள் யோசிக்க வேண்டிய நிலைகூடக் காணப்படுகின்றது.

கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற ஆசனங்களையாவது அடுத்த தேர்தலிலும் பெற வேண்டுமென்ற முனைப்புடன் செயற்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. கூட்டமைப்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இணைவதற்கான சாத்தியம் இல்லையென்றுதான் கூறவேண்டும். கூட்டமைப்பை மோசமாக விமர்சித்துவிட்டு அதனுடன் இணைவது தொடர்பாக அந்தக் கட்சி சிந்திக்கவே முடியாது.

ஆகவே இனிவரும் தேர்தல்களில் தமிழர்கள் பல்வேறு திசைகளில் பிரிந்து செயற்படப்போவது உறுதியாகிவிட்டது. இந்த நிலையில் ஐந்து கட்சிகளும் தொடர்ந்து ஒன்றாகச் செயற்படுமெனக் கூறமுடியாது. தமிழர்களிடம் சுயநலம் குடிகொண்டு இருக்கும் வரையில் அவர்களிடத்தில் ஒற்றுமையை எதிர்பார்ப்பது பகற்கனவாகவே போய் முடிந்து விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக இடைவெளி தொடர வாக்களிப்போம்



**தியேட்டர்காரர் நடத்தும் கூட்டங்களில் எந்தக் கேள்வி யும் கேட்கும் எண்ணம் சிந்தனை எந்த அரச பணியாளனுக்கும் வராது. ஏனெனில் வெள்ளை வானும், கடந்த காலங்களில் வீதி வீதியாகச் சுடப்பட்டவர்களும் நினைவுக்கு வரவே, அரச பணியாளர்கள் அமைதியாகிவிடுவார்கள். தியேட்டர்காரரின் அல்லக் கைகளும், எடுபிடிகளும் நிர்வாக அதிகாரிகளைப் போட்டு ஆட்டுவிப்பார்கள்.**

■ திருமுருகன்

தேர்தல்பணிகளில் ஈடுபடும் அரச பணியாளர்கள் நாளை வியாழக்கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமையும் தமது வாக்குகளை அளிக்கவுள்ளனர். 2019ஆம் ஆண்டுக்கான அரச தலைவர்தேர்தலுக்கானபுள்ளடியிடல் நாளை ஆரம்பமாகவுள்ளது.

நடக்கவிருக்கின்றஅரசதலைவர்தேர்தல் தொடர்பில் தமிழ் மக்களிடையே குழப்பங்கள் இல்லாமல் இல்லை. தமிழ்மக்களில்கணிசமானோர்நடுத்தர வர்க்கத்தினர். அரச பணியாளர்களாக அதிகமாக அவர்களே இருக்கின்றனர். அவர்கள்தான்தமிழ்மக்களின் ஒட்டுமொத்தநிலைப்பாட்டையும்தீர்மானிப்பவர்கள். எமது சமூகத்தில் அரச பணியாளர்களுக்கு தனித்துவமான இடம் உண்டு. அவர்கள் அரசியல் தொடர்பில்எடுக்கும்முடிவுகளைசாமானிய மக்கள் மதிக்கும், அதை அடிதொடரும் கலாசாரம் இங்கு உண்டு. எனவே நாளை வாக்களிக்கும் அரச பணியாளர்களின் தீர்மானம், முடிவு என்பது மிக முக்கியமானது.

2005ஆம் ஆண்டு மகிந்த அரச தலைவரான பின்னர், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் என்றபெயரில்தமிழினஅழிப்புஅரங்கேறியது. வகைதொகையின்றி வன்னியில் மக்கள் கொல்லப்பட்டனர். அதே காலப் பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாடு ஊரடங்குக்குள் முடக்கப்பட்டது. ராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் குடாநாடு கொண்டுவரப்பட்டது. ஆனால், வீதி வீதியாக இளைஞர்கள் கொல்லப்பட்டனர். வெள்ளை வான்களில் இளைஞர்கள் இரவுகளில் கடத்தப்பட்டனர். இவர்களுக்குஎன்னநடந்தது என்பது இன்றுவரை தெரியாத மர்மம்.

இந்தக் கொடூரங்களின் காயங்கள் ஆறும் முன்பே, 2010ஆம் ஆண்டு ஜனவரிமாதம்அரசதலைவர்தேர்தல் வந்துநின்றது. ஒருபுறம் போரை நடத்திய மகிந்த மறுபுறம் வழிநடத்திய தளபதி பொன்சேகா. இந்தத் தேர்தலிலும் சிவாஜிலிங்கம் போட்டியிட்டார்தான். ஆனாலும் எவரும் அவரைக் கணக்கெடுக்கவில்லை. காரணம், மகிந்த ராஜபச்சவரக்கூடாதுஎன்றஓர்மத்தில் பொன்சேகாவுக்குவாக்களித்தார்கள். ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஸ் பிரேமசந்திரன் 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெற்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மாநாட்டில், சரத் பொன்சேகா மீது கொண்ட காதலால் அவரை ஆதரிக்கவில்லை என்றுகூட குறிப்பிட்டிருந்தார். மகிந்த வரக்கூடாதுஎன்பதற்காகஅன்றுதமிழர்கள் எல்லோரும் வாக்களித்தார்கள்.

ஆனால், சிங்கள மக்களின் வாக்குகள்மாத்திரம்மகிந்தவின்வெற்றிக்குப் போதுமாகியது. தமிழர்களின் எதிர்பார்ப்பு வீணாகியது.

2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலைதமிழ்மக்கள்எதிர்கொண்டனர். தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டபின்னரானஅந்தஐந்து ஆண்டுகளில் அனுபவித்த துன்பங்கள், வலிகளைஉணர்ந்து வாக்களித்தனர். மகிந்தவை வேரோடு சாய்க்க வேண்டும் என்ற வேகம், வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போல எல்லோரையும்கிளப்பியது. வடக்கில் லட்சோப வாக்குகள்வித்தியாசத்தில்மகிந்தவை தோற்கடித்திருந்தார் மைத்திரிபால சிறிசேன. தமிழ்மக்களின்எதிர்பார்ப்பு நிறைவேறியது.





2019ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலிலும் இதே நிலைமைதான். மகிந்தராஜபக்சவுக்குப்பதிலாககோத்தபாயராஜபக்சகளமிறங்கியிருக்கின்றார். தமிழர்களின் எதிர்பார்ப்பு எல்லாம் கோத்தபாய தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதுதான். ராஜபக்சாக்கள்குடும்பமேஆட்சிக்கு வரக்கூடாது என்பதே தமிழர்களின் இலக்கு. போரில் கொன்றொழித்துவிட்டு அது தொடர்பில் எகத்தாளமாகப் பேசும்ராஜபக்சாக்கள்நாட்டைஆளக்கூடாது.

கோத்தபாய ராஜபக்ச ஆட்சிக்கு வரக்கூடாது என்றால், தமிழர்களின் வாக்குகள் கணிசமாக அவரின் போட்டி வேட்பாளருக்குக்கிடைக்கவேண்டும். அந்த வாக்குகள் சிதறுமாக இருந்தால், கோத்தபாயவின்வெற்றிக்கான வாய்ப்பு அதிகரிக்கும்.

கோத்தபாய வெற்றி பெற்றால் என்ன நடக்கும் என்பதை அரச பணியாளர்கள் ஒரு கணம் நினைத்துப் பார்க்க வேண்டும். 2010ஆம் ஆண்டிலிருந்து 2015ஆம் ஆண்டு வரை நீங்கள் எப்படிப் பணியாற்றினீர்கள்? நினைவிருக்கின்றதா?

அரசபணியாளர்கள் அடிக்கடி கூட்டத்துக்காக தியேட்டருக்கு அழைக்கப்படுவீர்கள். அங்கு கொடுக்கும் அனுப்பு எத்தகையது? நிறைவேற்று அரச பணியாளர்கள் தங்களின் முன் நிகழ்வுத் திட்டத்தை தியேட்டக்காரருக்கு நேரத்துடன் ஒப்படைக்க வேண்டும். அரசு வழங்கும் உதவித் திட்டங்களுக்கு அரசபணியாளர்கள் சுயமாக, நீதியின் படி உரிய சுற்றறிக்கையின் படி பயனாளர்களைத் தெரிவு செய்ய முடியாது. தியேட்டரிலிருந்து பக்ஸில் திணைக்களத்துக்கு வரும் பெயர்ப் பட்டியலைகேட்டுக்கேள்வியின்றிஅனுமதிக்க வேண்டியிருக்கும். கேள்வி கேட்டாலோ, அதைஅனுமதிக்கமறுத்தாலோ, இடமாற்றம் நிச்சயம்.

இவற்றுக்கு மேலாக, தியேட்டர்காரர் நடத்தும்கூட்டங்களில்எந்தக்கேள்வியும்கேட்கும்எண்ணம்சிந்தனைஎந்த அரச பணியாளனுக்கும் வராது. ஏனெனில்வெள்ளை வானும், கடந்த காலங்களில் வீதி வீதியாகச் சுடப்பட்டவர்களும் நினைவுக்கு வரவே, அரச பணியாளர்கள்அமைதியாகிவிடுவார்கள். தியேட்டக்காரரின் அல்லக்கைகளும், எடுபிடிகளும்நிர்வாகஅதிகாரிகளைப்போட்டு ஆட்டுவிப்பார்கள்.

எந்த அதிகாரமும் இல்லாத அவர்களின்சொற்கேட்டுத்தலையாட்டவேண்டிய நிலமைதான் அதிகாரிகளுக்கு.

இவை எல்லாவற்றையும் பல்லைக் கடித்துக் கொண்டு, மனச்சாட்சிக்கு விரோதமாகச்செயற்படவேண்டியிருக்கும்.

இவற்றுக்கு மேலாக, கொழும்பிலிருந்து நாட்டின் தலைவர் வந்தாலோ அல்லது தலைமை அமைச்சர் வந்தாலோ, அமைச்சர்கள் வந்தாலோ அவர்களுக்குசலாம்போடவேண்டியிருக்கும்.

அவர்களுக்கு இன்ன பிற தேவைகள் எல்லாவற்றையும் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கும். இடையில் வரும் தேர்தல்களில் எல்லாம், ஆட்சியிலிருக்கும்கட்சிக்குஆதரவாகஅரசபணியாளர்கள் வாக்குக் கேட்கவேண்டியிருக்கும். அவர்களின் பரப்புரைக் கூட்டங்களுக்கும்அரசநிதியைச்செலவிட வேண்டியிருக்கும்.

ஆனால் கடந்த 2015ஆம் ஆண்டு தொடக்கம் இப்போது வரையில் அரச பணியாளர்கள்இந்தக்கசப்பானஅனுபவங்களைப் பெறவில்லை. எல்லாம் கிடைத்துவிடவில்லை என்றாலும், ஜனநாயகஇடைவெளி, சுதந்திரமாகப் பணியாற்றுவதற்கானசூழல்கிடைத்திருந்தது.

அந்தச் சூழலைக் கெடுக்கப் போகின்றோமா? இல்லை பாதுகாக்கப் போகின்றோமா? அரசபணியாளர்கள் ஒவ்வொருவரும்நாளைஇடப்போகும் புள்ளடிகளே இதற்குப் பிள்ளையார் சுழி போடப் போகின்றது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடிப்படை முகாமுக்குள் நுழைந்தனரென 6பேர் கைது

சீருடையை எடுத்து குற்றச்செயலில் ஈடுபட முயற்சி

முல்லைத்தீவு, ஒக். 30
முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள சிறப்பு அதிரடிப்படை முகாமுக்குள் அனுமதியின்றி நுழைந்தனர் என்று குற்றஞ்சாட்டி ஆறு பேரை சிறப்பு அதிரடிப்படையினர் கைதுசெய்து பொலிஸார் ஊடாக நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த 27ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.
தென்பகுதியைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
முகாமுக்குள் நுழைந்து சிறப்பு அதிரடிப்படைச் சீருடையை எடுத்து தவறான நடவடிக்கைக்குப் பயன்படுத்த முற்பட்டனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் அவர்கள் குற்றச்சாட்டில் கூறியுள்ளனர்.
கைதுசெய்யப்பட்ட ஆறுபேரில் ஒருவர், ஏற்கனவே முல்லைத்தீவு மாவட்டத்தில் புதையல் தோண்டியகுற்றச்சாட்டில் உள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. இவர்களை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் மன்றில் முன்னிலை ப்படுத்தியபோது எதிர்வரும் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (த- ரி3)

## வருடாந்த பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.30
யாழ்ப்பாணம் தீபம் கல்வி நிலையத்தின் வருடாந்தப் பரிசளிப்பு நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூதுக் கலையகத்தில் இடம்பெறும். ஆசிரியர் தி.வேந்தன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பிரதி அதிபர் சந்திரமௌலீசன் லலீசன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கல்வியல் துறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா, மதிப்புறு விருந்தினர்களாக அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய அதிபர் சேவியர் சுவைனஸ், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப் பொருளியல் துறை விரிவுரையாளர்லோசன் றெஜினோல்ட் ஆகியோர் கலந்து கொள்வர். நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (க-104)



உதவும் கரங்கள் அமைப்பினரால் நாச்சிக்குடா ஜேம்ஸ்புரம் தூய ஆவியானவர் ஆலய வளாகத்தில் பொது மக்களின் நன்மை கருதி, குழாய்க்கிணற்றில் இருந்து மக்கள் தண்ணீர் பெற்றுக் கொள்வதற்கு இலகுவாகக் கைப்பம்பி பூட்டப்பட்டு நேற்று முன்தினம் மக்கள் பாவனைக்குக் கையளிக்கப் பட்டது. (க-222)

## முன்னாயத்த கலந்துரையாடல்

முல்லைத்தீவு,ஒக்.30
வட கீழ் பருவப்பெயர்ச்சி காலநிலை மாற்றம் தொடர்பான முன்னாயத்தக்கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். காலநிலை மாற்றத்தால், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்படும் வெள்ளப் பெருக்கு மற்றும் இயற்கை இடர்களை எவ்வாறு எதிர்கொள்வது?, அதில் இருந்து மக்களை எவ்வாறு பாதுகாப்பது? தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது. முல்லைத்தீவு மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் கலந்துரையாடலில், அரச திணைக்கள அதிகாரிகள் மற்றம் முப்படை அதிகாரிகள், அரச சார்பற்ற திணைக்களங்களின் அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் கலந்து கொள்வர் என்று மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் எஸ்.லிங்கேஸ்வரகுமார் தெரிவித்துள்ளார். (க-ரி3)

## ராணுவ வாகனம் மோதி மதகுருவின் கார் விபத்து



யாழ்ப்பாணம் ஒக்.30
இராணுவ வாகனம் மோதி, கத்தோலிக்க குருவானவரின் மகிழுந்து கடும் சேதமடைந்தது. இந்த விபத்து உரும்பிராயில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
பலாலியில் இருந்து பலாலி வீதி வழியாக வேகமாக வந்த இராணுவ துருப்புக் காவி வாகனம், உரும்பிராய்ச் சந்தியில் கோப்பாய் பகுதியில் இருந்து வந்த குருவானவரின் மகிழுந்துடன் மோதியது. இதனால் குருவானவரின் மகிழுந்தின் முன்பகுதி பலத்த சேதமடைந்தது.
இரு வாகனங்களும் நீண்ட நேரமாக அப்பகுதியிலேயே தரித்து நின்றன. அதனால் சுமார் ஒரு மணித்தியாலத்துக்கு மேலாக அப்பகுதியில் வாகன நெரிசல் ஏற்பட்டது.
கோப்பாய்ப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட போதும் ஒரு மணித்தியாலத்துக்கும் மேல் அந்தப் பகுதிக்குப் பொலிஸார் வரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (க-104)



நிலைபேறான யாழ்ப்பாணம் எனும் தொனிப்பொருளிலானகண்காட்சி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள தந்தை செல்வா அரங்கில் அண்மையில் நடைபெற்றது. யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் மற்றும் மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன் உள்ளிட்டவர்கள் பார்வையிட்டனர். (க)


யாழ்ப்பாண மாவட்ட

## மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க கடற்றொழிலாளர் இணையம் அமைப்பு



யாழ்ப்பாணம்,ஒக்.30
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள மீனவர்களின் பல்வேறு நலன் சார்ந்த விடயங்களை முன்னெடுப்பதற்காக மாவட்டக் கடல் தொழிலாளர் இணையம் உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இணையம் உருவாக்குவதற்கான ஆரம்ப நிகழ்வு அண்மையில் ரில்கோ விடுதியில் நடைபெற்றது.
இதன் போது புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெற்றது. தலைவராக என்.வி சுப்பிரமணியம், செயலாளராக அன்னராசா, பொருளாளராக ரி.பாலசிங்கம், உப தலைவராக வர்ணகுலசிங்கம் ஆகியோர் தெரிவு செய்யபட்டனர்.
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை களை எடுத்துக் கூறும் பலமான மீனவ அமைப்பாக தொழில் படல், கடல் வளங்களைப் பாதுகாத்தல், கடலை மாசு படியாமல் பாதுகாத்தல், கடல் சார் தொழில்களின் அபிவிருத்தி ,கடல்த் தொழிலை மையமாக வைத்து வாழ்க்கை நடத்தும் ஏனையோரின் வாழ்வாதாரம், பெண் தலைமைத்துவக் குடும்பணர்களின் வாழ்வாதாரம் போன்ற விட யங்களைக்கவனத்தில் கொண்டு மீனவர்கள் மற்றும் கடல் சார் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த இணையம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. ஆரம்ப நிகழ்வில் சண்டிலிப்பாய், காரைநகர், ஊர்காவத்துறை, வடமராட்சிக் கிழக்கு உள்ளிட்ட மீனவர் சங்கங்களும், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்டப் பிரதி நிதிகள், மீனவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-7)

# குருநகர் கடலோரங்களை ஆவணப்படுத்தும் கண்காட்சி





யாழ்ப்பாணம்,ஒக்.30
யாழ்ப்பாணத்தில் மிக மாசுபட்ட கடலோரப் பகுதிகளில் ஒன்றான குருநகர் கடலோரப் பகுதிகளை ஆவணப்படுத்தும்விழிப்புணர்வு ஒளிப்படக் கண்காட்சி குருநகர் மீன் சந்தையில் நேற்று நடைபெற்றது. காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நடாத்தப்பட்ட இந்த கண்காட்சியில், குருநகர் கடலோர பகுதிக் காட்சிகள், மீனவர்கள் தொடர்பான காட்சிகள் ஒளிப்படங்களாகக் காட்சிப்படுத்தப் பட்டிருந்தன.
ஒளிப்படக் கலைஞர் தர்மபாலன் ரிலக்ஸனால் எடுக்கப்பட்டிருக்கும் படங்களே காட்சிப்படுத்தப்பட்டிந்தன. சந்தைக்கு வருகை தந்த மக்கள் ஒளிப்படங்களைப் பார்வையிட்டு தமது கருத்துக்களையும் தெரிவித்தனர். (க-ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெரோய்ன் கடத்தினரென்று கைதான 6 பேரும் விடுதலை

## யாழ்ப்பாண மேல்நீதிமன்று நேற்றுத் தீர்ப்பு
## சட்ட நடவடிக்கையில் வழுக்கள் உள்ளன என்றும் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக். 30

உயிர்க்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்னை இலங்கைக்குக் கடத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட 6 இந்திய மீனவர்களையும் விடுவித்து விடுதலை செய்தது யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம்.

"சட்ட நடவடிக்கை முறைகளில் வழுக்கள் மற்றும் வழக்குத்தொடுநர் தரப்பில் முன்வைக்கப்பட்ட சாட்சியங்களின் நம்பகத்தன்மையில் குறைவு, விசாரணை நடவடிக்கைகளில் புரியப்பட்ட தவறுகள் என்பவற்றின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் வழக்குத்தொடருநர் தரப்பில் சந்தேகத்துக்கிடமின்றி எண்பிக்கப்படவில்லை என்று மன்று வெளிப்படுத்தி, ஒவ்வொரு எதிரிகளையும் குற்றமற்றவர்கள் எனக் கண்டு அவர்களை வழக்கிலிருந்து விடுவித்து விடுதலை செய்கின்றது என்று யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் தீர்ப்பளித்தார்.

2017ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதியன்று காங்கேசன்துறைக் கடற்பரப்பில் வைத்து 6 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் 8 கிலோ 128 கிராம் 33 மில்லிக்கிராம் ஹெரோயின்,போதைப் பொருள் மீட்கப்பட்டதாகக் கடற்படையினர் தெரிவித்திருந்தனர்.

தமிழகம், காரைக்காலைச் சேர்ந்த சேகர் அருள், துள்ளுக்குட்டி பொன்னுசாமி, சுப்பிரமணியம் தமிழ்மணி, சுப்பிரமணியம் கஜேந்திரன், அழகு ராஜா ஜெயசீலன், சுப்பிரமணியம் பாக்கியராஜ் ஆகிய 6 பேருமே கைது செய்யப்பட்டனர். அவர்கள் காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். மல்லாகம் நீதிவான் மன்றில் முற்படுத்தப்படு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு எதிராக யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் கடந்த மே 31ஆம் திகதி 3 குற்றச்சாட்டுக்களின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. ஹெரோய்ன் உடைமையில் வைத்திருந்தமை, இறக்குமதி செய்தமை மற்றும் வியாபாரம் செய்தமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்கள் அதில் முன்வைக்கப்பட்டன.

வழக்குத் தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் வழக்கை நெறிப்படுத்தினார். எதிரிகள் 6 பேர் சார்பிலும் மூத்த சட்டத்தரணிகள் என்.சிறிகாந்தா, வி.திருக்குமரன், சட்டத்தரணிகள் வீ.கௌதமன், சி.ரிஷிகேசன் ஆகியோர் முன்னிலையாகினர். வழக்குத் தொடுநர் தரப்பில் கடற்படை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், பகுப்பாய்வுத்திணைக்களம், நில அளவைகள் திணைக்கள அதிகாரிகள் என 15 பேர் சாட்சியமளித்தனர். எதிரிகள் 6 பேரும் கூண்டுச் சாட்சியமளித்தனர். வழக்குத் தொடுநர் தரப்பு, எதிரிகள் தரப்பு தொகுப்புரைகள் நிறைவுற்ற நிலையில் வழக்கின் தீர்ப்பை நீதிபதி நேற்றுமுன்தினம் வாசித்தார்.

இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்பானது 12 கடல் மைல் எனச் சொல்லப்பட்டு அதற்கப்பால் இடம்பெற்ற குற்றச்செயல்கள் தொடர்பில் யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நியாயாதிக்கம் அற்றதென்ற வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது. கடல் நீர்ப்பரப்பு நியாயாதிக்கங்கள் தொடர்பில் 12 கடல் மைல் தொலைவில் உள்ள நீர்ப்பரப்புக்கு அப்பாலான பொதுவான நீர்ப்பரப்பானது ஒரு நாட்டுக்கு உரியதென்பது கேள்விகளுக்கு அப்பால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும். அதற்கப்பால் பன்னாட்டுக் கடற்பரப்பு காணப்படுகின்றது. இலங்கையையும் இந்தியாவையும் பொறுத்தளவில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடைப்பட்ட பாக்குநீரிணை ஒரு வகையாகவும் சற்று மேற்புறமான வங்காள விரிகுடா கடற்பிராந்தியம் வேறு வகையிலும் ஆள்புல நீர்ப்பரப்பை கொண்டுள்ளது. பாக்குநீரிணையின் அகலம் 22 கடல் மைல் என்ற வகையில் இடையே ஆள்புல நீர்ப்பரப்பு 12 கடல் மைலாகக் காணப்படவில்லை என்பது குறிப்பிடப்படுகின்றது. அத்துடன், அந்தப் பகுதியில் பொதுவான நீர்ப்பரப்பு காணப்படவில்லை என்பது குறிப்பிடப்படுகின்றது. ஆயினும் வங்காள விரிகுடா கடற்பிராந்தியம் இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்பு இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பொதுவான நீர்ப்பரப்பு பன்னாட்டுக்கடற்பரப்பு என பலவாறான வலயங்கள் காணப்படுகின்றன. தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 32, பிரிவு 138 என்பன ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் (ஆறு பேர்) தொடர்பில் ஒரே குற்றப்பகர்வில் ஒரே குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளமை பெரும் தவறென்று இந்த மன்று ஏற்றுக்கொள்கின்றது. முழுமையான உடைமை எனப்படும் போது, ஒரு பொருள் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவரின் முழுமையான உடைமையில் இருக்க முடியாது என்பதும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

### கடற்படையினரா?

ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்தமை, இறக்குமதி செய்தமை, வியாபாரம் செய்தமை என்றவாறு குற்றச்சாட்டுக்கள் காணப்படுகின்றன. ஹெரோய்ன் இறக்குமதி செய்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இறக்குமதி எனப்படும் போது, "பொருள்களை வெளிநாட்டிலிருந்து நாட்டுக்குள் கொண்டு வருதல் என்பதாகும். வழக்கில் நெறிப்படுத்தப்பட்ட சாட்சியங்களின் பிரகாரம் சொல்லப்பட்ட ஹெரோய்ன் இலங்கை நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதா? என்பது கேள்வியாகின்றது. அப்படி கொண்டு வந்திருந்தாலும் அதனை இலங்கைக் கடற்படையினரே இலங்கைக்குள் கொண்டு வந்துள்ளனர் என்பது வெட்டவெளிச்சமானது. இவை உட்பட பல விடயங்களை மேல்நீதிமன்று சுட்டிக்காட்டியுள்ளது. இவற்றின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் வழக்குத் தொடருநர் தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி எண்பிக்கப்படவில்லை என மன்று வெளிப்படுத்தி அவர்களை வழக்கிலிருந்து விடுவித்து விடுதலை செய்கின்றது என்று தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்திய மீனவர்கள் ஆறு பேரையும் பத்திரமாக அவர்களுடைய இடங்களுக்கு அழைத்துச் சென்று உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் யாழ்ப்பாண மேல் நீதிமன்று உத்தரவிட்டது. (த-37)

# அலுவலகத்துக்குள் புகுந்து பெண் ஊழியர் மீது தாக்குதல்

## அலுவலர்கள் ஒரு மணி நேரம் கவனவீர்ப்பு

பிரதேச சபையில் கடமையாற்றும் பெண் ஊழியர் ஒருவர் கடமை நேரத்தில் இனம் தெரியாத நபரால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து, அலுவலகத்துக்கு முன்பாக சுமார் ஒரு மணி நேரம் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட அலுவலர்கள், சம்பந்தப்பட்ட நபருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு செயலரைக் கோரியுள்ளனர்.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் கீழுள்ள ஆனைக்கோட்டை உப அலுவலகத்தில் உதவி நூலகராகக் கடமையாற்றும் பெண் ஊழியர் ஒருவர் கடந்த சனிக்கிழமை இனம் தெரியாத நபரொருவரால் தாக்குதலுக்குள்ளானார். இந்த நிலையில் கடமை நேரத்தில் அலுவலகத்தில் வைத்து இனத்தெரியாத நபரால் அலுவலர் தாக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ள பிரதேச சபை ஊழியர்கள், உப காரியாலயத்துக்கு முன்பாக ஒரு மணி நேரம் போராட்டத்தில் ஈடுபட்டனர். (த-115)

# காலங்கடந்த உர விநியோகம் தமக்குப் பயனளிக்கவில்லை

## விவசாயிகள் தெரிவிக்கின்றனர்

தென்மராட்சி, ஒக்.30

காலங்கடந்த பின்னர் வழங்கப்பட்ட மானிய உரவகைகளைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதெனவும் செப்ரெம்பர் முதல் வாரத்தில் வழங்கவேண்டிய பயிர்களுக்கான அடிக்கட்டுப் பசளைகளை நெல் விதைத்துப் பயிரான பின்னர் ஒக்ரோபர் மாத பிற்பகுதியில் வழங்கியதால் பயன்படுத்த முடியவில்லையெனவும் பிரதேச நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

விவசாயிகளுக்கு வருடாந்தம் விவசாயத் திணைக்களத்தால் கமக்கார அமைப்புக்களின் ஊடாக விவசாயிகளிடம் பதிவுசெய்து அந்தந்த கமநல சேவைகள் நிலையங்களின் ஊடாக மானிய உர வகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கமக்கார அமைப்புக்கள் பதிவுகளை மேற்கொண்டு வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதால் இந்தவருட மானிய உரவகைகள் வழங்குவதற்கான பதிவுகள் கமநல சேவைகள் அதிகாரிகள் கிராம அலுவலர்கள் முன்னிலையில் பதிவுகள் மேற்கொண்டனர்.

இந்தவருடம் ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் விதைப்பு மேற்கொள்ளக்கூடிய மழைவீழ்ச்சி காணப்பட்டதால் நெற்செய்கையாளர்கள் முற்கூட்டியே விதைத்திருந்தனர். அதற்கு அடிக்கட்டுப் பசளைகளைத் தனியார் கடைகளில் கொள்வனவு செய்து விதைப்பை மேற்கொண்டனர். விதைக்கப்பட்ட நெல், பயிரான பின்னரே விவசாயத் திணைக்களத்தால் ஒக்ரோபர் மாதத்தில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

காலம் கடந்த பின்னர் மானிய உரவகைகள் வழங்கப்பட்டதால் அடிக்கட்டுப் பசளையை உரிய காலத்தில் பயன்படுத்த முடியாமல் வீட்டில் வைத்துள்ளனர் எனவும் சிலர் மானிய உரவகைகளைப் பெறவில்லையெனவும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக விவசாயத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, மானிய உரம் தொடர்பாக விவசாயிகளிடம் நேரடியாக பதிவை மேற்கொண்டு உரிய திணைக்களத்துக்கு அனுப்பிய போதிலும் அங்கிருந்து உரவகைகளைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக உரம் விநியோகிக்க முடியவில்லை.

கொண்டு வரப்பட்ட உரவகைகளை, பதிவு செய்த அனைவருக்கும் வழங்கியுள்ளோம். மேலதிகமாகக் காணப்பட்டவற்றைப் பதிவு செய்த வேளையில் தவறவிட்டவர்களுக்கு அறிவித்து விநியோகித்து வருகிறோம். என்று தெரிவித்தனர். (த-9)

# முள்ளியவளையில் குழு மோதல் 7பேர்காயமடைந்துசிகிச்சையில்

முல்லைத்தீவு, ஒக். 30

முல்லைத்தீவு முள்ளியவளை முதலாம் வட்டாரப் பகுதியில் உயிரிழந்த ஒருவரின் இறுதி நிகழ்வின் பின்னர் இரு இளைஞர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற வாள்வெட்டு மற்றும் தாக்குதல்களில் ஏழு இளைஞர்கள் காயமடைந்தனர். அவர்கள் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வாய்த்தர்க்கம் முரண்பாடாக மாறி கைகலப்பாகியது என்று பொலிஸார் தெரிவித்தனர். முள்ளியவளைப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர். (த-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிவாயுவை அதிகரித்த விலையில் விற்பனை செய்வோர் கைதாகுவர்

கொழும்பு, ஒக். 30

அதிக விலைக்கு சமையல் எரிவாயுவை விற்பனை செய்யும் வர்த்தகர்களை சுற்றிவளைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு விற்பனை செய்த பல வர்த்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

சமையல் எரிவாயு அதிக விலைக்கு விற்பனைசெய்யப்படுமாயின், அது குறித்து தமது சபைக்கு அறிவிக்குமாறு நுகர்வோர் விவகார அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் பிரியந்த விஜேசிங்க, மக்களுக்கு ஆலோசனைவழங்கியுள்ளார்.

1977 என்ற தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு தமது முறைப்பாடுகளைமுன்வைக்கமுடியும்.

கடந்தசிலநாள்களாகசந்தைகளில் சமையல் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. தற்போது 4 ஆயிரம் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் தமது நிறுவனத்தின் கையிருப்பிலுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் விற்பனை மற்றும் வர்த்தகப் பணிப்பாளர் ஜனக பத்திரத்ன கூறியுள்ளார். மேலும்4000சிலிண்டர்களை விரைவில் இறக்குமதி செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சமையல் எரிவாயு சிலிண்டர்களை ஏற்றிய கப்பல் கொழும்பு துறைமுகத்தைவந்தடைந்துள்ளதாகலாஃப் எரிவாயுநிறுவனத்தலைவர்வேகபிட்டிய கூறியுள்ளார். (ஒ.5)

ஆள்கொணர்வு மனுக்கள் வழக்கில்

# இடைக்காலக் கட்டளைக்கு எதிரான மனு கைவாங்கல்

யாழ்ப்பாணம், ஒக். 30

நாவற்குழியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பிலான, ஆள்க்கொணர்வு மனுக்கள் மீது யாழ்ப்பாண மேல் நீதிமன்றம் வழங்கிய இடைக்காலக் கட்டளையை ஆட்சேபித்து உயர் நீதிமன்றில் செய்யப்பட்டமேன்முறையீட்டு மனுவை சட்ட மா அதிபர் திணைக்களம் நேற்றுக் கைவாங்கியது.

இளைஞர்கள் சார்பில், அவர்களுடைய பெற்றோர் சட்டத்தரணிகள் ஊடாக மனுக்களைத் தாக்கல்செய்திருந்தனர்.

இந்த மனு மீதான விசாரணை உயர் நீதிமன்ற நீதியரசர்கள் மூவரடங்கிய அமர்வு முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாண மேல் நீதிமன்றின் கட்டளையை ஆட்சேபித்து மற்றொரு மனுவை தாக்கல் செய்யும் உரிமையைத் தக்க வைத்துக்கொண்டுஇந்த மனுவைக் கை வாங்குவதாக சட்ட மா அதிபர் திணைக்களம் சார்பில் முன்னிலையான மேலதிக மன்றாடியார் அதிபதி செய்த்திய குணசேகர மன்றுரைத்தார்.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கலாநிதி கு. குருபரன், ஆட்சேபனையில்லை என்று மன்றுரைத்தார். அதனையடுத்து மேன்முறையீட்டு மனுவை உயர்நீதிமன்று தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

1996ஆம் ஆண்டு நாவற்குழிபடைமுகாமில் இராணுவ அதிகாரியாகவிருந்த துமிந்த கெப்பிட்டிவலான தலைமையிலான படையினர், கைது செய்து கொண்டுசென்ற 24 தமிழ்இளைஞர்கள் பின்னர் காணாமல் ஆக்கப்பட்டனர். அவர்களில் 3 இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் அவர்களுடைய பெற்றோர் யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் ஆள்கொணர்வு எழுத்தாணை மனுக்களைத் தாக்கல்செய்திருந்தனர். மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி எஸ்.சுபாசினியின்ஏற்பாட்டில்சட்டத்தரணி குருபரன் மனுக்களை நெறிப்படுத்தினார்.

2017 நவம்பர் மாதம் இந்த ஆள்க்கொணர்வு மனுக்கள் யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் தாக்கல்செய்யப்பட்டிருந்தன. யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் இந்த மனுக்களை பூர்வாங்க விசாரணையுடன் தள்ளுபடி செய்ய சட்ட மா அதிபர் திணைக்களம் பல ஆட்சேபனைகளை முன்வைத்தது. எனினும் அவற்றை நிராகரித்த யாழ்ப்பாண மேல் நீதிமன்றநீதிபதிஅன்னலிங்கம்பிரேமசங்கர், மனுதாரர்களின் கோரிக்கைகள் தொடர்பில் விசாரணை நடத்தி யாழ்ப்பாணமேல் நீதிமன்றுக்குஉரியபரிந்துரையை வழங்குமாறு சாவகச்சேரி நீதிவான் மன்றுக்குஉத்தரவிட்டார்.

அதனடிப்படையில் சாவகச்சேரிநீதிவான்மன்றில் இந்த மனுக்கள் மீதான விசாரணைகள் கடந்த மே மாதம் ஆரம்பிக்கப்பட்டன. எனினும், யாழ்ப்பாண மேல் நீதிமன்றம் வழங்கிய கட்டளைக்கு ஆட்சேபனைதெரிவித்து சட்ட மா அதிபர் சார்பில் உயர் நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தது.

இதேவேளை, உயர் நீதிமன்றின் முடிவுக்காக சாவகச்சேரி நீதிவான் மன்ற விசாரணைகள் வரும்நவம்பர்5ஆம்திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

அதனால் விசாரணைகளை ஆரம்பிப்பதற்கான திகதியை வரும் 5ஆம் திகதி சாவகச்சேரி நீதிவான் மன்றம் அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (த)

## நில அளவை தொடர்பில் சிறப்புக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.30

இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் யாழ்ப்பாணம் மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில், யாழ். மாநகர எல்லைப்பிரதேசத்திலுள்ள நில அளவை தொடர்பில் சிறப்புக் கலந்துரையாடல் மாவட்டச்செயலக கேட்போர் கூட்டத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதன் போது தற்பொழுது நில அளவையாளர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் படங்கள், வரைபுகளில் உள்ள சாதக, பாதகங்கள், காணி எல்லை உறுதிப்படுத்தலின் போது போக்குவரத்து வீதிகளுக்கு விடப்பட வேண்டிய அளவுத்திட்டங்கள், நில அளவையில் உள்ள குறைபாடுகள், எதிர்காலத்தில் நிலம் மற்றும் காணி அளவைப்படவரைபில் முறையாக ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய அம்சங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

கலந்துரையாடலில் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட், நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடமாகாண பணிப்பாளர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலர்கள், நில அளவைத் திணைக்களப் பணிப்பாளர்கள், மாவட்ட நில அளவை அலுவலக அதிகாரிகள், மூத்த நில அளவையியலாளர்கள் கலந்து கொண்டனர் மாநகர முதல்வரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (க)





## சவேரியார் பாடசாலையில் ஆசிரியர்களுக்கு மதிப்பளிப்பு

மன்னார்,ஒக்.30

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் 150 வருட பூர்த்தியை முன்னிட்டு ஆசிரியர்களுக்கு மதிப்பளிப்புக்கும் நிகழ்வு பாடசாலை மைதானத்தில் நேற்று இடம்பெற்றது.

'கடந்த காலத்தை நன்றி உணர்வுடன் நினைவு கூறுவோம், எனும் தொனிப்பொருளில் 2019 ஆண்டுக்கான ஆசிரியர் தின நிகழ்வும், அதே நேரத்தில் பாடசாலையில் கற்பித்து இடம் மாற்றம்பெற்று ஓய்வுபெற்றுச்சென்ற ஆசிரியர்கள் ,அதிபர்கள் ,தொண்டர் ஆசிரியர்கள் ,ஊழியர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.

1973 ஆம் ஆண்டுதொடக்கம் தற்போது வரை பாடசாலையில் கடமையாற்றிய சுமார் 300 ஆசிரியர்கள் நிகழ்வில் மதிப்பளிக்கப்பட்டனர்.

அதிபர் அருட்சகோதரர்ரெஜினோல்ட்தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மன்னார் வலயகல்விப்பணிப்பாளர் கே. பிறட்லி, முன்னாள் வலய கல்வி பணிப்பாளர்கள், முன்னாள் அதிபர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில்பல்வேறுகலைநிகழ்வுகள்இடம்பெற்றன. பாடசாலையில் கல்வி கற்பித்த ஆசிரியர்கள்மற்றும்அதிபர்களுக்காகசிறப்பும்திருப்பலியும் இடம்பெற்றது. (க-56)

## கண் சிகிச்சை வாராந்தம் 3 நாள்களாக அதிகரிப்பு

கொடிகாமம்,ஒக்.30

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் கண் சிகிச்சைக்கான மருத்துவ பரிசோதனைகள்வாராந்தம்மூன்று தினங்களாக அதிகரிக்கப்படவுள்ளது. இதுவரை கண் சிகிச்சைக்கான மருத்துவ பரிசோதனைகள் வாரந்தம் இரு நாள்கள் நடைபெற்று வந்தன. சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு செல்வதால், அசௌகரியங்களுக்கு உட்படுவதாக பொது மக்கள் மருத்துவமனைப் பணிப்பாளருக்குத் தெரியப்படுத்தினர். அதற்கமைவாக பணிப்பாளர் குறித்த சேவையை அதிகரிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

இந்தச்சேவையானதுஎதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி திங்கள் தொடக்கம் வாரம் மூன்று நாள்களுக்கு நடைபெறவுள்ளது. அதற்கமைவாக திங்கட்கிழமை பிற்பகல் 1 மணி தொடக்கம் 3 மணி வரையும், வெள்ளிக்கிழமைகாலை8மணிதொடக்கம் முற்பகல் 11 மணிவரையும், சனிக்கிழமை காலை 8 மணிமுதல்முற்பகல்11மணி வரையும்நடைபெறும்.

பாடசாலைமாணவர்களுக்கு மட்டும்சனிக்கிழமைசிகிச்சை நடைபெறும்என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. (க-159)

## வகுப்பறையினுள் புகுந்தது முதலை

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்துவரும்நிலையில், செம்மலைமகாவித்தியாலயத்தில்வகுப்பறைக்குள்முதலைஒன்றுபுகுந்துள்ளது.

நேற்று அதிகாலை மாணவர்கள் பாடசாலைக்குச் சென்ற போது வகுப்பறைக்குள் முதலை இருந்ததை அவதானித்தனர். சம்பவம் தொடர்பில் பாடசாலை நிர்வாகம் வனஜீவராசிகள் திணைக்களத்துக்குத் தகவல்கொடுத்தனர்.

அதனை தொடர்ந்து சம்பவ இடத்துக்குச்சென்றவன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் முதலையை மீட்டனர்.

6.5அடிநீளம்கொண்டகுறித்தமுதலைமுல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முதலைகள் சரணலாயத்தில் விடப்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-ரி3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்களிப்பு நேரத்தை நீடிக்க கட்சிகள் இணக்கம்

## அரசிதழும் வெளியானது

கொழும்பு, ஒக். 30

அரச தலைவர் தேர்தலில் வாக்களிப்பு நேரத்தை நீடிப்பதற்கு அரசியல் கட்சிகள் இணக்கம் தெரிவித்துள்ளன. அதற்கு அமைவாக காலை 7 மணியிலிருந்து மாலை 5 மணி வரையில் மக்கள் வாக்களிக்க முடியும்.

தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் இடையில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை சந்திப்பொன்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போதே, வாக்களிப்பு நேரத்தை 1 மணித்தியாலத்தால் நீடிக்கும் யோசனையை தேர்தல்கள் ஆணைக்குழு முன்வைத்தது. இந்த யோசனைக்கு அரசியல் கட்சிகள் இணக்கம் தெரிவித்துள்ளன. (ஓ,5)

## அரச தலைவர் வேட்பாளர்களிடம் கூட்டணி 11 கோரிக்கை முன்வைப்பு

### அதனை ஏற்போருக்கே ஆதரவாம்

யாழ்ப்பாணம், ஒக். 30

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடம் 11 கோரிக்கைகளை முன்வைப்ப தற்கும், அவற்றை ஏற்பவர்களுக்கு ஆதரவளிக்கவும் தமிழர் விடுதலைக் கூட்டணி தீர்மானித் துள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவர் கா. குலசேகரம் தலைமையில் வவுனியாவில் உள்ள தனியார் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மையச் செயற்குழு கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தலில் எமது கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளும் வேட்பாளருக்கு ஆதரவு அளிக்க வேண்டும் எனவும், இதற்காக போட்டியிடும் பிரதான வேட்பாளர்களைச் சந்திக்க 4 பேர் கொண்ட குழுவையும் கட்சியின் மையச் செயற்குழு தீர்மானித்தது.

அந்தக் கட்சி முன்வைத் துள்ள தீர்மானங்கள் வருமாறு,

இந்தியாவின் அரசியல் சாசனத்தில் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையொத்த அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் தென்ஆபிரிக்க அரசியல் சாசனத்திலுள்ள உரிமைகள் சட்டத்தையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

சிறையில் தொடர்ந்து அடைத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் பொது மன்னிப்புடன் விடுதலை செய்யப்பட வேண்டும். வலிந்து காணா மல் ஆக்கப்பட்டவர்களின் உண்மைத் தன்மையை கண்டறிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கு கிழக்கில் போர் ஆரம்பிக்க முன் இருந்த ராணுவ முகாம்களை தவிர்த்து ஏனைய அனைத்து முகாம்களும் மூடப்பட வேண்டும்.

இன - மத குரோதங்களை தூண்டும் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் கடும் தண்டனைக்குரிய குற்றமாக அறிவிக்க வேண்டும்.

வடக்கு கிழக்கில் புதிதாகத் திட்டமிட்டு நடைபெறும் குடியேற்றங்கள் மற்றும் பௌத்த சிங்கள மயமாக்கல்களை தடுத்து நிறுத்த வேண்டும். கடந்த 10 வருடங்களுக்கு மேலாக போரால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கும், போராளிகளுக்கும் இதுவரை எந்தவிதமான உதவிகளும் வழங்கப்படாதுள்ள நிலையில் அவர்கள் அனைவரையும் மீள இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப வாழ்வாதார உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கு கிழக்கில் வேலை வாய்ப்புக்களில் நியமனங்களை அந்தந்த மாகாணங்களில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கத் தவறும் அதிகாரிகளுக்கு சட்டத்தின் முன் நிறுத்தி, நியாயமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

காலத்துக்குக் காலம் இயற்கை இடர்களாலும், வேறு வகையிலும் பாதிக்கப்படுவோருக்கு உடனடி உதவிகள் வழங்க வேண்டும். தமிழீழ வைப்பகத்தில் அடகுவைக்கப்பட்ட மற்றும் கடனாக வழங்கப்பட்ட நகைகளின் ஒரு பகுதி கொடுக்கப்பட்ட நிலையில் எஞ்சியோருக்கு அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாடு பூராவும் குறைந்த வருமானமுடையவர்களுக்கு 1970க்கு முன்பிருந்ததுபோல இலவசமாக அல்லது குறைந்த விலையில் அத்தியாவசியப் பொருள்களை (கூப்பன் அடிப்படையில்) மீண்டும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும், - என்றுள்ளது. (ஓ,5)

## ஒரு வாக்குக்கூட சிதறிவிடாதவாறு சஜித்துக்கே சகலரும் வாக்களியுங்கள்

### அமைச்சர் ரிசாட் பதியுதீன் கோரிக்கை

கொழும்பு, ஒக். 30

முஸ்லிம் சமூகம் எவரை வெல்ல வைக்க வேண்டும் என்று ஆழமாகச் சிந்திக்க வேண்டும். ஒரு வாக்குக்கூட சிதறடிக்கப்படாமல் ஒட்டு மொத்தமாக சஜித் பிரேமதாசவுக்கு வாக்களித்து அவருடைய வெற்றியை உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்தார். குருநாகல் தல்கஸ்பிட்டியில் ரூபா 20 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட தாய் சேய் மருத்துவ நிலையம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. அதில் முதன்மை விருந்தினர் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார் என்று அவரின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

இன ஒற்றுமை பேசப்படுகிறது. நாங்கள் பிரிந்து வாழ முடியாது. நாங்கள் எல்லோரும் இந்தநாட்டுக்குச் சொந்தக்காரர்கள். நாட்டில் இனவாதம், மதவாதம் இல்லாமல் எல்லோரும் ஒற்றுமையாக வாழ்கின்ற தலைமைத்துவத்தை நாட்டுக்குக் கொண்டு வர வேண்டும் என்று ஒன்று பட்டிருக்கின்றார்கள்.

நாட்டில் மலையகம், தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளைச் சிதறடித்து கொள்ளையிடுவதற்காக இனவாத செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக எல்லா இடங்களிலும் முகவர்கள் கூலிக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள். இந்த முகவர்கள் எப்போதும் சமுதாயத் துக்காகப் பேசியவர்களல்லர். இந்த சமுதாயம் அடக்கி ஒடுக்கி பாதிப்புக்குள்ளாகிய போதெல்லாம் இந்த முகவர்கள் எங்கே இருந்தார்கள் என்று தெரியாது. இவர்கள் நாடு முழுவதும் அலைந்து திரிகின்றமை, சஜித் பிரேமதாசவைத் தோற்கடிப்பதற்காகவே. சிறுபான்மை சமூகத்திற்குள்ளேயே இவ்வாறான சதியைச் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

"நீங்கள் பொறுமையாக இருங்கள். இந்த தேர்தலில் கோத்தா வென்ற பிறகு முஸ்லிம்களுடைய வியாபாரத்தை அடக்குவோம், முஸ்லிம்களுடைய மத நடவடிக்கைகளை ஒடுக்குவோம். அவர்களுடைய குரல்வலைகளை நசுக்குவோம். அவர்களை அடிமைகள் போல நடத்துவோம்" என்று கோத்தபாய தரப்பின் பரப்புரையில் பேசிய பேச்சுக்களாக வெளியே வந்தன. இதுதான் அவர்களுடன் உள்ளத்திலுள்ள விசயங்கள். அவர்களுடன் இருக்கின்ற தேரர்களை நீங்கள் பார்க்கலாம்.

மருத்துவர் சாபி மீது நியாமற்ற குற்றத்தைச் சுமத்தி அத்துரெலிய ரதன தேரர், விமல் வீரவன்ச போன்றவர்கள் எதிராகச் செயற்பட்டார்கள்.

எனவே எமது ஒரு வாக்குக்கூட சிதறடிக்கப்படக் கூடாது. பச்சை, நீலம், சிவப்பு என்று பல வர்ணங்களில் பிரிந்து வாழ்ந்த சமூகம் ஒட்டுமொத்தமாக எம்முடைய பாதுகாப்புக்காகவும் நிம்மதிக்காகவும் சஜித் பிரேமதாசவுக்கு வாக்களிக்க வேண்டும்.- என்றார். (த)

## வாகனங்கள் மீதான சொகுசு வரி திருத்தம்

நவம்பர்1ஆம்திகதிமுதல் நடைமுறைக்கு வரும் வகையில் வாகனங்கள் மீதுசொகுசுவரிவிதிக்கும் திட்டம் திருத்தியமைக்கப் பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித் துள்ளது.

நிதி அமைச்சு விடுத் துள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ள தாவது: சிற்றூர்தி, மகிழுந்து, உந்துருளி மற்றும் முச்சக்கர வண்டிகள் அடுத்த மாதத்திலிருந்து சொகுசு வரி விதிக்கப்படாது என அறிவித்துள்ளது.

திருத்தப்பட்ட வரி சீர்திருத்தங்களின் பிரகாரம், 3.5 மில்லியனுக்கும் அதிகமான செலவில் இறக்குமதி செய்யப்படும் மகிழுந்துகள் மற்றும் ஜீப்புகளுக்கும், 4 மில்லியனுக்கும் அதிகமான விலையில் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கும், 6 மில்லியனுக்கும் அதிகமான இறக்குமதி செய்யப்படும் மின்சார வாகனங்களுக்கும் இந்த வரி விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வாகனத்தின் செலவு, காப்பீடு மற்றும் மதிப்பின் அடைப்படியிலேயே இறக்குமதி செலவு தீர்மானிக்கப்படும் என்றும் நிதி அமைச்சு தெரிவித் துள்ளது.

இதேவேளை 1800 சி.சி.க்குகுறைவான இயந்திர திறன் கொண்ட பெட்ரோல் கார்கள், 2300 சி.சிக்கும் குறைவான இயந்திர திறன் கொண்ட டீசல் கார்கள் மற்றும் 200 மெகாவாட் குறைவான மின்சாரம் பயன்படுத்தும் மின்சார கார்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படும் என்றும் நிதி அமைச்சு தெரிவித்துள் ளது. (ஓ.5)

## வாகனங்களில் தேர்தல் பரப்புரை ஸ்ரிக்கர்களை அகற்றப் பணிப்பு


கொழும்பு, ஒக். 30

தேர்தல் சட்டங்களுக்கு உள்ளடங்காத வகையில், வாகனங்களில் ஒட்டப்பட்டுள்ள ஸ்ரிக்கர்களை அகற்றுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தனியார் பேருந்துகள், முச்சக்கர வண்டிகள் உள்ளிட்ட தனியார் வாகனங்களில் வேட்பாளர்கள் மற்றும் கட்சிகளை விளம்பரப்படுத்தும் வகையில் சின்னங்கள் மற்றும் உருவங்கள் பொறிக்கப்பட்ட ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டுள்ளதாக ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நடவடிக்கைகளானவை அரச தலைவரைத் தெரிவுசெய்வதற்கான சட்டத்தின் பிரகாரம் தவறு என்பதையும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு ஒட்டப்பட்டிருக்கும் ஸ்ரிக்கர்களை அகற்றுமாறு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஓ.5,10)



அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவு தெரிவித்துவடக்கில் நேற்றுப் பரப்புரை முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் அவர் கலந்து கொண்ட கூட்டத்துக்கு அருகில், அரச பணியாளர்களை ஏற்றி இறக்கும் பேருந்தில் ஒட்டப்பட்டிருந்த தேர்தல் ஆதரவு ஸ்ரிக்கர் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த ஆட்சியில் காணாமல்போனோருக்கு கோத்தாவின் ஆட்சியில் இழப்பீடாம்

வவுனியா, ஒக். 30

அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்தால் கடந்த காலங்களில் காணாமல்போன உறவுகளுக்கு இழப்பீடு வழங்கப்படும். இவ்வாறு தெரிவித்தார் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச.



சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவை ஆதரித்து வவுனியா நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ் மக்கள் மீண்டும் அரசியல் ரீதியில் தவறான தீர்மானத்தை மேற்கொள்ளமாட்டார்கள் என்று நான் நினைக்கின்றேன்.

கோத்தபாயவின் ஆட்சியில் காணிப் பிரச்சினைக்குத் தீர்வு, காணாமல்போனோரின் உறவுகளுக்கு இழப்பீடு மற்றும் வடக்குக்கு முழுமையான அபிவிருத்தி ஆகியன துரிதகரமாகச் செயற்படுத்தப்படும்.

மக்களுக்குச் சேவையாற்றியவரையே அரச தலைவர் வேட்பாளராக களமிறக்கியுள்ளேன். எனவே, சிறந்த பலமான அரசைத் தோற்றுவிக்க அனைவரும் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த ஒன்றிணைய வேண்டும். சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவை அரச தலைவராக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும், -என்றார்.

(ஒ,5,22)

# சிறுபான்மையினர் சுபீட்சமாக வாழ சஜித்துக்கு வாக்களிப்பதே சிறந்தது

*வவுனியா நகரசபை உறுப்பினர் தெரிவிப்பு*

வவுனியா, ஒக்.30

சிறுபான்மையினர் சுபீட்சமாக வாழ்வதற்கு சஜித் பிரேமதாசவைத் தவிர வேறு தெரிவுகள் இல்லை என்று வவுனியா நகரசபை உறுப்பினர் அப்துல் றசூல் முஹமட் லரிப் தெரிவித்தார்.

வவுனியா பட்டானிச்சூரில் நேற்று நடைபெற்ற பரப்புரைக் கூட்டமொன்றில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆட்சிக்காலத்தில் சிறுபான்மையினர் மீது திட்டமிட்டு கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் மற்றும் இயல்பு வாழ்வுக்கு விரோதமான செயற்பாடுகளிலிருந்து மக்கள் முழுமையாக விடுபடவில்லை.

ராஜபக்ச குடும்பத்தின் ஆட்சிக்காலத்தில் சிறுபான்மைச் சமூகம் சந்தித்த இடர்களின் தாக்கங்களை அவர்கள் இன்றும் அனுபவித்து வருகின்றனர். மீண்டும் ஆட்சிப்பீடமேற அவர்கள் எத்தனித்து வருகின்ற னர்.


இது அவர்களுக்கான இறுதித் தேர்தல் என்பது அவர்களுக்கும் தெரிந்த விடயம் என்பதனாலேயே சிறுபான்மையினரிடம் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எனினும் சிறுபான்மையினராகத் தமிழ், முஸ்லிம் சமூகம் தாம் நிம்மதியாகவும் சிறந்த நாட்டைக் கட்டியெ முப்பவும் எவருடன் பயணிக்க வேண்டும் என்பதைத் தீர்மானித்து விட்டனர்.

நிர்க்கதியான தமிழ் முஸ்லிம் சமூகம் இன்று அச்சுறுத்தல் இன்றி வாழும் சூழலை உரு வாக்கிய ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலை வராகச் செயற்பட்டு போரில் அழிவடைந்த மக்கள் நிம்மதியாக வாழவும் உறங்கவும் வழிசமைத்த சஜித் பிரேதமதாசவையே ஆதரிப்பது என்பதே அந்த தீர்மானம்.

எனவே எதிர்வரும் 5 வருடங்கள் இலங்கை வாழ் மக்கள் சிறந்த நாட்டைக் கட்டியெழுப்பி பொருளாதார மேம்பாட்டுடன் வாழ்வதற்கு தமிழ், முஸ்லிம் சமூகத்தினர் ஏதுவான தீர்மானத்தை எடுத்து எம்மால் உருவாக்கப்பட்ட அரசதலைவராக சஜித்தை ஆட்சிக் கதிரையில் அமர்த்த வேண்டும். என்று தெரிவித்தார்.

(த-110)



## பெண் தலைமைத்துவ குடும்பத்துக்கு உதவி

கொடிகாமம்,ஒக்.30

யாழ்ப்பாணம் கே.கே.பி .இளைஞர் கழகத்தின் உத்வும் உறவுகள் வாழ்வாதார உதவிகள் செயற்றிட்டத்தின் மூலம் பெண் தலைமைத்து வக் குடும்பம் ஒன்றுக்கு பலசரக்குக் கடை போடுவதற்கான பொருள்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன. 2009 ஆம் ஆண்டு போர்க் காலப் பகுதிகளில் தனது கணவரைக் காணாமல் பறிகொடுத்த நிலையில், இரு பிள்ளைகளுடன் பண்டத்தரிப்பு சாந்தைக் கிராமத்தில் வறுமை நிலையில் வசித்து வரும் குடும்பத்துக்கு இந்த உதவி வழங்கப்பட்டது.(க-159)

# தைப்பொங்கல் உண்ண விருப்பமாக இருக்கிறது

*அநுரகுமாரவின் ஆசை*

கொழும்பு, ஒக். 30

தைப்பொங்கல் நாள்களில் தமிழர்களின் வீடுகளில் பொங்கல் உண்ண எமக்கு விருப்பமாக இருக்கின்றது. ரமழான் காலங்களில் முஸ்லிம் வீடுகளில் சென்று நோன்புக்கஞ்சி அருந்த நாம் விரும்புகின்றோம். புதுவருடக் காலங்களில் சிங்களவர்களின் வீடுகளில் ஏனைய மதத்தவர் வந்து உணவு உண்ண வேண்டும் என்று விரும்புகின்றோம். அவ்வாறு இருக்கையில் தமிழ்ப் பெண்ணை பார்த்து குங்குமப்பொட்டை அழித்துக் கொள் என்றோ, முஸ்லிம் பெண்ணைப் பார்த்து பர்தாவை அணியாதே எனக் கூற எவருக்கும் அதிகாரம் இல்லை. இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் அரச தலைவர் வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

திகாரி நகரில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதுவரை காலமாக வாக்குறுதிகளைக் கொடுத்தவர்கள் கொடுத்த வாக்குறுதிக்கு முரணாகவே செயற்பட்டனர். ஆனால், நாம் ஆட்சிக்கு வந்தால் எமது தேர்தல் அறிக்கையில் கூறிய விடயங்களை அவ்வாறே நிறைவேற்றுவோம். எமக்கும் மக்களுக்குமான நெருக்கமே எமது கொள்கை.

சட்டம், ஒழுங்கைப் பின்பற்றத் தவறும் அனைவரும் நாட்டில் வாழத் தகுதியற்றவர்கள். இது சாதாரண மக்களுக்கு மட்டும் அல்ல, அரச தலைவருக்கும் பொருந்தும். இன்று ஒரு சமூகத்தை நோக்கி இன்னொரு சமூகம் தாக்குதல் நடத்தும் நிலையே உருவாகியுள்ளது. முஸ்லிம் இனவாதமும், சிங்கள இனவாதமும் இரண்டு சமூகங்களையும் நாசமாக்கி வருகின்றது. இதைத் தடுத்துநிறுத்த ஜெனரல்கள் தேவையில்லை.

எந்த இனச் சமூகத்திலாவது அவர்களின் இனத்துக்குள் ஒரு அடிப்படைவாதக் குழு உருவாக்கப்பட்டால் அதனை மக்களே கண்டறிந்து இல்லாமல் செய்ய வேண்டும். மதச் சுதந்திரம் அனைவருக்கும் இருக்க வேண்டும். இதில் எந்தவிதத் தடைகளும் இருக்கக்கூடாது. மதம் என்பது அவர்களின் நம்பிக்கை. அந்த நம்பிக்கையை நாம் நிராகரிக்க முடியாது. கடந்த காலங்களில் இந்த நாடு பெரிய மோதல்களுக்கு முகம்கொடுத்துவிட்டது. இனியும் அவ்வாறான நிலையை உருவாக்காது நாட்டை நாம் முன்னோக்கிக் கொண்டு செல்ல முயற்சிக்க வேண்டும். இதில் சகல மக்களும் ஒன்றாக இணைந்து பயணிக்க வேண்டும் - என்றார். (ஒ,5,22)



திருகோணமலை இரத்தினசிங்க பிள்ளையார் கோவிலில் குரு மாற்றம் மகாயாகம் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது. (க-40)



கைதடி மேற்கு சரஸ்வதி இளைஞர் அமைப்பினரால் கைதடி பொது நூலகத்துக்கு ஒரு தொகுதி நூல்கள் அண்மையில் அன்பளிப்புச் செய்யப்பட்டது. (க-159)

# கோத்தாவுக்கு வாக்களிக்காவிட்டால் தாக்குதலுக்கு உள்ளாக நேரிடும்

*கருத்துக்கூறிய சட்டத்தரணிக்கு பல தரப்புக்களும் கண்டனம்*

கொழும்பு, ஒக். 30

கோத்தபாய ராஜபக்சவுக்கு வாக்களிக்காவிடின் முஸ்லிம் சமூகம் வன்முறைகளுக்கு இலக்காக நேரிடும் என்று அரச தலைவர் சட்டத்தரணி அலி சப்ரி வெளியிட்ட கருத்துக்கு பலரும் கண்டனம் வெளியிட்டிருக்கின்றர்.

முஸ்லிம்கள் மத்தியில் அரச தலைவர் சட்டத்தரணி அலி சப்ரி உரையாற்றும் காணொலியொன்று சமூகவலைத் தளங்களில் மிக வேகமாகப் பரவிவருகின்றது.

அந்தக் கா[illegible]யில் [illegible]லி சப்ரி கோத்தபாய ராஜபக்ச ஏற்கனவே வெற்றி பெற்றுவிட்டார். முஸ்லிம் மக்களுக்கு நாங்கள் கூறுவது என்னவென்றால், இவ்வெற்றியில் முஸ்லிம்களும் ஒரு பங்காளராக வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் வலுவான தாக்குதல்களுக்கு உள்ளாக நேரிடும், என்றுள்ளது.

கீச்சகம், முகநூல் உள்ளிட்ட சமூகவலைத்தளங்களில் இந்தக் காணொலியில் அலி சப்ரி கூறும் கருத்துக்கள் கடும் கண்டத்துக்கு உள்ளாகியிருக்கின்றது. சமூக செயற்பாட்டாளர்களும், மனித உரிமை ஆர்வலர்களும் முஸ்லிம் சமூகத்தினரை தவறாக வழிநடத்த வேண்டாம் என்றும், தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை அவர்கள் சுயமாக மேற்கொள்வதற்கு இடமளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த தலைவர்கள் பலரும் தமது கீச்சகப் பக்கத்தில் சட்டத்தரணி அலி சப்ரியின் கருத்துக்கு தமது பதில் கருத்துக்களையும், கண்டனங்களையும் வெளியிட்டிருக்கின்றார்கள். (ஒ,5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சாக்களின் தாளத்துக்கு போடும் ஆட்டத்தை அடக்குவேன்!

## சீறுகிறார் சந்திரிகா



கொழும்பு, ஒக். 30

எனது தாய் வீட்டை நாசமாக்கியுள்ளார்கள். ராஜபக்ச குடும்பத்தின் தாளத்துக்கேற்ப மைத்திரியும், தயாசிறியும் ஆடுகின்றார்கள். இந்த ஆட்டம் நிரந்தரமல்ல. விரைவில் முடிவு கட்டப்படும். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் சந்திரிகா அம்மையார் தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் தேர்தல் தொடர்பில் பன்னாட்டுச் செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோத்தபாய ராஜபக்ச பல கொலைகளுக்குக் காரணமானவர். திருட்டுகளுக்கும் உடந்தையானவர். அப்படிப்பட்டவரை இலங்கை மக்கள் அடியோடு நிராகரிப்பார்கள். அவரின் தோல்வி இப்போதே உறுதியாகி விட்டது.

பண்டாரநாயக்க குடும்பத்தால் வளர்த்தெடுக்கப்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வீழ்ச்சிக்குக் காரணம் ராஜபக்ச குடும்பமே ஆகும். அந்தக் குடும்பத்திலிருந்து அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்கியுள்ள கோத்தபாய ராஜபக்சவுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவு வழங்க முடிவெடுத்தமையை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவு படுத்திச் சீரழிக்க வேண்டும் என்ற நோக்குடன் தான் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி என்ற புதிய கட்சியை ராஜபக்ச குடும்பம் உருவாக்கியுள்ளது.

இதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய தலைவரான அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், அந்தக் கட்சியின் பொதுச்செயலரான நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவும் துணைபோயுள்ளார்கள். அதாவது இவர்கள் இருவரும் கட்சியைக் காட்டிக்கொடுத்து விட்டார் கள். எனது தாய் வீட்டை நாசமாக்கியுள்ளார்கள். ராஜபக்ச குடும்பத்தின் தாளத்துக்கேற்ப மைத்திரியும், தயாசிறியும் ஆடுகின்றார்கள். இந்த ஆட்டம் நிரந்தரமல்ல. விரைவில் முடிவு கட்டப்படும்- என்றார். (ஒ.5)

# நீராவியடி, கன்னியா அநீதிக்கு சஜித் பிரேமதாசவே பொறுப்பு

## வரதராஜப்பெருமாள் பகிரங்கக் குற்றச்சாட்டு

வவுனியா, ஒக்.30

முல்லைத்தீவு, நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் நடக்கும் அநியாயங்களுக்கும் கன்னியாவில் நடக்கின்ற அநியாயங்களுக்கும் அமைச்சர் சஜித் பிரேமதாசவே பொறுப்பு. அப்படிப்பட்டவர் பதவிக்கு வந்தால் தமிழ் மக்களுடைய வாழ்வில் ஒளி ஏற்றுளேன் என்று கூறுவது சாத்தியமா? என்று வடக்கு, கிழக்கு இணைந்த முன்னாள் மாகாண சபையின் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் கேள்வி எழுப்பினார்.

வவுனியாவில் பொதுமக்கள் முன்னணியின் அரசதலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவை ஆதரித்து நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடுத்த அரசதலைவர் யார் என்ற கேள்விக்கு இங்கு இடமே இல்லை. ஏனெனில் கோத்தபாய வெற்றி பெறுவார். சஜித் பிரேமதாச சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறமாட்டார். அவர் வடக்கு, கிழக்குப் பகுதியில் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளை நம்பித்தான் தேர்தலில் இறங்கியுள்ளார்.

போர்க் காலத்தில் நடந்த பல துன்பியல்கள், சோகங்களையெல்லாம் கோத்தபாய ராஜபக்ச மீது சாட்டிவிட்டு எல்லோரும் நல்லவர்கள் போல் தப்பிக்கொள்ளப் பார்க்கிறார்கள். அத்தனை அழிவுகளுக்கும், சோகங்களுக்கும் காரணமானவர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்கள். அவர்களுடைய பிரதிநிதியாக இருக்கின்ற சரத் பொன்சேகாதானே அழிவுகளுக்குக் காரணம். சரத் பொன்சேகாவைப் பாதுகாப்பு அமைச்சராக ஆக்கப்போகிறார்களாம். அவர் பாதுகாப்பு அமைச்சராக ஆனால் முள்ளியவாய்காலில் என்ன நடந்ததோ அது தான் இங்கு தொடரப் போகின்றது.

கோத்தபாய ராஜபக்ச அரச தலைவரானால் வெள்ளை வான் வரும், தமிழர்கள் துன்பப்படுவார்கள், ஜனநாயகம் அழிந்துவிடும் என்று சொல்வதெல்லாம் பச்சைப் பொய். அவர்கள் தமிழர்களுக்கு ஒரு கதையையும், சிங்களவர்களுக்கு இன்னொரு கதையையும் கூறுகிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசை யார் காப்பாற்றி வைத்திருக்கிறார்கள். சஜித் பிரேமதாச கூறுகின்றார், தான் அரசதலைவராகவந்தால் அள்ளித் தருவேன், கொட்டித் தருவேன் என்று. தம்பி சஜித் பிரேமதாச நீ இப்போதும் அமைச்சர் தானே. உன்னுடைய அரசு தானே இருக்கிறது. நீ வேண்டுமென்றால் அவை எல்லாவற்றையும் இப்பவே செய்யலாம் தானே. உன்னுடைய அமைச்சுக்குக் கீழே தானே தொல்பொருள் திணைக்களம் இருக்கிறது. ஆகையால் நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் நடக்கும் அநியாயத்துக்கு சஜித் பிரேமதாச தான் பொறுப்பு. கன்னியாவில் நடக்கின்ற அநியாயத்துக்கும் சஜித் பிரேமதாச தான் பொறுப்பு.

5 வருடங்களாக என்ன செய்தீர்கள்?. இப்பொழுதும் ஆட்சியில் இருக்கிறீர்கள். 2015 ஆம் ஆண்டு நீங்கள் ஆட்சிக்கு வந்தபோது நாங்கள் நம்பினோம். இரண்டு கட்சியும் சேர்ந்து ஆட்சியமைக்கிறார்கள். நல்லாட்சி அமைகிறது என்று நம்பினோம் - என்றார்.

(து-ரி4)

# மக்களுக்கான வெற்றியை தரக்கூடியவர் கோத்தாவே

## டக்ளஸ் எம்.பி. கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஒக். 30

நடைபெறவுள்ள அரசதலைவர் தேர்தலில் அரசியல் வாதிகள் அல்லாது மக்கள் வெற்றியடைய வேண்டும். அத்தகைய மக்களுக்கான வெற்றியை உருவாக்கித் தரக்கூடியவர் கோத்தபாய ராஜபக்சவே என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவு கோரி யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடந்த பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த ராஜபக்சவுக்கும் எமக்கும் மிக நெருங்கிய புரிந்துணர்வு நீண்டகாலமாக இருந்து வருகின்றது. இந்தப் புரிந்துணர்வு காரணமாகவே கடந்த காலங்களில் நாம் எமது மக்கள் எதிர்கொண்டுவந்த பல பிரச்சினைகளுக்கும் தேவைப்பாடுகளுக்கும் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க முடிந்திருந்தது.

கோத்தபாயவின் வெற்றியில் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க எம்மால் முடியும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு- என்றார். (த)

# சஜித்தின் தேர்தல் அறிக்கை முதலில் மகாநாயக்கர்களிடம்

கொழும்பு, ஒக். 30

புதிய ஜனநாயக முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் தேர்தல் அறிக்கை, கண்டியில் நாளை வெளியிடப்படும் என்று அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் வேட்பாளர் ஒருவர், கண்டியில் தமது தேர்தல் அறிக்கையை வெளியிடுவது இதுவே முதல் முறை என்றும், சாதாரண மக்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளக் கூடிய தலைவர் அவர் என்றும், லக்ஸ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்துள்ளார்.

சஜித் பிரேமதாச தனது தேர்தல் அறிக்கையின் முதல் பிரதிகளை, மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்களிடம் சமர்ப்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ.5)

# வைராக்கியமான அரசியலிலிருந்து யதார்த்த நிலைக்கு வரவேண்டும்

## காதர் மஸ்தான் எம்.பி. கூறுகிறார்

வவுனியா, ஒக்.30

வைராக்கிய அரசியல் கலாசாரத்திலிருந்து விடுபட்டு யதார்த்த அரசியல் கலாசாரத்துக்குவரவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கே.மஸ்தான் தெரிவித்துள்ளார். வவுனியாவில் அரசதலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவை ஆதரித்து நேற்று முன்தினம் நடந்த பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒட்டுமொத்த தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்றுக போக வாழ்க்கை வாழ்ந்து மக்களை ஏமாற்றி இனவாதத்தைத் தூண்டி சுயலாபம் தேடும் இழிவான அரசியல் கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய தருணம் வந்து விட்டது.

முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் கோத்தபாய ராஜபக்ச ஆகியோர் மக்களைக் கொன்று குவித்தார்கள் என்றும், அவர்களுக்கு அளிக்கும் வாக்குகள் சிறுபான்மை சமூகத்தை பாதிக்கும் என்றும் கூறி நயவஞ்சகத்தனமாக பரப்புரை செய்கிறார்கள். மக்களே நாம் வைராக்கிய அரசியல் கலாசாரத்திலிருந்து விடுபட்டு யதார்த்த அரசியல் கலாசாரத்துக்கு வரவேண்டும். நாட்டின் பெரும்பான்மைச் சமூகத்தின் ஆதரவின்றி யாரும் அரசதலைவராக வரமுடியாது.

சிறுபான்மையினங்களின் உரிமைகளை தாரைவார்த்து விட்டு கையாலாகாதவர்களாக இருக்கும் அரசியல் தலைமைகள் கூறுவதை கேட்காது நாம் நிதானமாகச் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் - என்றார். (து-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரகுமாரவுக்கு வாக்களித்து கோத்தாவை வெல்லச் செய்யாதீர்

## சிறுபான்மையின மக்களிடம் வேலுகுமார் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஒக். 30

அரச தலைவர் தேர்தலுக்கான வாக்கெடுப்பின்போது தேசிய மக்கள் சக்திக்கு சிறுபான்மையின மக்கள் வாக்களித்தால் அது கோத்தபாயவின் வெற்றிக்கு வழிவகுத்துவிடும்.

இரு பிரதான வேட்பாளர்களிலும் ஒப்பீட்டு ரீதியில் தமிழ் பேசும் மக்களின் இருப்பை, பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய நம்பிக்கையான வேட்பாளராக வலம்வரும் சஜித் பிரேமதாசவுக்கே நாம் அனைவரும் ஓரணியில் திரண்டு வாக்களிக்க வேண்டும். இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், இந்து சமய விவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் அறைகூவல் விடுத்தார். சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு திரட்டி கண்டி பகுதியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தனது வெற்றிக்கு சிறுபான்மையின மக்களின் வாக்குகள் தேவையில்லை என்ற கோதாவில் செயற்படும் கோத்தாவும் அவரின் சகாக்களும், சிறுபான்மையின மக்களின் வாக்குகள் சஜித்துக்கு சென்றடையக்கூடாது என்பதிலும் குறியாக இருக்கின்றனர்.

இதற்காக பலவழிகளிலும் அரசியல் காய்நகர்த்தல்களை முன்னெடுத்து வருகின்றனர். தமது முழுமையான அனுசரணையில் சில தமிழ் பேசும் டம்மி வேட்பாளர்களை தேர்தலில் களமிறக்கியுள்ளனர். ராஜபக்சக்களின் செல்லப்பிள்ளைகளாக வலம்வரும் இவர்கள், தாங்கள்தான் சிறுபான்மையின மக்களின் பிரதிநிதிகள், இனத்தின் காவலர்கள் என்றெல்லாம் பரப்புரைகளை முன்னெடுத்து வாக்குகளை சிதறடித்து, ராஜபக்சக்களின் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கின்றனர். இத்தகைய காட்டிக்கொடுப்பாளர்களுக்கு தமிழ் பேசும் மக்கள் எதிர்வரும் 16 ஆம் திகதி தகுந்த பாடத்தை புகட்டுவார்கள் என்று உறுதியாக நம்புகின்றோம்.

அதேவேளை, மாற்றத்தை ஏற்படுத்த போவதாக குதித்துள்ள தேசிய மக்கள் சக்தியும், சிறுபான்மையின மக்களின் வாக்குகளை வேட்டையாடும் நோக்கிலேயே பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றது.

அரசியலில் நேர்வழியில் பயணித்தாலும் தேர்தலில் வெற்றிபெறுவதற்கான வாக்குவங்கி அவர்களிடம் இல்லை. வெற்றிபெறமுடியாது என தெரிந்தும், அடுத்த தேர்தலுக்கான ஒத்திகையாகவே இந்தத் தேர்தலை அவர்கள் பார்க்கின்றனர். அவர்களின் தூரநோக்கு என்னவென புரியாமல், அவர்களின் உரைகளுக்கு மயங்கி, சிறுபான்மையின இளைஞர்கள் சிலர் தேசிய மக்கள் சக்திக்கே வாக்களிக்கவேண்டும்எனகூறிவருகின்றனர். சிறுபான்மையின மக்கள் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளருக்கே வாக்களிக்கவுள்ளனர். எனவே, அந்த வாக்குகளை தேசிய மக்கள் சக்திக்கு பெற்றுக் கொடுத்தால் அது கோத்தாவின் வெற்றிக்கே வழிவகுக்கும். அவ்வாறு நடைபெற்றால் மீண்டும் அராஜக ஆட்சி தலைதூக்கும். இருண்டயுகத்தை நோக்கி பயணிக்க வேண்டிவரும்.

அரசின் செயற்பாடுகள்மீது சிலருக்கு அதிருப்தி இருக்கலாம். அதற்கான மாற்று தேர்வு தேசிய மக்கள் சக்தி கிடையாது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். புரட்சிகரமான மாற்றத்தை நோக்கி பயணிக்கவே இளம் அரச தலைவர் வேட்பாளர் ஒருவரை நம்மில் ஒருவராக நாம் களமிறக்கியுள்ளோம். அவரின் வெற்றியிலேயே தமிழ் பேசும் மக்களின் எதிர்காலமும், நாட்டின் எதிர்காலமும் தங்கியுள்ளது- என்றார். (ஓ,5)

# ஆடுமழையில்நனைகின்றது என்று ஓநாய் அழுத கதை

## இப்படிச் சொல்கிறார் மகேஸ் சேனநாயக்க

கொழும்பு, ஒக். 30

பிரச்சினைகளை தீர்த்து தருவார்கள் என்று மேடைகளில் வாய் வீரம் பேசுவதெல்லாம் ஆடு மழையில் நனைகின்றது என்று ஓநாய் அழுத கதையே ஆகும். இவ்வாறு அரசதலைவர் வேட்பாளரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான மகேஸ் சேனநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டில் நடந்தேறிய கசப்பான அனைத்து சம்பவங்களுக்கு பின்னாலும் அரசியல்வாதிகளின் கறை படிந்த கரங்கள் நிச்சயம் இருக்கின்றன. இந்த நாட்டு மக்களை இனத்துவ ரீதியாக பிரித்து நிரந்தரமான இடைவெளியை ஏற்படுத்தி வைத்திருப்பவர்களும் இந்த அரசியல்வாதிகள்தான். இனங்களுக்கு இடையில் ஏற்படுத்தப்பட்டு உள்ள பிரச்சினைகளை இவர்கள் ஒருபோதும் தீர்த்து தரவே மாட்டார்கள். மாறாக இவ்வாறான பிரச்சினைகளை மேலும் மேலும் தீவிரப்படுத்தி கூர்மைப்படுத்தியவாறு இருப்பார்கள். இவையே இவர்களின் அரசியலுக்கான இலவச முதலீடு ஆகும். இவர்கள் இவ்வாறான பிரச்சினைகளை தீர்த்து தருவார்கள் என்று மேடைகளில் வாய் வீரம் பேசுவதெல்லாம் ஆடு மழைக்கு நனைகின்றது என்று ஓநாய் அழுத கதையே ஆகும்.

ஆனால் இவ்வாறான பிரச்சினைகளை எல்லாம் அரசியவாதிகள் தீர்த்துதருவார்கள் என்று எமது மக்கள் இன்னமும் நம்பி தொண்டுதான் இருக்கின்றார்கள். ஒரே குழிக்குள் மீண்டும் மீண்டும் தெரிந்து கொண்டே விழுவதை தொழிலாக கொண்டிருக்கின்றனர்.

ஆயினும் நாம் வேடிக்கை மனிதர்களை போல வெறுமனே பார்வையாளனாக இருந்து விட்டு செல்ல விரும்பவே இல்லை. அதனால்தான் நாட்டையும், மக்களையும், அரசியல்வாதிகளின் அரக்கு மாளிகைக்குள் இருந்து மீட்பு தற்கால அரசியல்வாதி அல்லாத நாம் இந்த தேர்தலில் தேசிய மக்கள் இயக்கத்தின் வேட்பாளராக களத்தில் குதித்து அரசி யல்வாதிகளுக்கு சிம்ம சொப்பனமாக மாறி இருக்கின்றோம். எம் மீது எந்த அரசியல்வாதியும் எந்த வகையிலும் விரல் நீட்டி குற்றம் சொல்லவே முடியாது. அவர்களை போல் அன்றி எமது இதயம் தூய்மையானது. கரங்கள் சுத்தமானவை. நோக்கம் நன்மையானது.

இத்தேர்தலில் போட்டியிடுகின்ற சக வேட்பாளர்கள் அனைவரை காட்டிலும் நாட்டையும், மக்களையும் வழி நடத்தி செல்வதற்கான தகுதிகள், தகைமைகள் அனைத்தும் எமக்கு அதிகப்படியாகவே இருக்கின்றன. விடுதலையின் அடிப்படை விழிப்பு ஆகும்.

அரசியல்வாதிகளிடம் இருந்து எமது மக்கள் விடுதலை பெற வேண்டும் என்றால் விழிப்படைந்து அரசியல்வாதி அல்லாத எமக்கு வாக்குகளை அள்ளி வழங்க வேண்டும். மாறாக அரசியல்வாதிகளிடமே மீண்டும் மீண்டும் இந்நாட்டை ஒப்படைப்பது எமது மக்கள் அறிந்து கொண்டே செய்கின்ற மன்னிக்க முடியாத மாபெரும் குற்றம் ஆகி விடும் - என்றுள்ளது. (ஓ,5)

# பரீட்சை மீண்டும் பிற்போடல்

யாழ்ப்பாணம்,ஒக்.30

சைவ பரிபாலன சபை பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 28 ஆம் திகதி நடைபெறும் என்று வடமாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் தி. ஜோன்குயின்ரஸ் அறிவித்துள்ளார். சைவ பரிபாலன சபை மற்றும் மறைக் கல்வி ஆகியவற்றுக்கான பரீட்சைகள் இன்று புதன்கிழமை நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தற்போது மீண்டும் பரீட்சை பிற்போடப்பட்டு மாகாண கல்வித் திணைக்களத்தால் அடுத்த மாதம் 28 ஆம் திகதி நடத்துவதற்கு சகல வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இன்று நடைபெறவிருந்த சைவ பரிபாலன சபைப் பரீட்சை பாடசாலை நாள்களில் வைப்பதற்கு பலரும் தமது விசனத்தை வெளியிட்டிருந்தனர். (சு-422)

# உறுதியான ஆட்சியமைய சஜித்துக்கு வாக்களியுங்கள்

## பிரதியமைச்சர் மஃறூப் வலியுறுத்து

மூதூர், ஒக். 30

நாட்டில் நிலையான ஆட்சியை உருவாக்க சஜித் பிரேமதாசவுக்கே வாக்களிப்போம். கடந்த காலங்களில் அரசதலைவர் தேர்தலின் போது எவ்வாறு மகிந்த ராஜபக்சவைத் தோற்கடித்தோமோ அதுபோல் கோத்தபாயவையும் இந்தமுறை நிராகரிப்போம். என்று துறை முகங்கள் மற்றும் கப்பற்றுறை பிரதியமைச்சர் அப்துல்லா மஃறூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் நேற்றுநடைபெற்ற மக்கள் சந்திப்பில் புதிய ஜனநாயக முன்னணியின் அரசதலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து உரையாற்றியபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறுபான்மைச் சமூகம் உணர்வுகளை மதித்து அன்னச்சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும். அப்போது தான் நாம் நிம்மதியாக பகலிலும் இரவிலும் தூங்க முடியும். இனவாதத்தைக் கக்கும் நாடாளுமன்றில் அத்துரலிய ரத்னதேரர், எஸ்.பி திசாநாயக்க, விமல் வீரவன்ச, உதயகம்மன்பில போன்றோர் மொட்டுக்கு ஆதரவளிக்கிறார்கள்.

இதை உணர்ந்து கொண்டாவது முஸ்லிம் சமூகம் சிந்தித்து சஜித்தை வெற்றி பெறச் செய்ய வேண்டும். கடந்த ஆட்சிக் காலத்தில் எவ்வாறு மகிந்தவை வீட்டுக்கு அனுப்பினோமோ அது போன்று கோத்தாவையும் வீட்டுக்கு அனுப்புவோம். ஒன்றாய் ஓரணியில் நின்று சிறந்த தலைமைத்துவத்தைத் தெரிவு செய்வோம்.

சமூகம் சிந்தித்து வாக்களிக்கக் கடமைப்பட்டுள்ளோம். கோடாரிப் பாம்புகள் போன்று எமது சமூகத்தைச் சீர்குலைக்க முற்படுகிறார்கள் இதனைக் கண்டு நாம் ஒரு போதும் ஏமாற வேண்டாம். நமது சமூகத்தின் இருப்பைக் கேள்விக்கு உட்படுத்தியோருக்குச் சரியான பாடத்தைப் புகட்ட வேண்டும். இந்த நாளில் பகிரங்கமாக வாக்களித்து உறுதியான ஆட்சியை உருவாக்க சஜித் என்கிற தலைவனைத் தெரிவு செய்ய வேண்டும்.

அநியாயமாக அட்டூழியமாக மதத்தலங்களை, பர்தாவை, குர்ஆனை, ஹதீஸை நாசமாக்கிய இனவாத கும்பல்களை முறியடித்து சிறந்த தாய் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும்.

முஸ்லிம் சமூகத்தை விற்கும் ஏஜன்ட்டுகள் இருக்கின்றன. இதைத்தான் 2015ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் பலத்தைக் காட்டியுள்ளார்கள்.

இதில் தோல்வியுற்ற மகனே காத்தான்குடி ஹிஸ்புல்லா. இது போன்று அதாவுல்லா போன்றவர்கள் செயற்படுகிறார்கள். எனவே முஸ்லிம் சமூகத்தின் உணர்வுகளை மதித்து புதிய ஜனநாயக முன்னணிக்கு வாக்களியுங்கள்- என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
@UthayanPrint
# புதன் பொய்கை
ஒக்ரோபர் 30, 2019







## மன்னாரில் சிறப்புற்ற பண்பாட்டு பெருவிழா

■ லெம்பேர்ட்

மன்னார் மாவட்டக் கலை பண்பாட்டுப் பெருவிழா மன்னார் நகர மண்டபத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை இடம் பெற்றது.

மன்னார் முதன்மைப் பாலத்தடியில் இருந்து தமிழர் பண்பாட்டு ஊர்வலம் ஆரம்பமாகி முதன்மை வீதியூடாக மன்னார் நகர மண்டபத்தைச் சென்றடைந்தது. அதனைத் தொடர்ந்து மன்னார் நகர மண்டபத்தில் அமைக்கப்பட்ட ஜனாப் மக்கள் காதர் அரங்கில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

மங்கல இசை மற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து 'மன்னெழில்' சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் நூலை வெளியீடு செய்தார். நாடகம், நடனம், சிறப்புப் பட்டி மன்றம் போன்றவை தொடர்ந்து இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து தேசிய விருது பெற்றவர்களுக்கான விருதுகளும் வழங்கப்பட்டன.

மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலர் சரஸ்வதி மோகநாதன் கலந்து கொண்டார்.

குறித்த நிகழ்வுகளில் சர்வமதத் தலைவர்கள், மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு, மடு ஆகிய 5 பிரதேச செயலகங்களின் பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், பாடசாலை மாணவர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org











# மாந்தை கிழக்கு பண்பாட்டுப் பெருவிழா

மாந்தை கிழக்கு பிரதேச பண்பாட்டுப் பெருவிழா மாந்தை கிழக்குப் பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. வடக்கு மாகாண பண்பாட்லுவல்கள் திணைக்கள நிதி அனுசரணையுடன் மாந்தை கிழக்குப் பிரதேச செயலகமும், கலாசாரப் பேரவையும் இணைந்து பெருவிழாவை முன்னெடுத்தன.

பிரதேசசெயலர் ரஞ்சனா நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற விழாவுக்கு முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் திருமதி பவானி கணேசமூர்த்தி, மாகாண பண்பாட்லுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி சுஜீவா சிவதாஸ், துணுக்காய் கல்வி வலய அழகியற் பாட உதவிப் பணிப்பாளர் என்.ராஜன் ஆகியோரும், மதிப்புறு விருந்தினராகப் பாண்டியன்குளம் மகா வித்தியாலய அதிபர் ஆ.சுந்தரமூர்த்தியும் கலந்து கொண்டனர்.

# 'வலி நிலைத்த வாழ்க்கை' நூல் வெளியிடப்பட்டது




கிழக்குப் பல்கலைக்கழகப் பட்டதாரியும், முல்லைத்தீவின் அளம்பில் பகுதியைச்சேர்ந்தவருமான முல்லை பிரசாந் எழுதிய 'வலி நிலைத்த வாழ்க்கை' கவிநூலின் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை காலை 10 மணிக்கு முத்துஐயன்கட்டு வலது கரை மகா வித்தியாலய அதிபர் சி.நாகேந்திரராசா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்பு இடம்பெற்று சுடரேற்றல், இறை வணக்கம் என்பன முறையே இடம்பெற்றன. பள்ளி மாணவிகள் தமிழ்மொழி வாழ்த்திசைத்தனர். தொடக்கவுரையுடன் கூடிய வரவேற்புரையை யோ.புரட்சி நிகழ்த்தினார்.

ஆசியுரைகளை வணக்கத்திற்குரிய தயாகரன் அடிகளார் மற்றும் முல்லைத்தீவு அளம்பில் மகா வித்தியாலய அதிபர் அல்பிரட் ஆகியோர் வழங்கினர்.

தலைமையுரையைத் தொடர்ந்து, வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் பாராட்டுரை அளித்தார். சட்டத்தரணி க.சுகாஸின் வாழ்த்துரை தொடர்ந்து இடம்பெற்றது. வெளியீட்டுரையைத் தமிழர் மரபுரிமை அமைப்பின் செயலர் வி.நவனீதன் நிகழ்த்தினார்.

'வலி நிலைத்த வாழ்க்கை' நூலை நூலாசிரியர் முல்லை பிரசாந் வெளியிட்டு வைக்க, முதற்பிரதியை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா பெற்றுக்கொண்டார்.



# வள, வழமையாசானே நீடு வாழி!

உயிரியலுக் குயிருட்ட ஈழ மண்ணில்
சிவகாமித் தாயீந்த சிற்பியே - குணசீல
ஆறு பத்து அகவை கண்டு வாழியவே பல்
லாண்டு
அகிலத்தில் ஞாயிறு போற் பூத்து

விகாரி யாண்டைம்பத்தி யொன்பதிலே
ஐப்பசியாளீந்த அரிய நல்லாசானே
அரச பணிக் காறு பத்தில் அந்தமுண்டு
ஆனாலும் உன் பணிக்கோ அந்தமில்லை



மருத்துவரின் பிரம்மாவே மதிமிக்க ஆசானே
மகத்தான உன் பணியால் மாணவரை
அறிவூட்டி
வழிகாட்டி வாழ்வளித்த பிதாமகனே
வையத்தில் பல்லாண்டு வாழி! வாழி!

ஆசிரியருக் கெம்மண்ணில் எல்லையில்லை
ஆசிரியத்தை யெங்கும் காணவில்லை
பாலைவன ரோஜாவாய் பரணமித்த
பாங்கான சேவகனே நீடு வாழி!

கல்வியைக் காசுக்கு ஏலம்போடும்
கயவர்கள் வாழும் ஈழமண்ணில்
கல்விக்காய் கையேந்தும் ஏழைகட்கு
கணக்கின்றி உதவிட்டாய் நீடு வாழி!

வ.செல்வராஜா
ஓய்வுநிலை மாகாணக்
கல்விப் பணிப்பாளர்

# ஆசிரியை யுகந்தினிக்கு குரு பிரதீபா பிரபா விருது

துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட முல்லைத்தீவு, தேறாங்கண்டல் அ.த.க பாடசாலையின் பரதநாட்டிய ஆசிரியையான யுகந்தினி பாலசுப்பிரமணியம் குரு பிரதீபா பிரபா விருது பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவநாயகம் தேவானந்த்

# 'புழுதியின் கீதங்கள்' நாடகம்



யாழ்ப்பாண இடப்பெயர்வின் பின்னரான காலகட்டம் யாழ்ப்பாண நாடக வரலாற்றில் இருண்ட காலமாகக் கருதப்படத்தக்கது. உலக நாடக வரலாற்றில் மத்திய காலத்தை நாடகத்துக்கான இருண்ட காலமாக குறிப்பிடுவார்கள். அதே போன்றான ஒரு காலகட்டமாக 1995ஆம் ஆண்டு ஆண்டு பெரிய இடம்பெயர்வு நடைபெற்ற காலகட்டத்துக்குப் பின்னரான காலகட்டத்தைக் குறிப்பிடமுடியும்.

இந்த நிலைமை 2002ஆம் ஆண்டு வரை நீடித்தது எனலாம். கலைப்படைப்புக்கு ஏதுவான சூழல் காணப்படவில்லை. போர் முனை வன்னியில் மையங்கொண்டிருந்தாலும் யாழ்ப்பாணமும் போர் வலயத்துக்குள் அகப்பட்டிருந்தகாலகட்டம்.

❀ ❀ ❀ ❀

இடம்பெயர்ந்து வன்னியைநோக்கி நகர்ந்த மக்கள், யாழ்ப்பாணம் விடுவிக்கப்பட்டபோது மீளக் குடியேறுகிறார்கள். இது 1996ஆம் ஆண்டு பிற்பகுதிகளில் நடக்கிறது. மக்கள் மீளக் குடியேறும் போது யாழ்ப்பாணம் முழுமையும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியாக இருந்தது. இந்தக் காலகட்டத்தில் முல்லைத்தீவு இராணுவமுகாம் புலிகளால் தாக்கியழிக்கப்படுகிறது. அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் பலர் கைதுசெய்யப்பட்டு காணாமல் போகிறார்கள். கிருசாந்தி என்ற பாடசாலை மாணவி காணாமல் போகிறாள். செம்மணியில் பலர் கொலைசெய்து புதைக்கப்பட்ட புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. அதுவொரு இராணுவக் கெடுபிடிக்குள் வாழ்ந்த காலகட்டம்.

இந்தச் சுழல் காரணமாக பலர் இணைந்து செயலாற்றுவது தவிர்க்கப்படுகிறது. ஊர்களில் நாடகங்கள் செய்தவர்கள் அச்சம் காரணமாக நாடகங்கள் செய்வதில்லை என்ற நிலைமை உருவாகிறது. போராட்ட கால நாடகங்களோடு தம்மை ஈடுபடுத்தியர்கள் வன்னிக்கு இடம்பெயர்ந்து சென்று மீளவும் யாழ்ப்பாணம் வரவில்லை என்றதான நிலைமை. இவ்வாறான, ஒருசூழலில் நாடக அரங்கக் கல்லூரி மற்றும் அரங்கச் செயற்பாட்டுக் குழு போன்ற நாடக நிறுவணங்கள் மெல்ல பாடசாலைகளில் நாடகங்களை மேடயேற்றும் பணியை ஆரம்பிக்கிறார்கள்.

அரச சார்பற்ற நிறுவணங்கள் சிறுவர் உரிமைக்காகப் பணியாற்ற ஆரம்பிக்கின்றன. நாடகத்தை சிறுவர்களின் மகிழ்வளிப்புக்கான ஒரு கருவியாகப் பயன்படுத்த ஆரம்பிக்கின்றன. நாடகச் செயற்பாடுகள் மெல்ல ஆரம்பமாகின்றன. நாடகத்துக்கான இருண்ட காலகட்டத்தில் நாடகத்தை மெல்ல உயிர்ப்பித்த களங்களாக பாடசாலைகளும் பலடகலைக் கழகமும் காணப்பட்டது எனலாம். பாடசாலைகளுக்கிருந்த மட்டுப்பாடுகளோடு ஆர்வமான பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்களால் இந்த முயற்சிகள் எடுக்கப்பட்டன. குறிப்பாக, அந்தக் காலகட்டத்தில் பல்கலைக் கழக நாடகச் செயற்பாடுகள்; முக்கியம் பெறுகின்றன. அவை இராணுவ சிவில் நிர்வாகச் சூழலில் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தன.



❀ ❀ ❀ ❀

இவ்வாறானதொரு சூழலில் (1997 ஆம் ஆண்டு) யாழ் இந்து மகளிர் கல்லூரியின் அதிபராக இருந்த திருமதி எஸ்.ஜெயரஜாவின் முயற்சியால் மாணவர்களோடு இணைந்து நாடகம் ஒன்று தயாரிக்கப்படுகின்றது. 'புழுதியின் கீதங்கள்' அந்த நாடகத்தின் பெயர். மாணவர்களுடன் நெறியாளர் மற்றும் எழுத்தாளர்கள் ஒன்றுகூடி செயல்முறை ஊடாக தயாரிக்கப்பட்ட நாடகம்தான் புழுதியின் கீதங்கள் என்ற நாடகம். யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி வன்னியென்று பல இடங்களிலும் சொல்லொணாத் துயரத்தை அனுபவித்து வந்த குடும்பங்களிலிருந்து வந்த மாணவிகள் முப்பத்தி ரெண்டு பேர்; இதில் பங்குகொண்டார்கள். அவர்களின் வாழ்வியல் தரிசனங்கள் மேடையில் காட்சிப் படிமங்களாக்கப்பட்டன. அவர்களே காட்சிகளை உருவாக்கினார்கள் உணர்ச்சியைத் தீர்மானித்தார்கள். நாடகத்தின் வேகத்தையும்கூட அவர்களே தீர்மானித்தி ருந்தார்கள்.

இது இடப் பெயர்வுபற்றிப் பேசிய முதல் நாடகம் எனலாம். இதன் பின்னர் பல்கலைக்கழக நாடகங்கள் பல இடப்பெயர்வு பற்றியும் அதன் அவலம் பற்றியும் நிறையவே பேசியிருக்கின்றன. பெருங்காட்சிப்பண்பு கொண்ட யாழ்ப்பாண இடப்பெயர்வு காட்சியை இந்த நாடகம் மேடைக்காட்சியாக்க முயற்சித்திருந்தது.

நாடகம் நேற்றுமறுதினம், நேற்று மற்றும் நேற்றைய தொடர்ச்சி இன்று என்று ஆரம்பிக்கிறது. இன்று நடப்பதுவோ அறுவடை, அது தீடீரென நடப்பதல்ல எல்லாமே தொடர்ச்சிதான் என்பதாக தொடர்கிறது. இந்த நாடகம் இராணுவச் சூழலில் 'எது நடந்தாலும் தமது நலன் சார்ந்துவாழும் சிலரின் உண்மை முகத்தைத் தோலுரித்துக்காட்ட முயற்சிக்கிறது. வாயிருந்தும் வாயில்லாப் பூச்சிகள் போன்று பாவனைசெய்து சமாளித்து ஐயாமாருக்கு சலாம் போடும் மனிதக் கூட்டத்தைக் காட்டி அதனை விமரச்சிக்க முற்படுகிறது நாடகம்.




கூடித்தேர் இழுத்தால் தான் பயன்கிடைக்கும், தனித்தனியே இழுத்து என்ன பயன்? அதனால் எதுவும் விளைந்துவிடாது என்பதாக நாடகம் சிதறுண்டு கிடக்கின்ற தமிழ்ச் சமூகம் ஒன்றுபட வேண்டுமென்கிறது. 'சிதறுண்டு கிடப்பதால்; எதிரிக்குத்தான் பலம் தனித்தனியே எமது நலனில் அக்கறை செலுத்துவதால் கிடைப்பது தற்காலிகமான தீர்வே அன்றி அது நிரந்தரமானதல்ல' என்பதைக்கூறி கூடித் தேர் இழுத்தலின் அவசியம் பற்றி நாடகம்; பேசுகிறது. இந்தக் காலகட்டத்தில் வாழ்வதற்கான திண்டாட்டம், பட்டினி வாழமுடியாத சூழல் என்று பல விடயங்களோடு இவற்றுக்கான காரணங்களில் ஒன்றாக பெரிய இடம்பெயர்வு அதன் துயரம் போன்றவற்றையும் நாடகம் கூறிச் செல்வதோடு இந்தச் சுழலில் நாம் வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. நெருக்கடிகளுக்குள் நாம் வாழ்வதற்காக நிர்பந்திக்கப்பட்டி ருக்கிறோம். அதனை எதிர்கொண்டு வாழ வேண்டும்என்பதாக நாடகம் முடிகிறது.

❀ ❀ ❀ ❀

இந்த நாடகம்பற்றி அப்போது இந்து மகளிர் கல்லூரி அதிபராக இருந்த திருமதி எஸ்.ஜெயராஜாவின் கருத்து நாடகத்தின் கருப்பொருளை நன்கு வெளிப்படுத்துகிறது எனலாம்.

'தற்கால யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை நிலையைத் தத்ரூபமாக நாடகம் எடுத்துக் காட்டுகிறது. போரின் இடரால் சிதைவுற்ற பண்பாடு, மனிதனின் உடல் நிலை, மணநிலை ஆகியவற்றின் பாதிப்பு ஆகியவற்றைக் கண்முன்னே காட்டுகின்றது. இடப்பெயர்வின் பாதிப்பும் மக்கள் பட்ட கஷ்டமும் எதுவாக இருந்தாலும், மனிதனின் சுரண்டும் தன்மை மாறாதிருப்பதையும் நாடகம் எடுத்துக் காட்டுகிறது' என்று குறிப்பிடுகிறார்.

இதேபோன்று ஆசிரியர் கா.சிவநேசன் தனது கருத்தில் 'நாடகம் காலத்தின் கண்ணாடி என்று கூறப்படுபவை. இவ்வகையில் தமிழ் மக்கள் பட்டனுபவித்த இன்னல்களைப் பிரதிபலிக்கும் வகையில் நாடகம் அமைந்திருந்தது. மக்களிடையே சலாம் போடும் மனிதர்களின் பழக்க வழக்கங்கள், இயல்புகள் தத்ரூபமாகச் சித்தரிக்கப்பட்டிருந்தன. இவற்றைப் பார்த்து தம் பழக்கங்களைத் திருத்திக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். இடப்பெயர்வின் போது அனுபவித்த இன்னல்கள் எத்தகையவை என்பதை அவ்வாறு அனுபவித்தவர்கள் பார்த்ததும் தம் இனம் மீது அனுதாபம் கொள்ளும் மனப்பாங்கை உருவாக்கும் வகையில் அமைந்தது. சோகச்சுவை, அவலச்சுவை மக்களைக் கவரவல்லன என்று கூறுவதற்கு இணங்க இந்த நாடகம் மக்கள் மனதில் நிலைத்திருக்கும்' என்று தனது பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அருட்தந்தை ரூபன் மரியாம்பிள்ளைக்கு கம்போடிய அரசின் விருது வழங்கப்பட்டது

ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் தனது 12 ஊடகவியற் புத்தகங்கள் மற்றும் ஊடகவியற் பணிகள் மூலம் பத்திரிகைத்துறைக்கு ஆற்றிய பங்களிப்புக்காக கம்போடிய அரச விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டார். கம்போடியா நாட்டின் சியாம் ரீப் நகரில் கம்போடிய அரச கலை கலாசாரத்துறையுடன் இணைந்து பன்னாட்டு தமிழர் நடுவம் மற்றும் அங்கோர் தமிழ்ச் சங்கம் நடத்திய உலகத் தமிழ் கவிஞர் மகாநாடு அண்மையில் நடைபெற்றது. பல்வேறு உலக நாடுகளில் இருந்து சுமார் 200 கவிஞர்கள் கலந்து கொண்டனர்.

உலகத் தமிழ் கவிஞர் மகாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வில் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் தமது 12 ஊடகவியற் புத்தகங்கள் மற்றும் ஊடகவியற் பணிகள் மூலம் பத்திரிகைத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பிற்காக கம்போடிய அரச விருது வழங்கி மதிப்புறுத்தப்பட்டார்.

தென்கிழக்காசியாவின் பெருமையும் பழமையும் வாய்ந்த தமிழர் கோவில்கள் இன்றைய தென்கிழக்காசிய மக்கள் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்து கிடக்கும் பண்டைத் தமிழர்களின் கலை கலாசாரம் மற்றும் தமிழ் மொழியின் பரவல் போன்ற தமிழரின் பெருமைகளைப் பறைசாற்றும் மாநாடாக விழா அமைந்தது.









## காரைக்கவியின் நூல்கள் வெளியீடு

கல்வி அமைச்சின் அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்றிட்டப் பணிப்பாளரும் காரைக்கவியுமான கே. பத்மாநந்தனின் 10 புத்தங்களைக் கொண்ட புத்தகத் தொகுதி கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அண்மையில் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சர் கலாநிதி வே. இராதாகிருஸ்ணன் கலந்துகொண்டார்.

மதிப்புறு விருந்தினர்களாக ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் செய்யது அலிசார் மெயலானா நீர்காசனம் மற்றும் கிராமிய பொருளாதார அலுவல்கள் கமத்தொழில் இராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் அமிர் அலி ஸிஹாப்தீன் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்களான சரவணபவன், வேலுகுமார், சிவஞானம்சிறீதரன், மயில்வாகனம்திலகராஜ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

10 புத்தகங்களில் கவிதைத் தொகுப்புகளாக 'அம்மா என்னும் ஆசியாவின் அதிசயம்', 'குறுக்காவ போவானே கோதாரி விழுவானே', 'என்னத்தை எழுதி என்னத்தை கிழிக்க', 'என்னமோ இருக்கிறம்', 'என்னடா மோனே என்னத்தை எழுதுகிறாய்' என்பனவும், கட்டுரைத் தொகுப்புகளாக 'தமிழ் வேதம் தந்த கணபதி', 'தமிழ் வளர்த்த மானுடம்', 'நீறிருக்க பயம் ஏன்' என்பனவும், 'ஆய்வு தொகுப்பாக வள்ளுவர்' என்னும் 'தெய்வீகமுகாமையாளர் நூலும்', சுருக்க கதைதொகுப்பாக 'ஆனந்தனும் அவளும்' எனும் நூலும் வெளியிடப்பட்டன.

## தமிழ் கவிதைகள்

தமிழ் கவிகள்
ஒவ்வொருவரும்
தெரிவிக்கும் கருத்துக்கள்
ஆயிரம் ஆயிரம்!

எரியும் விளக்கின்
எண்ணையை போலதாம் அவைகள்!
இருள் சூழ்ந்த எம் வாழ்வில்
சுடர்ஒளி பரவிட துணை நிற்பவை!

தமிழனை ஆட்சி செய்ய
தமிழன் அவசியம் இல்லை!
தமிழ் மொழியும்
தமிழர்தம் மரபும் அறிந்திடல்
வேண்டும்!

சிந்தையினில் பாரதியின் வரிகளை
இந்த வேளையினில் மறவோம்
சாதிகள் இரண்டே! ஒன்று
மேலோர் மற்றொன்று கீழோர்!

நீதிநெறியிலின்று பிறர்க்கு உதவும்
நன்னெறி கொண்ட மேலோர்களை
தலைவர்கள் ஆக்குவோம்!
கீழோர்களை ஒதுக்குவோம்!

## வித்தகர் விருது பெற்ற கந்தசாமி



மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி கிராமத்தைச் சேர்ந்த நல்லையா கந்தசாமி கிழக்கு மாகாண வித்தகர் விருதைப் பெற்றுக்கொண்டுள்ளார். 40 வருடகாலமாக கலை இலக்கியத் துறைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி 'நாடகம் மற்றும் ஓவியம்' ஆகிய துறைகளில் வழங்கிய அர்ப்பணிப்புமிக்க பங்களிப்புக்காக இந்த விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண கல்வி, தொழில்நுட்பக் கல்வி, முன்பள்ளிக்கல்வி விளையாட்டு, பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகாரம், மறுவாழ்வு மற்றும் மீள்குடியமர்வு அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அண்மையில், மட்டக்களப்பில் நடத்திய 2019ஆம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழாவின் போதே இந்த விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டார்.



## 'மடத்தார்பதி வாழ் மன்னவனே' இறுவட்டு வெளியிடப்பட்டது!

சீரடி சாயியைப் போற்றி அமைந்துள்ள பாடல்கள் அடங்கிய 'மடத்தார்பதி வாழ் மன்னவனே' எனும் இறுவட்டு கடந்த 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

'ஈழத்து சீரடி ஆலயம்' என அழைக்கப்படும் யாழ்ப்பாணம், நல்லூர் நாவலர் வீதியில் அமைந்துள்ள சீரடி சாய் மந்திரில் இடம்பெற்ற இந்த வெளியீட்டு விழாவில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் சி. சத்தியசீலன் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டு இறுவட்டை வெளியிடு செய்து வைத்தார்.

ஈழத்துக் கவிஞர் வேலணையூர் பா. சசிகுமாரின் பாடல் வரிகளுக்கு, தென்னிந்தியத் திரைப்பட இசையமைப்பாளர் அக்னி கணேஸ் இசையமைத்திருக்கும் இந்த இசை இறுவட்டில் ஐயப்பதாசன், பிரபாகர், ராகுல், தீபிகா, பவன், அபர்ணா, சந்திரஜோதி ஆகியோர் பாடல்களுக்குக் குரல் கொடுத்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்.கே.துரைசிங்கம்

# பரிஸ் ஊடகர் நினைவு நாளில் உதயன் ஊடகர் குகநாதனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது

**உதயன் பத்திரிகையின் செய்தியாசிரியர்ஞா.குகநாதனுக்குபிரான்ஸின் தலைநகர் பரிஸில் வைத்து வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது. அதுதொடர்பாகவும், அவரின் ஊடகப் பயணம் தொடர்பாகவும் செவ்வி வடிவில் வெளிவருகிறது இந்தப் பத்தி.**

இசைக்கலைக் குடும்பத்தின் வழி வந்த ஞானசுந்தரம் குகநாதன் இசைக்கலைஞராக வரவேண்டியவர் ஊடகனாக உருவானார். தந்தை எஸ்.ஆர்.ஞானசுந்தரம் இசைக்கலைஞர். அத்துடன் பொழுதுபோக்காக ஈழநாடு பத்திரிகையின் மாவிட்டபுரம் செய்தியாளராகவும் இருந்தார். பாடசாலைக் காலத்திலேதந்தைக்கு உதவியாக செய்திகளைத் தயாரித்து பத்திரிகைகளுக்கு அனுப்பி அவை பிரசுரமானதும் வாசித்து மகிழ்வார் குகநாதன். இந்த மகிழ்ச்சியே ஊடகத்துறையில் இவரை ஈடுபடவைத்தது. ஊடகத்தில் பயணிக்க இவரது தந்தையே பிள்ளையார் சுழி போட்டார்.

1985ஆம் ஆண்டில் ஈழமுரசு உதவி ஆசிரியர்களில் ஒருவராகப் பணியாற்றியவர் பின் உதயன் பத்திரிகையில் கடமையாற்றினார் ஈழப்போர் தீவிரமடைந்த காலத்தில் பெரும் சவால்கள் மத்தியிலும் உதயனில் கடமையாற்றினார். நெருக்கடிகள், அச்சுறுத்தல், மிரட்டல்களைக் கடந்தவர் தற்பொழுது சுவிஸ் நாட்டில் வாழ்கிறார். ஐ.பி.சி தொலைக்காட்சி ஊடகத்துறை வாழ்நாள் சாதனை விருது வழங்கி இவரை மதிப்பளித்தது. தற்பொழுது பிரான்சில் நடைபெற்ற ஈழத்தமிழ் ஊடகவியலாளர் நினைவு நாளில் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தினால் விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளார்.

**குகநாதனின் ஏற்புரை**

தமிழர் உரிமைப் போராட்டத்தின் ஆரம்பம் முதல் பல நெருக்கடிகள், அழுத்தங்களை தமிழ் ஊடகவியலாளர்கள் சந்தித்தபோதும் தமிழர்களின் அபிலாசைகளை உலகுக்கு உரத்துக் கூறியதனால் கொல்லப்பட்ட நிமலராஜன், சிவராம், நடேசன் போன்ற பல ஊடகர்களின் பணிகளை அவர்கள் உணர்வுகளை தனது ஏற்புரையில் குகநாதன் கூறினார். நெருக்கடியான காலங்களிலும் துணிச்சலாக செய்திகளை வெளியிட்டமைக்காக உதயன் பத்திரிகைக்கு ஊடக நிறுவனங்களினால் துணிச்சலுக்கான விருதுகள் பல தடவை வழங்கப்பட்டுள்ளன. இதேவேளை இவரையும் அந்த விருதுகள் தேடி வந்துள்ளன. புலம்பெயர்ந்த பின்னரும் ஊடக உலகம் அவரைப் புகழின் உச்சியில் வைத்திருக்கிறது.

"எனக்குப் பிரபல்யம் விருப்பமில்லை. இன்று கூட களப்பலியான ஊடகர் நினைவு நிகழ்வு என்பதால் தான் நிகழ்வுக்கு வந்தேன். ஊடகத்துறைக்கு முதலில் ஆகுதியான நிமலராஜன் நினைவு நாளில் ஊடகர் தினம் என்பதால் இன்றைய விருதை ஏற்றுக் கொண்டேன்" என்று தெரிவித்தார் குகநாதன்.

**கே :** நீங்கள் தாக்கப்பட்டபோது உங்கள் உணர்வு எவ்வாறு இருந்தது?. அந்தச் சம்பவங்களை விவரிக்க முடியுமா?

**ப :** '2011ஆம் ஆண்டு ஆடிமாதம் 29ஆம் திகதி இரவு 7 மணி வேலை முடிந்து வீடு செல்லும் வழியில் யாழ்.நாவலர் வீதியில் இராணுவக் காவலரணுக்குச் சமீபமாக இராணுவத்தினர் பார்க்கக் கூடிய தூரத்தில் என்னை வழிமறித்த ஒருவர் கூரிய ஆயுதத்தினால் வயிற்றில் குத்தினார். எதிர்பாராத தாக்குதலால் நான் நிலை குலைந்து கீழே விழுந்து விட்டேன். தலையிலும் தாக்கினார் என்னால் அவரை எதிர்க்கவும் முடியவில்லை. பதற்றத்தில் அடையாளமும் கண்டுபிடிக்கமுடியவில்லை. சம்பவ இடத்தில் ஆள்கள் கூடி விட்டதால் தாக்குதலாளி ஓடி விட்டார். பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டேன். 3 நாள்கள் கோமா நிலையிலிருந்தேன். 14 இழைகள் போடப்பட்டன. 21 நாள்களின் பின்னர் வீடு திரும்பினேன்' என தனது அனுபவத்தை விவரித்தார்.

**கே :** தொடர்ந்து உயிராபத்து இருப்பதால் யாழ்ப்பாணத்திலிருந்து புலம்பெயர்ந்து விட்டீர்கள். சுவிஸ் பயணம் எப்படி நடந்தது?

**ப :** "நான் தாக்கப்பட்ட தகவல் அறிந்து என்னை நேரில் வந்து மனித உரிமைகள் குழுச் செயற்பாட்டாளர்கள் பார்வையிட்டனர். எனக்கு உயிராபத்து இருப்பதால் சுவிஸ் நாடு செல்ல ஒழுங்கு செய்தார்கள். அவர்கள் சந்தித்து இரண்டு வாரங்களின்பின் சுவிஸ் வந்து சேர்ந்தேன்."

**உதயன் மீதான அச்சுறுத்தல்கள்**

**கே :** உதயன் மீது ஆயுத தாரிகளினால் தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தப்பட்டன. அவை பற்றிய உங்கள் அனுபவம் பற்றிக் கூறவும்?

**ப :** "1999ஆம் ஆண்டு கிராணைட் குண்டு வீசி உதயன் எச்சரிக்கை செய்யப்பட்டது. ஆயுதம் தாங்கியவர்களின் அராஜகம், மனித உரிமை மீறல்கள் போன்ற சம்பவங்களை நாங்கள் மக்களின் பக்கம் நின்று கண்டிப்பதால், அம்பலப்படுத்துவதால் அவற்றை எதிர்கொள்ள முடியாது செய்திகளைத் தடுப்பதற்காக இந்தத் தாக்குதலை நடத்தினார்கள். 2006 வைகாசி 2ஆம் திகதி முகமூடி அணிந்த நான்கு ஆயுததாரிகள் உதயன் வளாகத்திற்குள் அத்துமீறி நுழைந்தனர் சகட்டு மேனிக்கு துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தனர். ஒரு போர்க்களம் போல் இருந்தது. நாங்கள் ஆசிரியர் அறைப்பகுதியில் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருந்தோம். அறை அறையாக எங்களை சல்லடை போட்டுத் தேடினார்கள். பத்திரிகையாளர் அனைவரும் பாதுகாப்பாக பதுங்கி இருந்ததால் அவர்களின் கொலை வெறியிலிருந்து தப்பி விட்டோம். எங்களைக் காணவில்லை என்ற ஆத்திரத்தில் ஊழியர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் இருவர் கொல்லப்பட்டனர். முகமூடி நபர்கள் குகநாதன் எங்கே? என்று துருவித்துருவிக் கேட்டதாக பாதுகாப்பு அலுவலர்கள் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்துக்கு பின் உதயன் வளாகத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது. நாங்களும் உதயனிலே தங்கியிருந்து கடமைகளைச் செய்தோம். கடமையின் நிமித்தம் நாங்கள் வெளியில் செல்வதாக இருந்தால் பொலிஸ் பாதுகாப்புடனே சென்று வந்தோம். இவ்வாறு நான்கு வருடங்கள் உதயனில் அடைபட்டு இருந்தோம்.

போர் முடிவுக்கு வந்தபின் எங்கள் பாதுகாப்புக்கு உத்திரவாதம் அளிப்பதாக அன்றைய அரச தலைவர் மகிந்த ராஜபக்ச உத்தரவாதமளித்தார். அதனை நம்பி வெளியே வந்த பின்னரே நான் தாக்கப்பட்டேன்" என அந்த நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார்.

**ஊடக அனுபவம்**


**கே :** ஊடகத்துறை தொடர்பான உங்களின் அனுபவம் பற்றி...?

**ப :** "அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம், தமிழரசு கட்சி தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் ஆகியோர் இணைந்து தமிழர் கூட்டணி அமைக்கப்பட்ட பின்னர் வட்டுக்கோட்டைத் தீர்மானம் தொடர்பாக மக்களுக்கு விளக்கும் கூட்டமொன்றை யாழ்.முற்ற வெளியில் நடத்தினார்கள். இது தொடர்பான செய்திகளை தொலைபேசி மூலம் உடனுக்குடன் யாழ். தபாலகத்திலிருந்து தினபதிக்கு வழங்கினேன். கூட்டம் எப்படியிருக்கிறது?. யார் யார் பேசினார்கள்? எவ்வளவு மக்கள் கூட்டத்தில் இருக்கிறார்கள் போன்ற கேள்விகளைக் கேட்டபடி மறுமுனையிலிருந்து குறித்து கொண்டிருந்தார் தினபதி செய்தி ஆசிரியர் இரத்தினசிங்கம். கூட்ட மேடையிலிருந்து பார்வையாளர் இருக்கும் இடம் முடியும் வரை நடக்கவும் ஒவ்வொருவருக்கும் இடையில் எத்தனை முழம் இடைவெளி என்று கணக்கெடுக்கவும் அதனை இரண்டால் பெருக்கவும் ஒரு முழத்துக்கு இருவர் வீதம் இருக்கலாம் நீளம் அகலம் எடுத்து இரண்டால் பெருக்கினால் எவ்வளவு மக்கள் கலந்து கொண்டார்கள் எனக் கண்டுபிடித்து விடலாம் என்றார் செய்தி ஆசிரியர். அப்படியே கணக்குப் பார்த்து இரண்டு லட்சம் பேர் கூட்டத்தில் இருக்கிறார்கள் என்றேன். அடுத்த நாள் தினபதியில் மட்டும் முற்றவெளிக் கூட்டத்தில் இரண்டு லட்சம் பேர் கலந்து கொண்டார்கள் என்று செய்தி வந்தது. இந்தச்செய்தி தினபதியின் மதிப்பை உயரச்செய்தது.

பங்களாதேசம் தனிநாடக அறிவிக்கப்பட்டதையடுத்து காங்கேசன்துறையில் வெற்றிக்கொண்டாட்டம் நடைபெற்றது. அந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் செயலாளர் நாயகமும், காங்கேசன்துறை நாடாளுமன்ற உறுப்பினருமான அ.அமிர்தலிங்கம் உரையாற்றும் போது 'பங்களாதேஸ் பன்னாட்டு உதவிகளைப் பெற்று தனிநாடாகியுள்ளது. அதேபோல பன்னாட்டு உதவியுடன் எமக்கான ஒரு நாட்டை உருவாக்குவோம்" எனத் தனது உரையில் கூறினார்.

இந்தச்செய்தியை தினபதிக்கு நான் வழங்கினேன். 'பன்னாட்டு உதவி பெற்று எமக்கான நாட்டை அமைப்போம்அமிர் சூழுரை" எனத் தினபதியில் தலைப்பிடப்பட்டு செய்தியாக வெளிவந்தது.

இந்தச்செய்தி தினபதி சார்பு பத்திரிகையான சண் ஆங்கிலப் பத்திரிகையில் "வெளிநாட்டு உதவிகளைப்பெற்று தனிநாடு அமைப்போம்" என அமிர்தலிங்கம் பேசியதாக மொழி பெயர்க்கப்பட்டு வெளியானது.



இந்தச்செய்தி தொடர்பாக தென்னிலங்கை அரசியல் வட்டாரத்தில் குழப்பம் ஏற்பட்டது. அமிர்தலிங்கம் எவ்வாறு இப்படி கருத்துச் சொல்ல முடியும் என்ற வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன. அமிரை உடனடியாகக் கைது செய்து விசாரணை செய்ய வேண்டுமென அப்போதைய பொலிஸ்மா அதிபர் சேபால ஆட்டிகலவுக்கு தலைமை அமைச்சர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா உத்தரவிட்டார்.

யாழ். பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.சுந்தரலிங்கத்திற்கும் இந்த உத்தரவு பறந்தது அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த இரகசியப் பொலிஸாரிடம் இது பற்றி விசாரிக்கபட்டது. சண் செய்திபோல அமிர் பேசவில்லை என்று எல்லோரும் தெரிவித்தனர். தினபதிக்கு செய்தி வழங்கிய என்னை அழைத்து விசாரணை செய்தனர்.

நான் தினபதிக்கு வழங்கிய செய்தி சண்ணில் ஆங்கில மொழியில் திரிபு படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்தேன் உண்மையைப் புரிந்து கொண்டவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

**கே :** உதயன் பத்திரிகையில் எப்படி இணைந்தீர்கள்?

**ப :** 1989 மே 2ஆம் திகதி நிர்வாக இயக்குனர் ஈ.சரவணபவன், ஆசிரியர் வி.கானமயில்நாதன்ஆகியோரின் அழைப்பில் சேர்ந்தேன். அலுவலகச் செய்தியாளராக செய்திப் பொறுப்பாளராக செய்தி ஆசிரியராக பணியாற்றினேன். நெருக்கடியான காலகட்டத்தில் துணிச்சலுடன் செய்திகளை வெளியிட்டமைக்காக மிரட்டல்களை எச்சரிக்கைகளை எதிர்கொண்டோம். இறுதியில் உயிராபத்தும் ஏற்பட்டது. நிமலராஜன், சிவராம், நடேசன் உள்ளிட்ட பல ஊடகவியலாளர் படுகொலை செய்யப்பட்டதை நினைவூட்டி வாழ்வதற்கான சூழலே அற்றுப் போய் அச்சத்தில் வாழ்ந்தோம் என்றார்.

உதயன் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், கொல்லப்பட்ட ஊழியர்கள், அரசினால் உதயன் தடைசெய்யப்பட்டமை, 1995 ஆம் ஆண்டில் நிகழ்ந்த பெரிய இடம்பெயர்வின் போது சரசாலையிலிருந்து உதயன் வெளியிடப்பட்டது உட்பட ஊடகவியலாளனாக தான் எதிர்கொண்ட சவால்களை வரிசைக் கிரமமாகக் கூறினார். ஊடகத்துறையின் அனுபவங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ்துளைக்குள் விழுந்த குழந்தை சுர்ஜித் சாவு!

திருச்சி, ஒக்.30

இந்தியாவில் ஆழ்துளைக் கிணற்றுக்குள் விழுந்த சுர்ஜித் (வயது2) என்கிற குழந்தை சாவடைந்தது. அந்தக் குழந்தையை மீட்பதற்காக நான்கு நாள்களுக்கு மேலாகப் பல்வேறு தரப்பினரும் கடும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தாலும் குழந்தையின் சாவே இறுதியில் கைகூடியது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

இந்தியாவின் திருச்சி மாவட்டம் மணப்பாறை பிரதேசத்தில் நடுக்காட்டுப்பட்டி எனும் கிராமத்தில் வீட்டுத் தோட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை(25ஆம் திகதி) விளையாடிக்கொண்டிருந்த 2 வயதுக் குழந்தை அங்கிருந்த ஆழ்துளைக் கிணற்றுக்குள் தவறி விழுந்தது. உடனடியாகத் தீயணைப்புத் துறைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு அங்கு விரைந்து சென்ற பணியாளர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

குழிக்குள் விழுந்த குழந்தை முதலில் 15 அடி ஆழத்தில் சிக்கியிருந்தது. பின்னர் 30 அடி ஆழத்துக்கு அப்பால் சென்றது.

இதனால் குழந்தையை மீட்பதில் சிரமம் ஏற்பட்டது. ஆழ்துளைக் கிணற்றில் விழுபவர்களை மீட்கும் பணியில் தேர்ந்தவர்கள் வரவழைக்கப்பட்டு, மீட்புக் கருவிகளைப் பயன்படுத்தி இரவு, பகல் பாராது குழந்தையை மீட்கும் பணி நடந்தது.

மறுநாள் குழந்தை குழிக்குள் 70 அடி ஆழத்துக்கு அப்பால் சென்றது. இப்போது சிறுவனின் இதயத் துடிப்பைக் கேட்க முடியவில்லை



என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் குழந்தை விழுந்துள்ள குழிக்கு அருகில் இன்னொரு குழி தோண்டுவதற்கு முடிவெடுக்கப்பட்டது. அதற்கான இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டன. 3 நாள்களாகச் சிறுவனை மீட்பதற்கான குழியைத் தோண்டும்பணி வேகமாக நடந்துவந்தது. இந்த நிலையில் குழந்தை குழிக்குள் 88 அடி ஆழத்துக்குக் கீழே சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பல்வேறு துறைசார் நிபுணர்கள், பணியாளர்களின் கூட்டுமுயற்சியாகக் குழந்தையை மீட்பதற்கான பணிகள் தொடர்ந்தன.

இந்த நிலையில் நேற்று அதிகாலை காலை 4.30 மணி அளவில் 88 அடி ஆழத்திலிருந்த குழந்தை சாவடைந்த நிலையில் மீட்கப்பட்டது. மீட்கப்பட்ட உடல் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

உடற்கூறாய்வுக்குப்பின் அரசியல் தலைவர்கள் பலரும் சிறுவனின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். பின்னர் உடல் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தால் தமிழகம் முழுதும் சோகத்துக்குள் புதைந்தது.



## சுர்ஜித் சாவு குறித்து பிரபலங்கள் கருத்து

குழந்தை சுர்ஜித் சடலமாக மீட்கப்பட்டமை மிகுந்த மன வேதனையை அளிக்கிறது என்று தமிழக முதல்வர் எடாப்பாடி பழனிசாமி இரங்கல் தெரிவித்தார். ஓடி விளையாட வேண்டிய சின்னஞ்சிறு சுஜித்தை மயானத்துக்குக் கொண்டு போய் விட்டது அ.தி.மு.க. அரசு என, தி.மு.க தலைவர் மு.க.ஸ்ராலின் குற்றம்சாட்டினார். அதேவேளை அரசின் மெத்தனப்போக்கே குழந்தையின் சாவுக்குக் காரணம் என்றும் ஸ்ராலின் தெரிவித்தார். குழந்தையின் மறைவு குறித்து காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி இரங்கல் தெரிவித்தார். குழந்தை சுஜித் இறந்ததற்காக வருந்துகிறேன் என்றும் துக்கமடைந்துள்ள பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் இரங்கல்கள் என்றும் அவர் கூறினார். சுஜித்தின் உலகில் நாம் அனைவருமே குற்றவாளிகள் என்று தி.மு.க. இளைஞரணிச் செயலர் உதயநிதி ஸ்ராலின் தெரிவித்தார்.

ஆழ்துளை குழிகளில் நிகழும் சாவில் இதுவே கடைசியாக இருக்கட்டும். தனது உயிரைக் கொடுத்து சுஜித் கற்றுத் தந்திருக்கிற பாடத்தை அனைத்துத் தரப்பினரும் இனியாவது கடைப்பிடிக்க வேண்டும் என்று அ.ம.மு.க பொதுச் செயலர் டிடிவி தினகரன் தெரிவித்தார். சுஜித்தின் இழப்பைத் தாங்க முடியாமல் அவனது பெற்றோர் அனுபவிக்கும் வலிகளை உணர்ந்து கொள்ள முடிகிறது.

அவர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்தில் இனியும் இது போன்ற நிகழ்வுகள் நடக்காத வண்ணம் தடுக்க, பயனில்லாத ஆழ்துளைக் கிணறுகளை மூட வேண்டியது குறித்த விழிப்புணர்வு மக்களிடம் ஏற்படுத்தப்படவேண்டும். தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் உள்ளிட்ட அமைப்புகள் இணைந்து ஆழ்துளையில் சிக்கிக் கொண்டவர்களை மீட்பதற்கான தொழில்நுட்பத்தை உருவாக்க வேண்டும் என்று பா.ம.க. இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார். இவ்வாறாகக் குழந்தை சுஜித்தின் சாவு குறித்து இந்திய அரசியல் பிரபலங்கள் பலரும் தமது கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.





## இன்றைய நாள்

**மேடம்:** முக்கியஸ்தர் ஒருவரை சந்திப்பீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் புதிய பரிமாணம் ஏற்படும். பண பரி வர்த்தனை திருப்திகரமாகும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நிறை வேற்றுவீர்கள்.

**இடபம்:** உறவினர்களின் உதவி கிடைக்கும். உற்சாகமுடன் பணி புரிவீர்கள். தொழில், வியாபாரம் வியப்பூட்டும் அளவில் வளர்ச்சி பெறும். பண கடன் செலுத்துவீர்கள். உடல் ஆரோக்கியம் பலம் பெறும்.

**மிதுனம்:** போட்டி, பந்தயத்தில் ஈடுபட வேண்டாம். நட்பின் பெருமையை பாதுகாப்பது நல்லது. தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு அவசியம். அளவான பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** செயல் தாமதம் ஆவதால் சஞ்சலம் கொள்வீர்கள். நண்பரின் ஆலோசனை தொழில், வியாபாரம் செழிக்க பயன்படும். மிதமான அளவில் பணம் கிடைக்கும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளலாம்.

**சிம்மம்:** உங்களின் வெகுநாள் முயற்சி இனிதே நிறைவேறும். தொழில், வியாபாரத்தில்வளர்ச்சி பணி முன்னேற்றம் தரும். சராசரியைவிட பணவரவு அதிகரிக்கும்.

**கன்னி:** உங்களின் செயல் திறன் கண்டு சிலர் பொறாமைப்படுவர். தொழில், வியாபாரத்தில் குறுக்கீடு வரலாம். சேமிப்பு பணம் அத்தியாவசிய செலவுக்கு பயன்படும்.

**துலாம்:** செயல்களில் சீர்திருத்தம் மேற்கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி உரு வாகும். பண பரிவர்த்தனையில் முன்னேற்றம் ஏற்படும்.

**விருச்சிகம்:** சொந்த நலனில் அக்கறை வளரும். தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேற அவகாசம் தேவைப்படும். பண செலவு அதிகரிக்கும். விஷ பிராணிகளிடம் விலகுவதால் சிரமம் தவிர்க்கலாம்..

**தனுசு:** பழகுபவர்களிடம் மதித்து நல்அன்பு பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு எளிதாக நிறைவேறும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும்.

**மகரம்:** பொது நல சிந்தனையுடன் செயல்படுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து வளரும். அபரிமிதமான அளவில் பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:** இடையூறு செய்பவரை உணர்ந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற புதிய யுக்தி பயன்படுத்துவது நல்லது.

**மீனம்:** மனதில் குழப்பம் உருவாகலாம். நண்பரிடம் நிதானித்து பேசுவது நல்லது. தொழிலில் பணி சுமையை குறைக்கும் அளவில் பணி புரிய வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### அக, புறச்...

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி. விக்னேஸ்வரன்.

நேற்று அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

அரச தலைவர் தேர்தல் நடைபெறுவதற்கு ஏறத்தாழ இரு வாரங்களே இருக்கின்றன. நாளை தபால் மூல வாக்களிப்பு நடக்கவுள்ளது. வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் தமது வாக்குகளை அளிப்பது தொடர்பாக தமிழ் மக்கள் கூட்டணியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் நோக்கில் இந்த அறிக்கையை வெளியிடுகின்றோம்.

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு மாகாண பல்கலைக்கழக மாணவர்களின் ஒத்துழைப்புடன் ஆறு அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து தொடர்ச்சியான கலந்துரையாடல்களின் பின்னர் 13 கோரிக்கைகளை உள்ளடக்கிய ஆவணம் ஒன்றைத் தயாரித்திருந்தோம். அந்த ஆவணத்தில் ஐந்து கட்சிகள் ஒப்பமிட்டு முக்கிய அரச தலைவர் வேட்பாளர்களுக்கு அதன் பிரதியும், மொழி பெயர்ப்பும் அனுப்பி வைக்கப்பட்டன.

தமிழ் மக்கள் சார்பில் முன்வைக்கப்பட்ட இந்த 13 அம்சக் கோரிக்கைகளையும் வேட்பாளர்கள் பரிசீலிக்க வேண்டும் என்றும் அவற்றை நிறைவேற்றுவது தொடர்பில் அவர்களுடன் பேசுவதற்கு தயாராக இருக்கின்றோம் என்றும் நாம் அறிவித்திருந்தோம். ஆனால், எந்த பிரதான கட்சிகளின் முக்கிய சிங்கள அரச தலைவர் வேட்பாளர்களும் இந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில் எம்முடன் பேசுவதற்கு முன்வரவில்லை.

எமது கோரிக்கைகள் தொடர்பில் இனவாதக் கருத்துக்களை முன்வைத்து பேரினவாத சக்திகளைத் திருப்திப்படுத்தி சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் ஒரு குறுகிய அரசியலில்தான் முக்கிய சிங்கள வேட்பாளர்கள் அனைவரும் ஈடுபட்டுள்ளார்கள். துரதிஷ்டவசமாக தென்னிலங்கையின் தேர்தல் இயக்கவியலும் முற்றுமுழுதாக மகாவம்ச மனோநிலைக்கு உட்பட்டுள்ளது என்று காண்கின்றோம்.

நாளை 31 ஆம் திகதி தபால் மூல வாக்களிப்பு தொடங்குகின்றது. ஆனால், எமது இந்த நியாயமான கோரிக்கைகளை பரிசீலனைக்கு உட்படுத்தி எம்முடன் கலந்துரையாடலை மேற்கொள்ள எந்தச் சிங்கள வேட்பாளரும் இதுவரை தயாராக இல்லை. அத்துடன் நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை வரை குறிப்பிட்ட ஐந்து தமிழ் கட்சிகளும் கூட ஒரு பொது முடிவுக்கு இதுவரை வரவில்லை என்பதும் கவலைக்குரிய விடயமாகும்.

தமிழ் மக்களின் நியாயமான 13 அம்சக் கோரிக்கைகள் தொடர்பாக பிரதான சிங்களக் கட்சிகள் எம்முடன் பேசக் கூடத் தயாராக இல்லாத சூழ் நிலையில் எந்த ஒரு சிங்கள வேட்பாளருக்கும் வாக்களிக்கும்படி எமது விரலால் சுட்டிக் காட்டுவதற்கான தார்மீக உரிமை எமக்கு இல்லை என்பதே எனதும் எமது கட்சியின் நிலைப்பாடாகும்.

அதேநேரம் ஜனநாயக ரீதியாக தேர்தலில் வாக்களிக்கும் எமது மக்களின் ஜனநாயக உரிமையை நாம் மதிக்கின்றோம். அவ்வுரித்தை எம் மக்கள் பயன்படுத்த விரும்பின் எமது கடந்த கால வரலாறு மற்றும் தற்போதுள்ள அக, புற சூழ்நிலைகளை கவனத்தில் கொண்டு மக்கள் தங்கள் வாக்குகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கருதுகின்றோம்.

எம்மால் முன்வைக்கப்பட்ட 13 அம்சக் கோரிக்கைகளை பிரதான சிங்கள வேட்பாளர்கள் கவனத்தில் கொள்ளாத இத்தகைய சூழ்நிலையில் அவற்றை நாமே கை விட்டு எமது சகோதரக் கட்சிகள் எந்த ஒரு முக்கிய கட்சி வேட்பாளருக்குக் களம் அமைத்து, கூட்டங்கள் கூட்டி, வெளிப்படையாக வாக்குக் கேட்க மாட்டார்கள் என நம்புகின்றோம்.

13 அம்சக் கோரிக்கைகளை பிரதான கட்சிகளின் சிங்கள அரச தலைவர் வேட்பாளர்கள் கவனத்தில் கொள்ளவில்லை என்றாலும், எமது அரசியல் நடவடிக்கைகளை இந்த கோரிக்கைகளின் அடிப்படையில் நாம் முன்னெடுத்துச் செல்வதில் உறுதியாக உள்ளோம்.

பன்னாட்டுச் சமூகம் இனிமேலும் இலங்கை அரசின் போலி வாக்குறுதிகளுக்கும் ஏமாற்று வித்தைகளுக்கும் ஏமாந்து போகாமல் தமிழ் மக்களுக்கு எதிரான இனப் படுகொலைக்கு நீதியை பெற்றுகொடுப்பதற்கும் இணைந்த வடக்கு கிழக்கில் சுயநிர்ணய அடிப்படையில் தீர்வைப் பெற்று கொடுப்பதற்கும் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கோருகின்றோம் என்றுள்ளது.

அதேவேளை, கடந்த மாதம் 28ஆம் திகதி வெளியிட்ட கேள்வி பதில் அறிக்கை ஒன்றில், சஜித் அரச தலைவர் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமை எனக்கு தனிப்பட்ட மகிழ்ச்சியை ஊட்டுகின்றது. அவர் இளம் வயதினர். கொழும்பு றோயல் கல்லூரியில் தாராள மனப்பாங்குடன் ஆரம்பக் கல்வியைப் பெற்றவர். அவை அவருக்கு வாழ், மற்றையவரையும் வாழ விடு என்ற மனோநிலையைக் கொடுத்திருக்கும் என்று நம்புகின்றேன் என்று க.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த மாதம் 30 ஆம் திகதி க.வி.விக்னேஸ்வரன் வெளியிட்டிருந்த கேள்வி பதில் அறிக்கை ஒன்றில், கோத்தபாயவைப் பொறுத்தவரையில் பெரும்பான்மைச் சிங்கள வாக்குகளை அவரே பெறுவார். தமிழர்கள் எவருக்கும் வாக்களிக்காது விட்டால் கட்டாயம் கோத்தபாயவே வெல்வார். சஜித் எந்தவித நன்மையைப் பெற்றுத் தருவேன் என்று கூறாது விட்டுத் தமிழர்கள் எவருக்கும் வாக்களியாது விட்டால் அது கோத்தபாயவுக்கே நன்மையாகப் போய்விடும் என்று கூறியிருந்தார். (எ)

### பௌத்த...

லங்கள் மற்றும் டபிள்யூ.இ.வெருடுவகே சார்பாக சட்டத்தரணி தர்சன வேருவுககே யால் நேற்றுமுன்தினம் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சரான அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, இராணுவ தளபதி சவேந்திர சில்வா, பதில் பொலிஸ்மா அதிபர் விக்ரமரத்ன, முல்லைத்தீவு மற்றும் உப்புவேளி, ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், அமைச்சர் காமினி ஜெயவிக்ரம பெரேரா, புத்த சாசன அமைச்சர் சஜித் பிரேமதாச, புத்த சாசனத்துறை பணிப்பாளர் ஆகியோர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள பௌத்த ஆலயங்கள், பாரம்பரியம்மிக்க தொல்பொருள் இடங்கள் ஒரு செயன்முறை அடிப்படையில் அழிக்கப்பட்டு வருகிறது என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச தலைவர் வேட்பாளர்களுக்கு சமர்ப்பிக்க தமிழ் அரசியல் கட்சிகள் தயாரித்த 13 அம்ச கோரிக்கையிலும் பௌத்த சின்னங்களை அகற்றுவது குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் வடக்கு, கிழக்கிலுள்ள பௌத்த வழிபாட்டிடங்களின் நிலைமை ஆபத்தாகியுள்ளது. 13 அம்ச கோரிக்கை நிறைவேற்றப்பட்டால் வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில் பௌத்த பாரம்பரியத்துக்கு ஆபத்து ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் பௌத்த வழிபாட்டிடங்களையும் பாரம்பரியத்தையும் பேண ஒரு செயன்முறையை தயாரித்து நடைமுறைப்படுத்த அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. (எ)

### கட்டுப்...

தாக்கல் செய்யாத பலர் கட்டுப்பணத்தை மீளளிக்குமாறு கோரியிருந்தனர்.

இது தொடர்பில் ஆராய்ந்த தேர்தல்கள் ஆணைக்குழு கட்டுப்பணத்தை மீளக் கொடுப்பதில்லை என்று தீர்மானித்துள்ளது.

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதானால் அங்கீகரிக்கப்பட்ட கட்சியின் வேட்பாளர்கள் 50 ஆயிரம் ரூபாவும், அங்கீகரிக்காத கட்சி மற்றும் சுயேச்சைக் குழுக்களின் சார்பில் போட்டியிடுவோர் 75 ஆயிரம் ரூபாவும் செலுத்த வேண்டும். (எ-105)

### காலாவதியான...

பட்டன. அதனால் எழுந்த புகையால் அந்தப் பகுதி மக்கள் ஒவ்வாமைக்கு உள்ளானார்கள்.

அது தொடர்பாக யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு அறிவித்து மாநகர சபைத் தீயணைப்புப் பிரிவு அங்கு சென்று தீயை அணைத்தது.

இதனைக் கண்டித்து நேற்றுக் காலை அந்தப் பகுதி மக்கள் அந்த அலுவலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினர்.

“இந்தத் துறைக்குப் பொறுப்பானவர்கள் பொறுப்பற்ற விதத்தில் பதிலளிக்கின்றனர். பொறுப்பானவர்கள் நேரில் வந்து உரிய நடவடிக்கை எடுக்கும் வரையில் அலுவலகத்துக்குள் செல்ல எவரையும் அனுமதிக்க மாட்டோம் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அதன்பின்னர் மாகாணப் பணிப்பாளர் மற்றும் உதவிச் செயலாளர் ஆகியோர் சம்பவ இடத்துக்கு வந்தனர். இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அந்த வளாகத்தில் கொட்டப்பட்டிருந்த காலாவதியான மருந்துப் பொருள்கள் அகற்றப்படும் என்றும் அவர்கள் உறுதியளித்தனர். அதன்பின்னர் மக்கள் கலைந்து சென்றனர்.

அதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக உடன் விளக்கமளிக்க வேண்டும் என்று மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி எழுத்தில் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-105)

### நம்பி...

டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய பாதுகாப்பு குறித்து எவ்வித அனுபவங்களும், திறமைகளும் தற்போதைய அரசில் எவருக்கும் கிடையாது. தேசிய உற்பத்திகளை மேம்படுத்துவதற்காகவே தேர்தல் கொள்கைப் பிரகடனத்தில் விவசாயத்துக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பிரதான ஜீவனோபாய உற்பத்தியான விவசாயத்துக்கு உரிய நிலை வழங்கப்படும். எந்தக் காரணிகளுக்காகவும் விவசாய உற்பத்திகளை இரண்டாம் பட்சமாக்கமாட்டேன். வீழ்ச்சியடைந்துள்ள தேசிய உற்பத்திகள் அனைத்தும் ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்துக்குள் மேம்படுத்தப்படும்.

வீழ்ச்சியடைந்துள்ள விவசாயத்தை மீள் கட்டியெழுப்ப விவசாயிகளை அடிப்படையாகக் கொண்ட செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

இலவச உரமானியம் வழங்கப்படுவதுடன், விவசாயிகளுக்காக இலகு கடன் வசதிகளும் வழங்கப்படும் . விவசாயத்தை அடையாளமாகக் கொண்டு பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் விவசாயத்துறையில் பயன்படுத்திய தொழில்நுட்ப முறைமைகள் அனைத்தையும் எமது நாட்டு விவசாயத்துறையிலும் இலவசமான முறையில் செயற்படுத்துவோம் - என்றார். (எ-22)

### தாயின்...

அவர்களைக் கிணற்றுக்குள் வீசி விட்டுத் தானும் கிணற்றுக்குள் குதித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நடந்துள்ளது. உதயகுமார் பவித்திரன் (வயது-2), உதயகுமார் சந்துசா (வயது-4) ஆகிய சிறார்களே உயிரிழந்துள்ளனர். உதயகுமார் ஊர்வசி (வயது-24) மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றார்.

ஊர்வசியின் கணவர் உதயகுமார் கடந்த 8ஆம் திகதி இலுப்பைக் குளத்தில் நடந்த விபத்தில் உயிரிழந்தார். அவர் செலுத்திய உந்துருளி கட்டுப்பாட்டை இழந்து இந்த விபத்து நடந்திருந்தது.

ஊர்வசி பட்டிக்குடியிருப்பில் உள்ள வீடொன்றில் வசிக்கின்றனர். கணவனை இழந்த பின்னர் ஊர்வசி விரக்தியடைந்த நிலையில் இருந்தார் என்று உறவினர்கள் கூறுகின்றனர்.

நேற்றுக் காலை வித்தியாசமான சத்தம் கேட்டு அயலில் உள்ள வீடொன்றில் இருந்தவர்கள் வந்து பார்த்தபோது குழந்தைகளைக் கிணற்றுக்குள் வீசிவிட்டு ஊர்வசி தானும் கிணற்றுக்குள் குதிப்பதனை அவதானித்தனர் என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பாக நெடுங்கேணிப் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் வந்த பின்னரே கிணற்றில் இருந்தவர்கள் மேலே எடுக்கப்பட்டுள்ளனர்.

கிணற்றில் இருந்து மீட்கப்படும்போதே பவித்திரன் உயிரிழந்த நிலையில் காணப்பட்டார். சந்துசாவும், ஊர்வசியும் மீட்கப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். ஆனால் மருத்துவமனை கொண்டு செல்ல முன்னரே சந்துசாவும் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நெடுங்கேணிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-110,ரி4,110,105)

### வவுனியா...

நடத்தப்படவுள்ள பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகவே அவர் வரவுள்ளார். இந்தக் கூட்டம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-110)

### மன்...

செயலர், பிரதேச செயலர், தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், பங்குத் தந்தைகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.30
வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மனோகரா விளையாயட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 வீரர்கள் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழக அணிக்கும், கொற்றவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவு செய்ய ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் கொற்றவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி 4: 2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்று மொரு ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக அணிக்கும், நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணிகளும் 2 கோல்களைப் பதிவு செய்ய ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது. இதனால் சம நிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி 4: 2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.30
வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 வீரர்கள் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று புதன் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சக்திவேல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது . (23)




# இளவாலை புனித ஹென்றியரசர் பழைய மாணவர் அணி இரண்டாமிடம்

யாழ்ப்பாணம், ஒக்.30
கொழும்பு சாகிராக் கல்லூரிஅழைக்கப்பட்ட பழைய மாணவர் சங்கங்களுக்கு இடையில் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் பிளேட் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி பழைய மாணவர் அணி இரண்டாம் இடத்தை தனதாக்கியது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு சாகிராக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி பழைய மாணவர் அணி அரையிறுதியாட்டத்தில் கொழும்பு றோயல் கல்லூரி பழைய மாணவர் அணியை 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்தில் கமித் அல்குசையின் கல்லூரி பழைய மாணவர் அணியுடன் மோதியது. இதில் கமித் அல்குசையின் கல்லூரி பழைய மாணவர் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இறுதியாட்டத்தில் சிறந்த வீரராக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி பழைய மாணவர் அணி அன்ரனி கிளாறன்ஸ் தெரிவு செய்யப்பட்டார். (23)

## கூடைப் பந்தாட்டத்தின் இறுதி ஆட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.30
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபை நடத்தும் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான அழைக்கப்பட்ட 20 வயதுப் பிரிவு பாடசாலை கூடைப் பந்தாட்ட ஆண், பெண் இருபாலருக்குமான கூடைப் பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டங்கள் இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்டத்திடலில் இடம்பெறவுள்ளது.

இதில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம் பெறும் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது.

மாலை 4. மணிக்கு இடம் பெறும் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது.

இறுதிநாள்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் வைத்தியர் சிறீதரன் கலந்து கொள்ளவுள்ளார். (23)

## முதல்தர வீரர்களுக்கு புதியஒப்பந்த முறை

கங்குலி நம்பிக்கை

இந்தியா-பங்களாதேஷ் அணிகள் இடையிலான 2ஆவது மற்றும் இறுதி டெஸ்ட் போட்டியை பகல்இரவு டெஸ்ட் போட்டியாக நடத்த இந்திய கிரிக்கெட் சபை முயற்சித்து வருகிறது. இது குறித்து இந்திய கிரிக்கெட் சபை சார்பில் பங்களாதேஷ் கிரிக்கெட் சபைக்கு கடிதம் அனுப்பப்பட்டு உள்ளது. பங்களாதேஷ் கிரிக்கெட் சபை இந்தத் திட்டத்துக்கு இன்னும் சம்மதம் தெரிவிக்க வில்லை. பகல் இரவு டெஸ்ட் போட்டிக்கு பங்களாதேஷ் சம்மதம் தெரிவிக்கும். இதுகுறித்து வங்காளதேச கிரிக்கெட் சபைத் தலைவருடன்பேசி இருக்கிறேன். அவர்கள் வீரர்களுடன் கலந்து பேசி இது குறித்து அதிகாரபூர்வமாக விரைவில் அறிவிப்பார்கள் என்று இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் கங்குலி நம்பிக்கை தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

முதல் தர கிரிக்கெட் வீரர்களுக்கு ஒப்பந்த முறை கொண்டுவரப்படும். புதிய நிதி ஒப்பந்த முறை குறித்து திட்டம் உருவாக்கும் என்றார்.

## கால்பந்தாட்டப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.30
மன்னார் கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான எடிசன் சுற்றுக் கிண்ணத்துக்கான தொடரின் லீக் முறையிலான ஆட்டங்கள் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் ஜோசவாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் சனிக்கிழமை இடம்பெற்ற அந்தோனியார்புரம் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும், சென். லூட்சியா பாடசாலை அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணிகளும் எந்தவித கோல்களையும் பதிவு செய்யாது போக ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஜோசவாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக் கழக அணிக்கும், நானாட்டான் றியல் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஜோசவாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

காத்தான்குளம் சென்.ஜோசப் விளையாட்டுக் கழக அணிக்கும், சென்.லூட்சியா விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சென். லூட்சியா விளையாட்டுக் கழக அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் எருக்கலம்பிட்டி ஸ்டார் லையின்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும், பாலக்குழி டிலாசால் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பாலக்குழி டிலாசால் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

காத்தங்குளம் சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணிக்கும், பாலக்குழிடிலாசால் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவு செய்ததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

பள்ளிமுனை சென்.லூட்சியா விளையாட்டுக்கழக அணிக்கும், எருக்கலம்பிட்டி ஸ்டார் லையின்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும், இடையிலான ஆட்டத்தில் பள்ளிமுனை சென். லூட்சியா விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஜோசவாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக் கழக அணிக்கும்,அந்தோனியார்புரம் சென்.அன்ரன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அந்தோனியார்புரம் சென்.அன்ரன்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டோனி ஓய்வு?

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் டோனியின் ஓய்வு குறித்த 'ஹேஷ்டேக்' ருவிற்றரில் பிரபலமாகி வருகின்றது.

டோனி இரண்டு முறை இந்தியாவுக்கு உலகக் கிண்ணத்தை வென்று கொடுத்த அணித் தலைவர். தற்போது கிரிக்கெட்டில் விளையாடாமல் உள்ளார்.

பங்களாதேஷ் அணிக்கெதிரான இந்திய அணி அறிவிக்கப்படும்போது, டோனியை நாங்கள் கடந்து வந்து விட்டோம் என தேர்வுக்குழு தலைவர் பிரசாத் தெரிவித்திருந்தார். இதனால் டோனி இனிமேல் அணிக்கு திரும்பினாலும், அது அவரின் வழியனுப்பும் தொடராகத்தான் இருக்கும் என கூறப்படுகிறது.

இந்நிலையில் நேற்றுக் காலையில் இருந்து ருவிற்றரில் டோனியின் ஓய்வு என்ற ஹேஷ்டேக் பிரபலமாக பேசப்பட்டு வருகிறது.



10ஆவது முறையாக

# சம்பியனானார் ரோஜர் பெடரர்

சுவிஸ் பகிரங்க ரென்னிஸ் தொடரில், நட்சத்திர வீரர் ரோஜர் பெடரர் 10ஆவது முறையாக கிண்ணம் வென்று சாதனை படைத்தார்.

இறுதிப் போட்டியில் உலக ரென்னிஸ் தரவரிசைப் பட்டியலில் 18ஆவது இடத்தில் உள்ள ஆஸ்திரேலியாவின் 20 வயதான அலெக்ஸ் டி மினாரை எதிர்கொண்ட பெடரர் 6:2, 6:2 என்ற நேர் செற்களில் மிக எளிதாக வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

பெடரர் ஒரே தொடரில் 10 முறை சம்பியன் பட்டம் வெல்லும் சாதனையை அவர் 2ஆவது முறையாக நிகழ்த்தியுள்ளார்.

முன்னதாக, ஜேர்மனியில் நடைபெற்ற ஹாலே தொடரில் அவர் 10 முறை கிண்ணத்தை கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

ஆட்ட நிர்ணய சதியால்

## சகீப் அல் ஹசன் இந்தியத் தொடரில் இடம்பெறுவது சந்தேகம்

பங்களாதேஷ் அணியின் மூத்த வீரர் சகீப் அல் ஹசன் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் ஊழல் குறித்து அறிவிக்காதமைக்காக அவருக்கு எதிராக தடைகள் விதிக்கப்படலாம் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பங்களாதேஷ் அணிக்கான பயிற்சியில் சகீப் அல் ஹசன் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐசிசியின் உத்தரவின் பேரிலேயே சஹீப் அல் ஹசன் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது என பங்களாதேஷின் நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.




இதன் காரணமாகவே அவர் பயிற்சிகளில் ஈடுபடவில்லை. அணியின் கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இரண்டு வருடங்களுக்கு முன்னர் பன்னாட்டுப் போட்டியொன்றின் போது ஆட்டநிர்ணய சதியில் ஈடுபட்ட ஒருவர் சஹீப் அல் ஹசனுக்கு பணம் வழங்க முன்வந்தார் இதனை சஹீப் நிர்வாகத்துக்குத் தெரியப்படுத்தவில்லை.

இதனை அவர் சமீபத்தில் ஐசிசியின் ஊழல் விசாரணை பிரிவினருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் ஏற்றுக்கொண்டுள்ளார் என்று அந்த நாளேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## ஆஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்களின் கழுத்து, தலை பகுதியைத் தாக்குங்கள்

பாக். பந்து வீச்சாளர்களுக்கு அக்தர் அறிவுரை

ஆஸ்திரேலியா தொடரின் போது துடுப்பாட்ட வீரர்களின் தலை மற்றும் கழுத்துப் பகுதியைக் குறிவைக்க வேண்டும் என பாகிஸ்தான் முன்னாள் பந்து வீச்சாளர்களுக்கு அக்தர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. பாகிஸ்தான் அணியில் இடம் பிடித்துள்ள வேகப்பந்து வீச்சாளர்களில் மூன்று பேர் 19 வயதுக்குட்பட்டோர். இதனால் பாகிஸ்தான் பந்து வீச்சு ஆஸ்திரேலியாவில் எடுபடுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்த நிலையில் ஆஸ்திரேலியா மண்ணில் நாம் அபாயகரமான பந்து வீச்சாளர்கள் என்பதை பாகிஸ்தான் இளம் வீரர்கள் அசத்தலான பந்து வீச்சால் தெரியப்படுத்த வேண்டும் என அக்தர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர்கள் ஆஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்களின் தலை மற்றும் கழுத்தை குறிவைக்க வேண்டும். இந்த நோக்கம் மிகமிக முக்கியமானது. ஒவருக்கு இரண்டு பந்துகளை துடுப்பாட்ட வீரரின் கழுத்து மற்றும் தலையின் பக்கவாட்டை தாக்க வேண்டும்.

அணித் தலைவர் பந்து வீச்சாளர்களை இலக்குகளை மட்டுமே வீழ்த்தும் நோக்கத்தில் பந்து வீசும்படி கொண்டு செல்லக்கூடாது. பாதுகாப்பான அணித் தலைவரை நான் விரும்பியதில்லை -என்றார்.

## ஆஸி – இலங்கை 2ஆவது ரி–20 இன்று

இலங்கை - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 2ஆவது ரி-20 போட்டி இன்று பிரிஸ்போர்ன் நகரில் இலங்கை நேரப்படி பிற்பகல் 1.40 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. முதலாவது போட்டியில் ஆஸ்திரேலியா அணி அபார வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## ஸோஸோ கோல்ப் தொடரில் டைகர் வுட்ஸ் கிண்ணம் வென்றார்

ஜப்பானில் நடைபெற்ற ஸோஸோ கோல்ப் தொடரில் அமெரிக்க வீரர் டைகர் வுட்ஸ் சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

முழங்கால் மூட்டு அறுவை சிகிச்சை காரணமாக ஓய்வெடுத்து வந்த டைகர் வுட்ஸ், நீண்ட இடைவெளிக்குப் பிறகு களமிறங்கிய ஸோஸோ பி.ஜி.ஏ. தொடரில் முதலிடம் பிடித்தார்.

இது அவர் வென்ற 82 ஆவது பி.ஜி.ஏ. கிண்ணம் ஆகும். இதன் மூலமாக 1965 ஆம் ஆண்டு அமெரிக்காவின் சாம் ஸ்னீட் படைத்த சாதனையை வுட்ஸ் சமப்படுத்தியுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கடந்த கால அணியுடன்

# கோக்லி அணியை ஒப்பிட முடியாது

### அம்லா கணிப்பு

விராட் கோக்லி தலைமையிலான தற்போதைய இந்திய கிரிக்கெட் அணியை கடந்த கால இந்திய அணியுடன் ஒப்பிடுவது நியாயம் அல்ல என தென்னாபிரிக்கா வீரர் அம்லா தெரிவித்துள்ளார்.

விராட் கோக்லி தலைமையிலான இந்திய டெஸ்ட் அணி கடந்த இரண்டு மூன்று வருடங்களாக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது. சமீபத்தில் முடிவடைந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரை இந்தியா 3:0 எனக் கைப்பற்றியது.

சிறப்பாக விளையாடி வரும் கோக்லி அணிதான் தலைசிறந்த இந்திய அணி என்று கூறி வருகின்றனர். இந்த நிலையில் தற்போதுள்ள இந்திய அணியை கடந்த அணியுடன் ஒப்பிடுவது நியாயம் அல்ல என ஹசிம்அம்லா தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

நான் சச்சின், டிராவிட், லஷ்மண், கங்குலி, சேவாக் ஆகியோருக்கு எதிராக விளையாடியுள்ளேன். உலகளவில் இதைவிட சிறந்த துடுப்பாட்ட வரிசை இருக்க முடியாது.

தற்போதுள்ள இந்திய அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது. அவர்கள் ஒரு சீரான அணியாக உருவாகியுள்ளனர். சிறப்பாக விளையாடி வருகின்றனர். ஆனால், சச்சினுக்கு எதிராக விளையாடும் போது, அது சிறந்த அணியாக இருந்தது.

அணில் கும்ப்ளே, ஹர்பஜன் சிங் சிறந்த பந்து வீச்சாளர்கள். நான் கடந்த 10 வருடங்களாக சிறந்த கிரிகெட் வீரர்களுக்கு எதிராக விளையாடியிருக்கிறேன். ஒவ்வொரு அணியையும் ஒப்பிட்டு பார்க்க முடியும் என்றுநான்நினைக்கவில்லை-என்றார்.



# ரி-20 உலகக் கிண்ணாத் தொடருக்கு தகுதி பெற்றது நெதர்லாந்து அணி

உலகக் கிண்ணத் தொடரில் ஐக்கி அரபு எமிரேட்ஸ் அணியை துவம்சம் செய்து ரி-20 உலகக் கிண்ணப் போட்டிக்குத் தகுதி பெற்றது நெதர்லாந்து அணி.

ஐசிசி ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் ஆஸ்திரேலியாவில் அடுத்த வருடம் இடம்பெறவுள்ளது. இந்தத் தொடருக்கான தகுதிச் சுற்று டுபாய் மற்றும் அபுதாபியில் நடைபெற்று வருகிறது. இதில் 12 அணிகள் பங்கேற்றுள்ளன. 12 அணிகளும் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டன. 'ஏ' பிரிவில் இடம் பிடித்துள்ள பப்புவா நியூகினியா ஐந்து வெற்றிகள் பெற்று உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெற்றது.

இந்த நிலையில் இன்று முதல் பிளேஆப் ஆட்டம் ஒன்றில் நெதர்லாந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய ஐக்கிய அரபு எமிரேட்ஸ் 9 இலக்குகளை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றது.

இலகு இலக்குடன் களமிறங்கிய நெதர்லாந்து அணி 2 இலக்குகளை மாத்திரம் இழந்து 81 வெற்றி இலக்கை அடைந்து உலகக் கிண்ணத் தொடருக்கான முதல் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

### டபிள்யூடிஏ ரென்னிஸ் தொடர்:

# நவோமி ஒசாகா விலகல்



தோள்பட்டை காயம் காரணமாக பெண்கள் ரென்னிஸ் சங்கத்தின் இறுதித் தொடரில் இருந்து ஜப்பான் வீராங்கனை நவோமி ஒசாகா விலகியுள்ளார்.

பெண்கள் ரென்னிஸ் சங்கம் சார்பில் தலைசிறந்த முன்னணி 8 வீராங்கனைகளுக்கு இடையில் ஆண்டுதோறும் டபிள்யூடிஏ இறுதித் தொடர் நடத்தப்பட்டு வருகிறது. 8 வீராங்கனைகளும்இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, அதில் வெற்றி பெறுபவர்கள் அரையிறுதிக்கு தகுதி பெறுவார்கள்.

இந்த வருடத்துக்கான இறுதித் தொடர் சீனாவில் உள்ள ஷென்சென்னில் நடைபெற்று வருகிறது. ஒரு பிரிவில் ஜப்பானைச் சேர்ந்த நவோமி ஒசாகா இடம் பெற்றிருந்தார். நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் ஒசாகா பெட்ரா கிவிட்டோவை எதிர்கொண்டார். இதில் கடும் சிரமத்துக்குப் பின்னர் ஒசாகா 4:6, 6:4 என கைப்பற்றி வெற்றி பெற்றார்.

நேற்று இடம்பெறவிருந்த ஆட்டத்தில் ஆஷ்லே பார்தியை எதிர்த்து விளையாடுவதாக இருந்தது. ஆனால், தோள்பட்டை காயம் காரணமாக தொடரில் இருந்து ஒசாகா விலகுவதாக அறிவிக்கப்பட்டது. இதனால் அவருக்குப் பதிலாக கிகி பெர்ட்டென்ஸ் இணைக்கப்பட்டுள்ளார்.

FLC FRENCH LANGUAGE CENTRE
Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட பிரெஞ்ச் Courses
V. Jegan(Trained in France)
40, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 02.11.19 சனி 8 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி 0779 789 456 ஆரம்பம் 04.11.19 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 776
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.10.29
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 59,144,600/-
வெற்றி இலக்கங்கள் 19 30 41 50 U
விசேட வெற்றி இல. 9625

ராசி அதிர்ஷ்டம்
திகதி 29.10.2019 வெற்றி வாரம் 2662 வர்ணம் சிகப்பு
சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 09 17 26 39
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3, 854, 470/=
30.10.2019ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே 011 4824824 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1066
சீட்டிழுப்பு திகதி 2019.10.28 திங்கட்கிழமை
S 05 07 53 55
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 80,867,888/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1616 சீட்டிழுப்பு திகதி 29.10.2019
வெற்றி இலக்கங்கள் 09 11 12 53 K
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ.39. 994. 116 /=

அமெரிக்க லொத்தர் இலவச விசா
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2021ல் நீங்களும் அமெரிக்காவில்..
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
0768226241
V2 Travels
யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240
நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242
திருகோணமலை 0768226237 | மானிப்பாய் 0768226238
சுன்னாகம் 0764550670 | கொடிகாமம் 0764550675
புதுக்குடியிருப்பு 0764550673 | மருதங்கேணி 0764550671
பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960

Auto CAD
Personal & Group Classes
பொறியியலாளர்- படவரைஞர்
கட்டிட கலைஞர்- நில அளவையியலாளர்
தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான
விரைவான சிறப்பு பயிற்சிநெறி
LINK: 076 900 0064 - 071 861 7972

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.